XVI. F.

# பாரதி

2367.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

தமிழ்

எழுத்தாளர்

சங்க வெளியீடு

ஏழாவது

மகாநாட்டு

இதழ்

1959



திரு. டி. எஸ். சொக்கலிங்கம்

GIF
0-,1m8&9:c
J9

திரு. பி. ஸ்ரீ ஆசார்யா



# ஆனந்த விகடன்

# நாடக இலக்கியப் போட்டி

# பரிசு ரூ. 25,000

| தொடர் நாடகம் | |
|---|---|
| முதற் பரிசு | ரூ. 12,500 |
| இரண்டாவது பரிசு | ரூ. 5,000 |
| மூன்றாவது பரிசு | ரூ. 2,500 |

| ஓரங்க நாடகம் | |
|---|---|
| முதற் பரிசு | ரூ. 2,500 |
| இரண்டாவது பரிசு | ரூ. 1,500 |
| மூன்றாவது பரிசு | ரூ. 1,000 |

*நிபந்தனைகள்*

1. போட்டிககு அனுப்பப்படும் நாடகங்கள், தமிழ் நாட்டுச சமூக வாழ்வை அடிப்படையாகக்கொண்டோ அல்லது சரித்திர சம்பநதமான சம்பவங்களை ஆதாரமாகக் கொண்டோ உருவாக்கப்படலாம். ஆனால் சொநத மனோதர்மத்தைக் கொண்டு உரை நடையில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

2. தொடர் நாடகம் 'விகட'னில் 50 பககங்களுக்குக குறையாமலும் 150 பக்கங்களுககு மேல் போகாமலும், ஓரஙக நாடகம 8 பக்கங்களுக்குக் குறையாமலும் 30 பக்கங்களுக்கு மேல் போகாமலும் இருத்தல அவசியம்.

3 ஒரே எழுத்தாளர் ஒன்றுக்கு மேற்பட்ட நாடகஙகளைப் போட்டிக்கு அனுப்பினாலும் ஏற்றுக் கொள்ளப்படும்

4. நாடகங்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில் சுலபமாக வாசிக்குமபடி எழுதப் பெற்றிருக்க வேண்டும்

5 நாடகத்தின் முதல் பக்கததில் தலைப்பிலேயே தொடர் நாடகம அல்லது ஓரங்க நாடகம் என்பதை தவறாமல் குறிப்பிட வேண்டும். நாடகத்தின் கையெழுத்துப் பிரதியை அனுப்பும்போது தபால உறையின் மீது 'ஆனநத விகடன் நாடகப் போட்டி' என்று குறிப்பிட்டு, ''ஆசிரியர், ஆனந்த விகடன், 151, மவுண்ட் ரோடு, சென்னை 2,'' என்ற விலாசத்திற்கு 31—12—58 தேதிக்குள் கிடைக்குமபடி அனுபப வேண்டும்.

6. நாடகததுடன் கூட, அதை எழுதியவர், அது தமது சொந்தக் கற்பனையே என்றும், தமிழிலோ வேறெந்த மொழியிலோ வெளியான நூலின் கருத்தை உள்ளடககியோ அல்லது தழுவியோ எழுதப்படவில்லை என்றும் உறுதிமொழி அனுப்ப வேண்டும.

7. தோந்தெடுககப்படாத நாடகங்களைத் திருமபப் பெற விரும்புவோர அவைகளுடன போதிய தபால தலைகளை அனுப்பிவிட வேண்டும். எதிர்பாராத வகையில் கையெழுததுப் பிரதிகள தவறிப்போக இடம் உண்டாகையால், கைவசம் ஒரு நகல் வைத்துக் கொள்வது அவசியம்

8. பரிசுக்குரிய நாடகஙகள் தவிர, மற்றவைகளில் பிரசுரத்திற்கு ஏற்றவை என்று கருதப்படும நாடகங்கள ''விகட''னில வெளியிடப்படும. அவற்றிறகு வழக்கமபோல் சன்மானமும வழங்கபபடும்.

9. போட்டிககு அனுப்பப் பெறும கையெழுத்துப் பிரதிகளின் முகப்பிலேயே தனியாக ஒரு காகிததுதை இணைதது, அதில் நாடகத்தின் தலைப்பையும, எழுதியவரின முழு விலாசததையும தெளிவாகக குறிதது அனுப்ப வேண்டும, கையெழுததுப் பிரதியின இதர பககங்களில இந்த விவரங்கள எழுதுவதை எழுததாளர்கள் தவிர்க்க வேண்டியது அவசியம.

10. பரிசு பெறும நாடகஙகளை விகடனில பிரசுரிககும உரிமை ஒன்று மட்டுமே விகடனைச் சார்ந்தது. பிரசுரம ஆன பிறகு, புத்தகம் போடுதல், நாடகம் நடித்தல், படம் பிடித்தல் முதலிய மறற உரிமைகள் யாவும அவைகளை இயற்றிய ஆசிரியர்களையே சேரும்.

## தி பி. என். கே. பிரஸ்

பிரைவேட் லிமிடெட்

வடபழனி :: சென்னை - 26

சுத்தமான வேலைப்பாட்டிற்கும்
குறித்த காலத்தில்
கொடுப்பதற்கும்

அச்சு வேலையில்

★

எதுவாயினும் எமது சேவை
**நம்பகமானது**

ப்ளாக் தயாரிப்பு, லித்தோ,
ஆப்செட் பகுதிகளுடன் ஓவியர்
பகுதியும் கொண்டது

போன் : 88851
4 லைன்ஸ்

# பாரதி

மகாநாட்டு இதழ்

★

ஏழாவது தமிழ் எழுத்தாளர் மகாநாடு

*1959 ஆகஸ்டு 1, 2*

(ராஜாஜி மண்டபம், சென்னை)

★

அன்பளிப்பு

தமிழ் எழுத்தாளர் சங்கம்
சென்னை - 2

# சமர்ப்பணம்

கன்னட இலக்கிய மேதை மாஸ்தி வெங்கடேசய்யங்கார் அவர்கள் தொடங்கிவைக்கும் ஏழாவது தமிழ எழுத்தாளர் சங்கத்தின் மகாநாடு கூடும் இச் சமயத்தில் இந்த இதழை நாம் தமிழ் எழுத்தாள ருக்குச் சமர்ப்பிக்கிறோம். எழுத்தாளர்களுடைய சுவைக்கும் சிந்தனைக் கும் விருந்தாகப் புதுசும் பழசுமான பல விஷயங்களைத் தாங்கி வருகிறது இவ்விதழ்.

இலக்கியத் துறையிலும், பத்திரிகைத் துறையிலும் தமிழுககுப் பெருந்தொண்டாற்றியுள்ள திருவாளர்கள் பி. ஸ்ரீ. ஆசார்யா அவர்களை யும், டி. எஸ். சொக்கலிங்கம் அவர்களையும் தமிழ் இலக்கியச் செல்வங் களை பிரெஞ்சு மொழியில் அறிமுகப்படுத்தியுள்ள டாக்டர் ஜீன் ஃபிலி யோஸா அவர்களையும், வங்காள மொழியில் அறிமுகப்படுத்தியுள்ள டாக்டர் சுநீதி குமார சட்டர்ஜி அவர்களையும் கௌரவிக்கும் இம் மகா நாட்டிலே அந்த அறிஞர்களுடைய கட்டுரைகளும், அவர்களைப் பற்றிய கட்டுரைகளும் இடம் பெறறுள்ளன. பிறமொழிச் செல்வங்களைப் பற்றி யும் தமிழ எழுத்தாளர்கள் அறிந்து இன்புற வேண்டும் என்பதற்காக இந்திய மொழிகளில் இரண்டு—கன்னட, மராட்டி மொழிகளைப்பற்றிய —கட்டுரைகள் இதிலே சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்திய இலக்கியத்தின் ஒருமையை வற்புறுத்தும் ஓர் அறபுதமான கட்டுரையும் இதழிலே வெளியாகிறது.

தமிழைப் பற்றியவரையில் பலதுறைகளில் இலக்கியப் பணி புரிந்துவரும் எழுத்தாளாகள் நமக்காகப் பல கட்டுரைகள் எழுதியளித் திருக்கிறார்கள். ஏற்கெனவே பிரசுரமான சில கட்டுரைகளையும் அவற்றின் தகுதியையும் தரததையும் சந்தர்ப்ப விசேஷத்தையும் ஒட்டி மலரில் வெளியிட்டிருக்கிறோம்.

இதழுக்கென்று கட்டுரைகள் எழுதித தந்த அறிஞர்களுக்கும், பழைய கட்டுரைகளைப் பிரசுரிக்க அனுமதி தந்த அறிஞர்களுக்கும், மலர் வெளியாவதற்கு உதவிய பல அன்பர்களுக்கும், விளம்பரங்கள் தந்து தமிழ் எழுத்தாளர் சஙகத்தை ஆதரிக்க முன்வந்தவர்களுக்கும் நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

XVI. F.14



சோ. சிவபாதசுந்தரம்

[இவ் வருஷத்திய மகாநாட்டு வரவேற்புத் தலைவராகிய சோ. சிவபாதசுந்தரம் ஈழத்துத் தமிழர். ஈழகேசரியின் ஆசிரியராகவும், லண்டன் B. B. C.யிலும் பின்னர் சிலகாலம் இலங்கை வானொலியிலும் பணியாற்றியிருக்கிறார். இந்தியப் பிரஜை ஆக விரும்பி இந்தியாவுக்கு வந்து விட்டவர். தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி கோஷ்டியினருடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்.]

# வரவேற்புரை

மதிப்புக்குரிய பெருமக்களே, எழுத்தாளர்களே,

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஏழாவது மகாநாடு தமிழர் நாட்டின் தலைநகரமாகிய சென்னை மாநகரத்திலேயே கூடும் இச் சுபவேளையில், நாற்றிசையிலுமிருந்து இங்கு வந்து குழுமியிருக்கும் சகோதர எழுத்தாளர்களையும், புலமை சான்ற பெருமக்களையும், மற்றும் இலக்கிய நண்பர்களையும் எமது சங்கச் செயற்குழுவின் சார்பிலே வரவேற்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் எல்லோருக்கும் நல்வரவு கூறும் வகையில் எனது வணக்கமும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

பரந்து கிடக்கும் சென்னை ராச்சியத்திலும், அதற்கப்பாலுள்ள மற்றப் பிரதேசங்களிலும் உறையும் தமிழ் எழுத்தாளர்களிற் பெரும்பாலானவர்களும் எமது சங்கத்தில் அங்கத்தவர்களாயிருப்பதால், மற்றைய மாவட்டச் சங்கங்களிற் பலவும், தமிழ் எழுத்தாளரிற் பலரும், நமது எழுத்தாளர் சங்கத்தைத் தாய்ச் சங்கமாகக் கருதி மதிப்புக் கொடுத்து வருவதை நாம் அறிவோம். இந்த நிலையில், சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் மகாசங்கம் என்ற பெருமையுடன், மற்றைய தமிழ் எழுத்தாளர் சங்கங்களையெல்லாம் அரவணைத்து, அகில பாரதத் தமிழ் எழுத்தாளர் சம்மேளனமாக விளங்கவேண்டிய நாள் அதிக தூரத்திலில்லை.

அதற்கு வேண்டிய பூர்வாங்க முயற்சிகள் நடைபெற்று வரு கின்றன என்பதையும் நீங்கள் அறிவீர்கள். அந்த நன்னாளை விரைவில் எதிர்பார்ப்போமாக.

அன்பர்களே, ஆண்டுதோறும் இத்தகைய மகாநாடு ஒன்று கூடுவதன் பலனாக, பல்வேறு திக்குகளிலும் தனித்தனி வசிக்கும் தமிழ் எழுத்தாளரும், இலக்கிய நண்பர்களும், ஓரிடத்தில் ஒரே நாளில் சந்தித்துக் குசலம் விசாரிக்கவும், ஒருவருக்கொருவர் கருத்துப் பரிவர்த்தனை செய்யவும், வாய்ப்புக் கிடைக்கிறது. ஆகவே, இன்று நாம் நம்மைப்பற்றியும் நமது எழுத்தின் தரத் தைப்பற்றியும் இலக்கிய முயற்சிகளைப்பற்றியும், சிந்திக்கவும் பேசவும் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதை எண்ணி மகிழ்ச்சி யடைகிறோம்.

சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் இன்றோடு ஏழு ஆண்டு விழாக்களை நடத்திவிட்டது. ஆண்டுதோறும் நாம் கூடு கிறோம், பேசுகிறோம், தீர்மானங்கள் நிறைவேற்றுகிறோம் ஆனால், இந்த ஏழு ஆண்டுக் காலத்திலே நாம், இலக்கியம் இயற்றும் எழுத்தாளராகிய நாம், காரியபூர்வமாகச் சாதித்துள்ளது என்ன என்று சிந்திக்கவேண்டும். ஸ்தாபன ரீதியாக நான் பேசவில்லை; எழுத்தாளர் என்ற முறையிலே நாம் ஒவ்வொருவரும் தனித்தனி என்ன சாதித்துள்ளோம் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று சொன்னேன். நாம் ஒவ்வொருவரும் ஆண்டுதோறும் முதிர்ச்சி யடைகிறோம்; அனுபவத்தில் புதிய தேட்டத்தைப் பெற்று வருகிறோம்; கருத்துக்களிலும் புதியனவற்றைக் காண் கிறோம். இதில் நாம் சந்தேகப்படவேண்டியதில்லை. நாள் ஆக ஆகக் குழந்தையும் பருவத்தில் முதிர்ச்சியடைவது இயல்புதான். ஆனால், அக் குழந்தையின் வாழ்வும் அதன் செயலும் கொள்கை யும், அக் குழந்தை வாழும் குடும்பத்தையும் சமூகத்தையும் எவ் வளவு தூரம் பாதிக்கிறது, என்ன சூழ்நிலையை வகுத்துக் கொடுக் கிறது, சமூகத்தின் வளர்ச்சிக்கு அக்குழந்தையின் பங்கென்ன என்றெல்லாம் நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஆகையால், ஏழு மகாநாடுகளை நடத்திச் சாதனை கண்ட நமது சங்கம் தமிழ் எழுத்தாளர் உலகையும், தமிழ் இலக்கிய உலகையும் தமிழர் சமுதாயத்தையுமே எவ்வளவு தூரம் கவர்ந்திருக்கிறது, என்ன வகையான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்திருக்கிறது, எழுத்து முயற்சியில் தனிப்பட்ட எழுத்தாளர் சாதனையைத் தவிர கூட்டு முயற்சியில் எத்தகைய சாதனையைச் செய்திருக்கிறோம்; அல்லது இனிமேல் செய்ய எண்ணியிருக்கிறோம் என்றெல்லாம் நாம் ஒவ்வொருவரும் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

சங்க காலத்திலிருந்து இன்று வரை தமிழ் இலக்கியம் நிலை பெற்று வளர்ந்திருக்கிறது என்று நாம் பெருமைப்படுகிறோம். ஆனால், அன்றிலிருந்து இன்று வரை, சுமார் இரண்டாயிரம் ஆண்டு களாக, தமிழ் இலக்கியம் எப்படி வளர்ந்தது, இலக்கிய கர்த்

தாக்கள் என்ன செய்தார்கள், அவர்களை இயக்கிய சக்திகள் எவை, அவர்கள் வளர்ந்த சூழ்நிலை எத்தகையது என்ற செய்திகளை யெல்லாம் கால முறையில் அளவிட்டுத் தருவதற்கு இன்று வரை தகுந்த நூல் எதுவும் எழுதப்படவில்லை. தமிழ் இலக்கிய வளர்ச்சியின் வரலாற்றை இலக்கியப் பண்பின் அளவுகோல் கொண்டே ஆராய்ந்து ஒரு முழு நூல், கருவி நூல், இன்னும் எழுதப்படவில்லை என்பதை அறிஞர்கள் ஒப்புக்கொள்வர். வையாபுரிப் பிள்ளை போன்ற இரண்டொருவர் முயன்றனராயினும் தமிழ் இலக்கியத்தின் முழுப் பரப்பையும் அவர்களால் அளவிடச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அங்கொன்று இங்கொன்றாகக் கட்டுரைகள் சில வெளிவந்துள்ளன; புலவர்களைப்பற்றிய கதைகள் வெளிவந்திருக்கின்றன; நூல்கள் சிலவற்றைப்பற்றிய புகழ் மொழிகள், இலக்கிய நோக்கிலன்றி, ஆராய்ச்சி அளவுகோல் படாத கற்பனையிலெழுந்த வாழ்த்துரைக் கட்டுரைகளாக எண்ணிறந்தன கடந்த சில ஆண்டுகளில் வெளிவந்திருப்பதையும் நாம் அறிவோம். கம்பனும், வள்ளுவனும், இளங்கோவும், பாரதியும் இந்த வகையில் செல்வாக்குப் பெற்றுவிட்டனர். புலவர்களின் கால ஆராய்ச்சிபற்றி இங்கொன்று அங்கொன்றாகச் சில கட்டுரைகளும் வெளிவந்திருக்கின்றன; இவையும் இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்ததைத் தவிரச் சமீபகாலத்தில் எத்தகைய முயற்சியும் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

ஆகையால், தற்காலம் இலக்கியப் பணி செய்யும் நமக்கெல்லாம் பின்னணி ஆதாரமாய், முக்கிய கருவியாக வேண்டப்படுவது தகுதி வாய்ந்த, ஆதாரபூர்வமான, ஆராய்ச்சி அளவுகோல் கொண்டு எழுதப்பட்ட ஒரு தமிழ் இலக்கிய வரலாறு. இந்தப் பணி தனிப்பட்ட ஓர் ஆசிரியரால் நிறைவேற்ற இயலாத காரியமாகையால், பல அறிஞர்கள் சேர்ந்த கூட்டு முயற்சியாகவே எடுத்துக்கொண்டு நிறைவேற்றப்படவேண்டியதாகும். இந்த அவசியமான ஒரு பணியைப்பற்றி நமது சங்கத்தின் எழுத்தாளர் யாவரும் சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

சங்க காலம் முதல் கடந்த நூற்றாண்டின் இறுதி வரை ஏற்பட்டுள்ள இலக்கியப் பரப்பின் வளத்தையும் வளர்ச்சியையும் நிதானித்து அமைத்துக்கொண்ட பின்னர், கடந்த முப்பது அல்லது நாற்பது ஆண்டுக்காலத்தில் புதிய வேகத்துடனும் செறிப்புடனும் முளைவிட்டெழுந்த தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிப் பரப்பை அளவிட்டு, மதிப்புப் போட்டு, நாவல், சிறுகதை, கவிதை, நாடகம் முதலிய துறைகளில் இலக்கிய சாதனைகள் எவ்வளவு தூரம் முன்னேறி யிருக்கின்றன, அந்தச் சாதனைகளுக்கு உரம் கொடுத்து வளர்த்த இயக்கங்கள் எவை, பிறமொழி இலக்கியங்களின் செறிவு எத்தகையது என்பனவற்றை யெல்லாம் தனிப்பட ஆராய்தல் இன்றியமையாதது. இந்த இரண்டாவது முயற்சிக்கு, முன்பு சொல்லிய பண்டைய இலக்கிய ஆராய்ச்சியும் பின்னணியு

மிருந்தால்தான் அதனைக் களனாக அமைத்துக்கொண்டு தமிழ் இலக்கிய வளத்தையும் வளர்ச்சியையும் மறுமலர்ச்சியையும் பூரண மாக நிதானித்துக்கொள்ள முடியும்.

மேற்சொன்ன பணிகள் நிறைவேற்றப்பட்டாலன்றித் தமிழ் இலக்கியப் படைப்புக்களில் நாம் தர நிர்ணயம் காண முடியாது. ஆக்கப் பணியில் ஈடுபட்டுள்ள எழுத்தாளர் யாவரும் தரமுள்ள, நிலை கொள்ளத்தக்க, கால வெள்ளத்தில் அழிவுபடாத இலக்கியத்தை சிருஷ்டிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். தரமுள்ள இலக்கியம் எது என்று தீர்மானிப்பதற்கு நாம் இதுகாறும் அனுபவித்து வந்த தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தையும், பிற மொழிகளும் சமயக் கொள்கைகளும் மற்றும் பண்பாடுகளும் நமக்கு உதவிய நல்ல பண்புகளையும் ஒருமித்து வைத்துப் பார்த்தல் அவசியம். அதன் பின்னரே தர நிர்ணயம் செய்யப்படலாம். பண்டைத் தமிழ் இலக்கியங்களின் பெருமையைப் பற்றிக் கற்பனையில் சொல் லலங்காரம் புனைவதிலும், மேலைநாட்டுச் சரக்கெல்லாம் நாகரிக மானவை என்ற புதுமை மோகத்தில் திளைப்பதிலும் மாத்திரம் திருப்தி காண்பதுடன் நின்றுவிடாமல், தமிழருடைய இலக்கிய பாரம்பரியம் எத்தகைய ஆணிவேரில் உற்பத்தியானது, எத்தகைய உரங்களைப் பெற்றது, என்னென்ன கிளைகளைப் பரப்பியது என்ப வற்றை யெல்லாம் காய்தல் உவத்தலின்றி ஆராய்ந்து காண வேண்டியது அவசியம்.

தமிழ் இலக்கிய பாரம்பரியம் சங்க காலத்திலிருந்து இன்று வரை நிலையாகத் தேங்கிக் கிடந்த ஒரு குட்டையல்ல. தனிவழி யோடிய சிற்றாறுமல்ல. மிகப் புராதன காலத்திலே ஊற்றெடுத் துப் பாய்ந்த நதியில், காலத்துக்குக் காலம் பெருங் கிளை நதிகள் வந்து கலந்து, பெரு வெள்ளமாகப் பாய்ந்த பாரம்பரியம் அது. உபநிடத பாரம்பரியம், சம்ஸ்கிருத காவிய நாடக பாரம்பரியம், பௌத்த சமண சமயங்கள் இறைத்துக் கொடுத்த பாரம்பரியம், இஸ்லாமிய கலாசாரம் கொண்டுவந்துகொடுத்த பாரம்பரியம், ஆங்கில, அல்லது ஐரோப்பிய பாரம்பரியம்—இவையெல்லாம் தமிழருடைய சொந்தப் பாரம்பரியத்துடன் இணைந்து கலந்துவளம் கொடுத்தன என்பதை நாம் ஒப்புக்கொண்டுதா னாகவேண்டும். இந்தச் செறிவுகளை யெல்லாம் புறக்கணித்துவிட்டு, மொழியபி மானம் காரணமாகத் தமிழர்கள் தனித் துறைந்தனர் என்றும்,பிற மொழி, பிற மதம், வேற்று நாட்டுப் பண்பாடுகளை யணைத்துக் கொள்ளவில்லை என்றும் வாதித்தால், தமிழ் வாழவில்லை, வளர வில்லை யென்றுதான் பொருளாகும்.

எழுத்தாளரின் மற்றொரு முக்கிய கடன் தமது கலைப்பணியின் தரத்தை மேலோங்கச் செய்ய வேண்டியது. மக்களுடைய உள்ளம் பக்குவம் அடையவில்லை என்ற காரணத்தால அவர்களின் மேலோட்டமான சிந்தனைக்கு உவப்பளிக்கும் பயனற்ற வேஷ தாரி இலக்கியங்களையும், ஆழமற்ற, அர்த்தமற்ற, சொல்லலங்

காரச் சிருஷ்டிகளையும், இலக்கியம் என்ற போர்வையில் தந்து, மக்களின் மனப்பக்குவத்தை வளர்ப்பதற்குப்பதிலாக, அவர்களின் சிற்றுணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு மாத்திரம் பெருமை கொள்வது ஆக்கப் பணியல்ல, அழிவுப் பணி யென்றுதான் சொல்லவேண்டும். 'காலரி'யைத் தூண்டிவிட்டு அந்த வரிசையி லிருப்பவர்களிடம் 'சபாஷ்' பெறுவதில் ஒரு திருப்தி யுண்டுதான். ஆனால், அது நீர்க்குமிழி போன்ற ஒரு திருப்தி. நிலையற்ற இன்பம். அன்றியும், மக்களைத் தற்போக்கில் செலுத்தும் ஒரு கைங்கரியம். ஜனநாயகம் என்ற போர்வையில், பெருமளவான மக்களைத் திருப்திபடுத்த வேண்டுமென்று ஒரு சில கலைத்துறைகளில் நுழைந்துவிட்ட இந்த மதம், இலக்கியத்துறையையும் ஆட்கொண்டுவிடுமோவென்று அஞ்சுகிறோம். மக்களின், மக்கள் சமுதாயத்தின், மனப் பக்குவத்தை வளர்ப்பதே எழுத்தாளரதும் கலைஞரதும் நோக்கமாயிருககவேண்டுமே யன்றி, அவர்களது கீழ்த்தர உணர்ச்சிகளைத் திருப்திபடுத்த மாத்திரம் வேஷம் போட்டு, பாராட்டுதல் பெற்றுவிட்டால்போதுமென்று நினைப்பது, தவறான கொள்கை யென்பதை, ஆக்கப் பணியில் சிரத்தை கொண்ட எழுத்தாளராகிய நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆகையால், மக்களின் உள்ளத்தை வசப்படுத்துவது வேறு, வழிப்படுத்துவது வேறு என்பதை யுணர்ந்து வழிப்படுத்தும் கொள்கையைக் கடைப்பிடிப்பது நமது கடனாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில், எழுத்தாளராகிய எமது முயற்சிகளையும் ஆக்கங்களையும் அவ்வப்போது எடை போட்டு, நல்லனவற்றைப் பாராட்டித் தீயனவற்றை எடுத்துக் காட்டி, நடு நின்று தீர்மானித்து வரவேண்டியது, இலக்கியப் பத்திரிகைகளை நடத்தும் பெருமக்களாகிய நிர்வாகிகளதும் ஆசிரியர்களதும் முக்கிய கடன் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறோம். நாளுக்கு நாள் தமிழிலே புதிய புதிய புத்தகங்கள் வெளி வருகின்றன. எழுத்தாளர் எழுதிக்கொண்டே வருகின்றனர். ஆனால், அவர்கள் எழுத்துக்களை இலக்கியப் பத்திரிகைகள் விமர்சனம் செய்வது இக்காலத்திலே முயற் கொம்பாகிவிட்டது. இலக்கியப் பத்திரிகைகளெல்லாம் புத்தக விமர்சனத்தை முற்றாக மறந்து விட்டனவோ என்று அஞ்சுகிறோம். உண்மையாக நிலைமையைப் பார்க்கப் போனால், தமிழிலே வெளி வரும் வாரப் பத்திரிகைகளும், மாத சஞ்சிகைகளும், தமது ஒவ்வோ ரிதழிலும் குறைந்தது நான்கு பக்கங்களாவது புத்தக விமர்சனத்துக்கு ஒதுக்கி வைக்கக் கூடிய அளவில் இந்நாளிலே புதிய புதிய நூல்கள் வெளி வந்து கொண்டிருக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால், எல்லாப் பத்திரிகைகளும் இந்த முக்கியமான பணியை மேற்கொள்ளாதிருப்பது வருந்தத் தக்கது. இலக்கியப் பத்திரிகைகள் இந்தப் பணியைச் செய்து வந்தால் புத்தகப் பிரசுரகர்த்தாக்களும் தரமறிந்து நூல்களைத் தெரிவு செய்து வெளியிட ஒரு வாய்ப்பளிக்கும். புதிதாக ஏற்பட்ட பத்திரிகைச் சட்டத்

தின்படி, மேற் சொன்னவாறு புத்தக விமர்சனத்துக்கு நமது பத்திரிகை நிர்வாக நண்பர்கள் சில பக்கங்களை ஒதுக்கி வைப்பார்களானால், கதையல்லாத செய்திகளைத் தாங்கவேண்டிய நிபந்தனையையும் நிறைவேற்றி விடலாம். சட்டத்தைத் திருப்திப் படுத்துவதுடன் அது சிறந்த இலக்கிய சேவையுமாகும். ஆகையால், பத்திரிகை நிர்வாக நண்பர்களை இதுபற்றிச் சிந்திக்க வேண்டு மென்றும் கேட்டுக் கொள்கிறோம்

எமது அழைப்பின் பேரில் இந்த எழுத்தாளர் சங்கத்தின் ஏழாவது மகாநாட்டுக்கு வந்திருக்கும் பெருமக்களே, சகோதர எழுத்தாளர்களே, மீண்டும் உங்களுக்கு வாழ்த்துக் கூறி வரவேற்கிறோம். இந்த மகாநாடு உங்கள் மகாநாடு. ஆகையால், யாவரும் இந்த விழாவில் கலந்து சௌஜன்யத்தை வளர்த்து, எழுத்தாளர் யாவருக்கும் பயனுள்ள கருத்துப் பரிவர்த்தனை செய்து ஆக்கப் பணியின் பரிபூரண இன்பத்தைத் துய்ப்பீர்கள் என்று நம்புகிறேன். இறுதியாக, இம் மாபெரும் சபையை முன்னின்று வரவேற்க என்னைப் பணித்து எனக்கு ஒரு அரிய சந்தர்ப்பத்தை வழங்கிய எமது சங்கத்தின் செயற்குழு நண்பர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மீண்டும் உங்களுக்கு நல்வரவு கூறுகிறேன்.

★

## சோ. சிவபாதசுந்தரம்

### எழுதியுள்ள நூல்கள்

ஒலிபரப்புக் கலை

மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில்

புத்தர் அடிச்சுவட்டில்

[ 'சோமு' என்கிற பெயரில் எழுதும் மீ ப. சோமசுந்தரம் தமிழ் எழுத்தாளர் சங்கத்தலைவர். வானொலியில் பணியாற்றுபவர். சிலகாலம் 'கல்கி' ஆசிரியராகவும் இருந்தார். இப்போது 'நண்பன்' என்கிற மாதப் பத்திரிகையை நடத்தி வருகிறார். கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை என்று பல துறைகளிலும் எழுதியிருக்கிறார். டி.கே.சி. ராஜாஜி போன்ற பல பெரியார்களின் நன்மதிப்பையும் நட்பையும் பெற்றவர்.]



மீ. ப. சோமசுந்தரம்

## தலைமையுரை

"பண்டிதர் ஆவார் பதினெட்டுப் பாஷையும்
கண்டவர் கூறும் கருத்தறி வார் என்க;
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாஷையும்
அண்ட முதலான் அரன்சொன்ன வாறே!"

அன்பும் பண்பும் ஆற்றலும் நிரம்பிய பெரியோர்களுக்கும் தாய்மார்களுக்கும் சகோதரர்களுக்கும் வணக்கம்.

மொழிகள் அனைத்தும் ஆண்டவனால் அருளப்பட்டவை என்று சொன்ன நாடு நம்முடைய தமிழ்நாடு. வார்த்தைகள் நமக்குக் கருவிகளாக விளங்குவது போல், பாஷையும் அதை ஆளுகிற நாமும் இறைவனுடைய கருவிகள் என்று உணர்ந்த பெரியோர்களின் வழியிலே தோன்றியது நம்முடைய எழுத்தாளர் சமூகம்! தமிழுக்குக் கிடைத்த முதல் எழுத்தாளன் முக்கண் முதல்வனே! அவனுடைய வழியானது முருகனிலிருந்து தொடங்கி அகத்தியன் முதலான முனிவர்களின் பரம்பரையிலே வந்திருக்கிறது.

கதைகளும் நம்பிக்கைகளும் ஒருபுறம் இருக்க, அகத்தியர் போன்ற பேரிலக்கிய ஆசிரியர்களும், முருகன் வழிபாட்டிலும் ஏனைய வழிபாடுகளிலும் கலந்து நின்ற பல முனிவர்களும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழில் அமர சாதனைகள் புரிந்து, தமிழ் இலக்கியத்தை மேம்படச் செய்திருக்கிறார்கள் என்பது மொழி வரலாறு.

ஜைனர்களும் பௌத்தர்களும் தமிழில் இயற்றியருளியுள்ள இறவாத புகழுடைய நூல்கள் எத்தனையோ! பிற்காலத்தில் கிறிஸ்துவின் அடியார்களும் அல்லாவின் பக்தர்களும் தமிழுக்கு வழங்கியுள்ள இலக்கியச் செல்வங்கள் பற்பல.

இப்படியாகத் தமிழ்நாட்டில் எழுத்தாளர் பரம்பரை என்பது நீண்ட நெடுங்காலமாக, வரலாற்றுக்கும் எட்டாத வித்திலிருந்துதோன்றி, விரிந்து பரந்து தழைத்துவந்துள்ள பெரியதோர் ஆலமரமாகும்.

தமிழின் இலக்கிய வளர்ச்சியை ஆராய்ந்து அதன் இயல்புகளைக் கூர்ந்து நோக்கி இலக்கணம் கண்ட எழுத்தாளர் பரம்பரையும் மிகவும் தொன்மையானதாகும். மொழியை ஒலியின் வடிவிலே கண்டு, நுட்பமான முறையில் ஆராய்ந்து கூறிய பெருமை நம்முடைய இலக்கண ஆசிரியர்களான முனிவர்களுக்கு உண்டு! தொல்காப்பியரிலிருந்து பவணந்தி முனிவர்வரை இலக்கண எழுத்தாளர்களின் வகையும் தொகையும் நம்முடைய மொழி வரலாற்றின் பெருஞ்சிறப்புக்கள்.

இலக்கியமும் இலக்கணமும் செய்த இந்த முனிவர்களைப் போலவே, இசை நூல்களும் நாடக நூல்களும் இயற்றிய சிகண்டியார், செயிற்றியனர், மதிவாணர், யாமளேந்திரர், அறிவனர், வாய்ப்பினர், பூம்புலியூர் மாமுனி முதலிய பெரியோர்கள் இசையிலும் நாடகத்திலும் தமிழ் எழுத்தாளர்களுக்கு மூதாதையர் ஆவார்கள்.

அன்பர்களே! இந்த நீண்ட பட்டியலை எல்லாம் இங்கே படிக்க முனைந்ததன் நோக்கம், ஸம்ஸ்கிருதம், கிரேக்கம் போன்ற மொழிகளுக்கு எப்படி ஒரு தொன்மையான எழுத்தாளர் பரம்பரை உண்டோ, அப்படியே இன்று நாம் தினந்தோறும் வழங்கிவருகிற இந்தத் தமிழ் மொழிக்கும்

மிகத் தொன்மையான ஒரு பெரிய எழுத்தாளர் பரம்பரையும் மரபும் உண்டு என்பதை ஒப்பிட்டுக் கூறத்தான்!

புதிய ஆக்கங்கள் செய்யப்புகும் எந்தக் கலைஞனும்,

"முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டி ருக்குமிந் நாளின் இகழ்ச்சியும்
பின்னர் நாடு திகழுறு பெற்றியும்"

உணர்ந்து தெளியவேண்டும்! அப்படியானால்தான் பலநூறு ஆண்டுகளாக, உயிர்த் தத்துவத்தோடு இயங்கி வருகிற மொழியைப் பண்பு கெடாமல் வளர்க்க முடியும்.

பழங் கணக்குகளையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டால் போதுமா? நாளும் வளர்கின்ற மொழியில் இந்த நூற்றாண்டின் செல்வம் என்ன, அதன் மதிப்பு எத்தகையது என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டியது எழுத்தாளர்களாகிய நம்முடைய முக்கிய கடமையாகும்.

இந்த மகாநாடு கூடுகிற சூழ்நிலை, தமிழுக்குப் புதிய வாய்ப்புக்கள் தோன்றி வருகிற ஒரு நல்ல தருணமாகும். அரசாங்கமும் அறிஞர்களின் ஒத்துழைப்பும் ஒன்றுகூடி விஞ்ஞானத் துறையிலும், போதனைத் துறையிலும் புத்திலக்கியத் துறையிலும் தமிழுக்குச் சிறந்த வாய்ப்புக்களை வழங்க முன்வந்துள்ள சமயமிது! எனவே, எழுத்தாளர்களின் கடமையும் சேவையும் பலவகைகளிலும் விரிவு அடையும் வண்ணம் நம்முடைய எழுத்துக்களை நாம் வகுத்துக் கொள்ளவேண்டும்.

இக்காலத்தில் எழுத்தாளர்களுக்குப் புதிய புதிய வாய்ப்புக்களை வழங்கி வருவன தமிழ்ப் பத்திரிகைகளே. இவ்வகையில் தமிழ்நாட்டின் பத்திரிகை அதிபர்களும் ஆசிரியர்களும் தமிழுக்குச் செய்துவந்துள்ள தொண்டு மகத்தானது. இந்த அற்புதமான சேவையின் காரணமாகத்தான் தமிழ் நாட்டில் பாரதிக்குப் பிறகு ஒரு கலகியும் ஒரு புதுமைப்பித்தனும் தோன்றிப் புதிய தமிழ் வானின் வண்ணச் சுடர்களாகத் திகழ்கிறார்கள். இவர்களைப் போலவே தமிழுக்குப் புதிய புதிய செல்வங்களைப் பத்திரிகைகள் மூலம் வழங்கிய, வழங்கி வருகிற எழுத்தாளர்கள் மிகப் பலர்.

... பத்திரிகைகள் தவிர, தமிழ்நாட்டுப் பிரசுரகர்த்தர்களும் பல எழுத்தாளர்களுக்கு ஊக்கமும் உதவியும் அளித்துப் பல நூல்களை வெளியிட்டு இலக்கிய வளர்ச்சிக்கு மிக முக்கியமான சேவை புரிந்து வருகிறார்கள்.

இவர்களைத் தவிர நாள்தோறும் தோன்றி வளர்கிற புதிய புதிய எழுத்தாளர்களை எல்லாம் தேடிக் கண்டு பிடித்து அவர்களை ஊக்கப்படுத்தி வருகிற திரைப்படத் துறையினருக்கும் எழுத்தாளர்களாகிய நம்முடைய நன்றி உரியது. இவர்களைப் போலவே நம்முடைய நன்றிக்கு உரியவர்கள், புதிய புதிய நாடகங்களை நடத்தி எழுத்தாளர்களின் நாடகத் திறமைக்கு வாய்ப்பு அளித்து வருகிற நாடகக் குழுவினர்கள்!

இலக்கிய ஆர்வம் ஒன்றையே முக்கியமாகக்கொண்டு இயங்குபவன் எழுத்தாளன்! என்றாலும் எழுத்தாளனுக்கு வழங்கப்படுகிற வாய்ப்புக்களைப் பொறுத்தே இந்த ஆர்வம் தடையின்றி இயங்க முடியும். இந்த வாய்ப்புக்களை அதிகப்படுத்தும் புதிய புதிய கழகங்களும் தோன்றி வருகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் இனி நாம் வளர்க்கவேண்டிய புதிய ஆக்கங்கள் எவை என்று ஓரளவு நினைவுபடுத்திக்கொள்வது அவசியமாகும்.

சிறுகதை இலக்கியம் தமிழில் மிகச் சிறந்த முறையிலே வளர்ந்திருக்கிறது என்று கருதுகிறவர்களில் நானும் ஒருவன். அதுபோலவே நெடுங்கதைகளான நாவல் இலக்கியமும் நன்றாக வளர்ந்திருக்கிறது. ஆனால் நாடகத்துறையில் நாம் செய்யவேண்டிய ஆக்க வேலைகள் பல.

ரேடியோ என்ற ஒலிச்சாதனமும், நாடக அரங்கும், திரைப்படத் துறையும் தமிழில் நாடகங்கள் தோன்றுவதற்குச் சிறந்த வாய்ப்புக்கள் வழங்கியிருக்கின்றன என்பது உண்மை. எனினும் நடிப்பதற்காக எழுதப்படுகிற நாடகங்களைப் போலவே படிப்பதற்காக எழுதப்படுகிற நாடகங்கள் தோன்ற வேண்டும். நாளடைவில் படிக்கவும் நடிக்கவும் கூடிய பண்புகள் ஒருங்கே அமைந்த நாடகங்கள் நம்முடைய தமிழ் மொழியில் சிறந்தோங்குவதற்கான ஆக்க வேலைகளில் நாம் முனைய வேண்டும்.

தமிழ் நாட்டில் புதிய கவிதைகள் எழுதக்கூடிய பலர் இன்று நம்மிடையே இருக்கிறார்கள். ஆனால் கவிதைகளைப் படிக்கும் பழக்கமும், பிரசுரிக்கும் வழக்கமும் அதிகரித்தாலொழிய இந்தத் துறையில் நல்ல வளர்ச்சிக்கு இடமிராது. அத்தோடு பழைய இலக்கியங்களிலும் மரபுகளிலும் பாரதியாரைப்போன்று நன்கு தோய்ந்து எழுந்தாலேதான், கவிதை என்ற இலக்கிய வடிவத்தில் புதுமைகளை ஆக்கும் வன்மையும் மொழியாற்றலும் உண்டாவதோடு, மன எழுச்சியிலும் கவித்துவ வேகத்திலும் தமிழ்ப்பண்பு என்ற ஜீவநாதம் ஒலிக்கும்.

இசைத் தமிழில், இன்று பல எழுத்தாளர்கள் திரையிலும் மேடையிலும் ரேடியோவிலும் பல புதிய பாடல்கள் புனைந்து வருகிறார்கள். சமீப காலத்தில் ஏற்பட்டுள்ள இலக்கிய விழிப்பினால் மேலும் மேலும் இலக்கிய ஞானமும் மொழி அறிவும் வளமடைந்து, நிரந்தரமான பண்புள்ள பாடல்கள் தோன்றவேண்டும்.

சிறுவர்களுக்கான நூல்கள் பல இன்று தோன்றி வருவது மகிழ்ச்சிக்குரிய வளர்ச்சியாகும். பொதுவாகச் சிறுவர் இலக்கியங்கள் மூன்று வகை. சிறுவர்களே தங்களுக்குள் களிப்பூட்டுகிற முறையில் அமைந்த நாடகங்கள், கதைகள், பாட்டுக்கள் முதலியன ஒருவகை. சிறுவர்களை நோக்கிப் பெரியவர்கள் கூறுகிற முறையில் அமைகிற உபதேசக் கதைகள், பாடல்கள் முதலியன இரண்டாவது வகை. இவை இரண்டும் தவிர, நமது நாட்டிலும் பிற நாடுகளிலும் நாடோடி இலக்கியங்களாகவும் வாய்மொழிக் கதைகளாகவும் பெரியவரும் சிறியவரும் ஒருங்கே சொல்லிவருகிற சிறுவர் இலக்கியங்கள் மூன்றாவது வகை. இந்த மூன்று துறைகளிலும் எழுத்தாளர்கள் முனைந்து செய்யவேண்டிய எதிர்காலப் பணி நிரம்ப உண்டு.சிறுவர்களே தங்களுக்குள் நடித்தும் சொல்லியும் வழங்கக்கூடிய இலக்கியத்தையும், பெற்றோர்களும் ஆசிரியர்களும் படித்து விளக்கி உபதேசிக்கக்கூடிய இலக்கியத்தையும் வளர்க்க வேண்டும். பரம்பரைக் கதைகளையும் தொகுத்து வழங்க வேண்டும். இந்த மூன்று முறையிலும் சிறுவர் இலக்கியம் வளர்வதற்கான முயற்சிகள் ஆரம்பமாகி நடந்துவருவது மகிழவேண்டிய சிறந்த பணியாகும்.

சென்ற சில ஆண்டுகளாகத் தமிழைப் பற்றித் தமிழிலும் ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும் விமர்சன இலக்கியம் தோன்றி வளர்ந்து வருகிறது. இலக்கியப் பண்டமாற்றும் நடைபெற்று வருகிறது. பத்திரிகைகள், புத்தக வெளியீட்டு நிலையங்கள் ஆகியவற்ரோடு, சாகித்திய அகாடமியும் தென்மொழிகளின் புத்தக ட்ரஸ்ட்டும் மற்றும் பல பொதுநலக் கழகங்களும் இவ்வகையில் சீரிய பணி செய்து வருவதைப் பாராட்ட வேண்டும்! இவை தவிர எத்தனையோ அரசியற் கட்சிகள் தங்கள் தங்கள் கொள்கைகளை மக்களிடையே பரப்புவதற்காக மொழி என்ற சாதனத்தை மிகுந்த வேகத்தோடு கையாளத் தொடங்கி, அதன் பயனாகத் தமிழ் நடை வேகமும் மிடுக்கும், புதிய புதிய வளைவு நெளிவுகளும் பெற்றுத் திகழ்கிறது! இந்த வளர்ச்சிகளை எல்லாம் காலம் என்ற புலவனே சீர்தூக்கிப் பார்த்து இலக்கியப் பண்பை எடைபோட முடியும். ஆனாலும் ஆரோக்கியமான முறையிலே விமர்சனக் கலையை வளர்த்தோமானால் இலக்கியத்தின் வளர்ச்சிக்கு அவசியமான ஒரு சேவையைச் செய்தவர்கள் ஆவோம்!

ஆனைத்தீ, பெரும்பசி என்றெல்லாம் பல நோய்கள் உண்டு. இந்த வகையான நோய் வந்தால் அவர்களுக்கு எந்த ஆகாரமும் ருசிக்கும். அதுபோலவே காய்ச்சல்காரனுக்கு எது சாப்பிட்டாலும் கசப்பாக இருக்கும். அன்னத்துவேஷம் என்ற நோயைப் பற்றிச் சொல்லவேண்டியதே இல்லை! இலக்கிய விமர்சகர்களிடையே எதிலும் சுவை கொள்கிற நோயும், எதிலும் கசப்புத்தட்டுகிற நோயும்—இரண்டும் கூடாது. காய்தல் உவத்தல் என்ற குற்றங்களின்றி விமர்சனக் கலையை வளர்ப்பது எழுத்தாளர்களாகிய நம்முடைய கடமையாகும்.

'கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும் உணர்வு'

என்று தொல்காப்பியர் கூறிய சூத்திரம் எல்லா இலக்கியச் சுவைகளுக்கும் பொருந்தும். கண்ணினாலும் செவியினாலும் உண்ணக்கூடிய உணவைச் சமைத்து வழங்குகிற தொழிலில் ஈடுபட்டவர்களே எழுத்தாளர்களாகிய நாம் அனைவரும்! நம்முடைய கடமை பெரிது; நம்முடைய பணி நுட்பமானது. நம் அனைவரையும் ஒற்றுமையோடு வழிநடத்தும்படி ஆதி எழுத்தாளனை முழுமுதற்கடவுளை வணங்குகிறேன்.

வணக்கம்.

[ஸ்ரீ கி.சந்திரசேகரன் இலக்கியத்தையும் வாழ்க்கையையும் ரஸிப்பவர். தமிழிலும், ஆங்கிலத்திலும் சரளமாக எழுதுபவர். அவருடன் பொழுதே போவது தெரியாமல் நாள் பூராவும் பேசிக் கொண்டிருக்கலாம். தாகுர், மாஸ்தி முதலிய இந்திய இலக்கியாசிரியர்களிடம் அளவற்ற பிரேமை கொண்டவர். நமது மகாநாட்டைத் தொடங்கி வைக்கும் மாஸ்தி வெங்கடேச அய்யங்காரைப் பற்றிய இக்கட்டுரையை இந்த இதழுக்காக நமக்கு மனமுவந்து எழுதி அளித்திருக்கிறார்.]

# மாஸ்தி வெங்கடேச அய்யங்கார்

## கி. சந்திரசேகரன்

தென்னிந்திய மொழிகளில் பழமையும் பெருமையும் படைத்த பாஷை கன்னடம். சுமார் கி. பி. ஒன்பதாவது நூற்றுண்டிலேயே குமார வியாஸர் என்ற சிறந்த கவிஞர் மகாபாரதத்தை கன்னடத்தில் உருவாக்கினர். அழகும் எளிமையும் கூடிய அந்தக் காவியத்தை இலக்கியப் பொக்கிஷங்களில் முதலாவதாய்க் கன்னடத்தில் தேர்ச்சி பெற்றவர் கூறுவர். இலக்கியமென்றதும் மொழியைப் பேசும் மக்களின் பண்பாடு ஏற்கனவே எவ்வளவு உயர்வடைந்திருந்தால் அருமையான இலக்கியம் உருவாகி இருக்கும் என்பதை ரஸிகர்கள் ஊகிக்கலாம். தொடர்ச்சியாயும், வலிமை குறையாததாயும் கன்னட இலக்கியம் வளர்ந்து வந்திருக்கிறது. புதுமை வாசனையுடன் இன்றுள்ள இலக்கியங்களின் தொடர்பையும் கன்னட இலக்கிய கர்த்தர்கள் அடைந்ததால், துளியும் இழுக்கின்றி கன்னட இலக்கியம் பிறரிடமுள்ளவைகளை வாங்கிக் கொண்டும் சொந்தமான இயல்பை இழக்காமலும் பெருகிவருவதை, இதர தென்னிந்திய மொழிகளான தமிழ், தெலுங்கு, மலையாளம் போன்றவை நன்கு உணராமலுமில்லை.

கன்னட எழுத்தாளர்களில், ஏன் கவிஞர்களில் என்றும் கூறலாம், முக்கிய இடம் பெற்றவர், ஸ்ரீ மாஸ்தி வெங்கடேச அய்யங்கார். முப்பது ஆண்டுகளுக்கு மேலாக கன்னட இலக்கியத்தை வளம் பெற்றதாய்ச் செய்பவர்களில் இவரும் ஒருவர். ஸ்ரீ பேந்திரே (Bendre), ஸ்ரீ. டி. வி. குண்டப்பா (D. V. Gundappa) போன்ற பெயர் பெற்ற கன்னட சாகித்திய கர்த்தர்களிடையே இவரும் பிரபலமானவர். கவிதை வடிவில் மட்டும் மற்றவர்கள் அதிகமாய் தங்கள் சிருஷ்டிகளைச் செய்திருக்கையில், இவர் கதை, நாவல், நாடகம் முதலிய இதர வடிவுங்களிலும் தமது கற்பனை எழிலை

வழங்கி வந்திருக்கிறார். 'ஸ்ரீ நிவாஸ்' என்ற புனை பெயரில் வெகு காலம் அவர் தமது உயர்ந்த கருத்துக்களை வாரி இறைத்தவர்.

மைசூர் பிராந்தியத்தினருகில் சித்தூருக்கருகாமையிலுள்ள ஓர் சிறு கிராமத்தில் பிறந்தவர். ஆயினும் கன்னடமே அவருடைய மூச்சுக் காற்றும்ப் பரிணமித்தது. இனிய, எளிய மக்கள் பாஷையிலேயே தமது அரிய பெரிய சாதனைகளை யெல்லாம் அவர் உலகிற்களித்தவர் இன்று கன்னட எழுத்தாளர்கள் புதிய யுகத்தை சிருஷ்டி செய்திருக்கின்றனர். முன்னேற்ற எழுத்தாளர்கள் (progressive writers) என்று கூறிக்கொண்டு இளைஞர்கள் பலர் கன்னடத்தில் நூதன இலக்கிய மரபுகளை உண்டாக்கியுள்ளனர். மாஸ்தி வெங்கடேச அய்யங்கார் புதுமையில் முன்னிற்பவர் தாம். ஆயினும் பழமையின் மணம் கமழுவதை அவருடைய கதைகளிலும், நாடகங்களிலும், கவிதைக்கற்பனைகளிலும் சுலபமாய்க் காணலாம். கன்னடம் இனிமையும் பூரிப்பும் படைத்த பாஷை என்பதை ஸ்ரீ மாஸ்தியின் எழுத்துக்களை அவரைக் கொண்டே வாசித்து இன்புற்றவர்களை விசாரித்தால் ஒப்புவார்கள்.

சிறு கதைக்களை அநாயாசமாய் எழுதியவர். மக்களுடன் உறவாடும் மொழி, சொல்ல இயலாத லயம் பொருந்திய ஓட்டம், துளியும் பகட்டோ, படாடோபமோ இன்றி சாமான்யமாயும் ஆனால் குறைவின்றியுள்ளதாயும் விரியும் வருணனை, இவையே மாஸ்தியின் அடிப்படை வலுவின் காரணங்கள். ஒரு சமயம் பல ஆண்டுகளுக்கு முன் 'திரிவேணி' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் 'மாஸுமதி' என்ற கதை யொன்றை மாஸ்தியின் நண்பரான நவரத்தினம் ராமராவ் ஆங்கிலப்படுத்தி வெளியிட்டார். ராஜாஜி அவர்களால் அக்கதையை வாசித்தபிறகு, அதைத் தமிழில் ஆக்கவேண்டு மென்ற அவாவை தணித்துக்கொள்ள இயலவில்லை. இரண்டே நாட்களில் 'கலைமகள்' காரியாலயத்துக்கு தமிழில் 'வேணுகானம்' என்ற தலைப்பில் அச்சிறு கதை அனுப்பப்பட்டது.

'இந்திரா தானா இவள்?' என்ற தலைப்புடன் ஒரு சிறு கதை வெளியாயிற்று. அவருடைய நண்பர் ஸ்ரீ நவரத்தினம் ராமராவ் அவர்கள் முதலில் அதன் ஆசிரியரை அறியாமல்தான், மாஸ்தியிடமே அதை வாசித்துக் காட்டி, சில இடங்களில் தொண்டை அடைக்க நிறுத்தியும் தவித்து விட்டு 'ஸ்ரீநிவாஸ்' என்பவர் யார் என்று வினவினாராம். 'தமக்கு ஆசிரியரைத் தெரியும், ஆயினும் தமது பெயரை வெளியிட வேண்டாமென தம்மிடம் அவர் கேட்டுக் கொண்டதால் தாமாக வெளியிட விரும்பவில்லை.' என்று மாஸ்தி கூறினாராம். பிறகு தான் ஸ்ரீ நவரத்தினம் அவர்கள் உண்மையை அறிந்து மாஸ்தியை மனமார வாழ்த்தினார்.

அவர் கதைகளில் சுபாவமான பேச்சும், இயல்பும் பரிமளிப்பதை யாரும் வாசித்தவுடன் உணரலாம். வேண்டாத வருணனையோ, அவசியமில்லாத அதிர்ச்சிகளையோ, உபயோகமற்ற

★

இலக்கியம், பழந்தமிழ் நாகரிகம், இலக்கணம், கவிதை, விஞ்ஞானம், சமுதாய வரலாறு, வாழ்க்கை வரலாறு, விஞ்ஞானிகளின் வரலாறு, பிரயாண நூல், உடல் நூல், அரசியற்கலை, பொருளாதாரம், கைத்தொழில், நாடகம், நாவல், சிறு கதை, குழந்தை நூல்கள், முதியோர் கல்வி போன்ற பல எழுத்துத் துறைகளிலும் நல்ல நூல்கள் பலவற்றை வெளியிட்டிருக்கும்.

**ஸ்டார் பிரசுரம்**

தமிழ் எழுத்தாளருக்கு நல்வாழ்த்துக் கூறுகிறது

★

போன் 84984

**ஸ்டார் பிரசுரம்**

68, பெரியதெரு, திருவல்லிக்கேணி

சென்னை - 5

கிளை :

60, மேலக் கோபுரத் தெரு

மதுரை

சிரிப்பு வேடிக்கையையோ அவருடைய தெள்ளிய நடையில் காண முடியாது. கதைக்கென்ற வித்தியாசமான எழுத்தையோ நடையையோ கைக்கொள்ளாத பெருமையும் உடனேயே விளங்கும். எல்லாம் முதலிலிருந்து கடைசிவரையில் சரளமாயும், உயிரோட்டம் பெற்றதாயும், நிகழ்ந்தவையாயும் அல்லது நிகழக்கூடியவையாயுமே அவருடைய சிருஷ்டிகள் தோன்றும்.

1937-ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவில் 'கன்னட தேசத்து மக்கள் பண்பாடு' (Popular Culture of Karnataka) என்ற தலைப்பில் சொற்பொழிவுகள் சில ஆற்றினார். புத்தக வடிவிலும் அவை வெளியாகியுள்ளன. புத்தகத்தை வாசித்தால் அறியலாம், எவ்வளவு நாட்டின் மரபிலும் மக்கள் மொழியிலும் அவருக்கு அளவுகடந்த ஆர்வம் என்பதை. 1940ஆம் ஆண்டில் 'வால்மீகியின் கவிதை (Poetry of Valmiki) என்ற அருமையான விமர்சனமொன்றை வெளியிட்டார். ஸம்ஸ்கிருத இலக்கியத்தின் ஜீவநாடியை உணர்ந்தவர் என்பதை அந்தப் புத்தகம் வெகுவாய் விளக்கும். 1943-இல் அவருடைய சிறு கதைகள் ஆங்கிலத்தில் நான்கு பாகங்களில் வெளியாயின. ராஜாஜி அந்த ஆங்கில மொழிபெயர்ப்பை மிக உற்சாகத்துடன் வரவேற்றார், முகவுரையில். 1946-இல் மகாகவி ரவீந்திரரைப் பற்றிய சுருக்கமான ஆனால் நுட்பமான ஓர் நல்ல விமர்சன நூலை உருவாக்கினார். கவிகளின் இதயங்களை மற்றக் கவியால்தாம் அறிய இயலும் என்பதற்கோர் அத்தாட்சி போன்றது அது. இடையே நீண்ட கதை யொன்றை 'சுப்பண்ணு' என்ற பெயரில் வெளியிட்டார். கலைஞனின் வாழ்க்கையும் விநோதமான முடிவும் அதில் தென்படுகின்றன. சென்ற ஆண்டில் 'சென்னப்ப நாயகன்' என்ற பெயரில் உருவான அவருடைய அற்புத நாவலொன்றை அவருடைய நண்பர் ராமராவே ஆங்கிலத்தில் முழுவதும் மொழிபெயர்த்திருக்கிறார். வாசிக்க வாசிக்க கலை உத்திகள் நிரம்பிய கற்பனையாகவே அதனை வழிபட நம் மனம் உந்தும்.

**கன்னட ஸாகித்திய பரிஷத்** என்ற ஸ்தாபனத்தின் தலைவராகவும் வெகுகாலம் பணியாற்றினார். மைசூர் அரசாங்கத்தில் பெரிய பெரிய உத்தியோகங்களில் வேலை பார்த்தாலும், இலக்கிய சேவையை துளியும் விலக்காதவர். அன்றும், இன்றும் இளம் எழுத்தாளர்களிடம் மனப்பூர்வமான அன்பு பூண்டவர் மட்டுமல்ல, அவகாசம் கிட்டிய பொழுதெல்லாம் தம்மாலான உதவியையும் உற்சாகத்தையும் அவர்கள்பால் வழங்குபவர்.

ஆங்கில பாஷையையும் திறமையுடன் கையாளக்கூடியவர். சொற்பொழிவாற்றுகையிலும் அவருடைய மிருதுவான இதயம் வெளியாகும். புன்சிரிப்பும், புனித உணர்ச்சியும் பூர்ணமாய் அண்டியவர்களிடம் பரிசாக அளிப்பார். பிறமொழிகளில் உள்ளவைகளை—இலக்கியமாயின்—நுகரவே சதா ஆற்றல் படைத்தவர். தமிழ் எழுத்தாளர் சங்கம் செய்த பெரும் புண்ணியம் அவருடைய ஆசியுடன் இன்று மகாநாடு அவருடைய அண்மையில் தொடங்குகிறது.

[இந்த வருஷம் தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் கேடயம் பெறும் ஸ்ரீ பி. ஸ்ரீ ஆசார்யா அவர்களின் எழுத்து ஒரு இருபத்தைந்து முப்பது வருஷங்களுக்கும் அதிகமாகத் தமிழர்களுக் கெல்லாம், மிகவும் நன்ருகத் தெரிந்தது தான. தனக்கே உரிய இன்றையப் புது நோக்குடன் தமிழ்ப் பழமை பூராவை யும் பார்ப்பவர் அவர். கவிதை அனுபவத்தைச் சொல்ல முடியாது என்று சொல்லும் இக்கட்டுரை நமது எழுத்தாளர் மகாநாட்டு இதழுக் கென்றே எழுதப்பட்டது.]

# கவிதை அனுபவம்

பி. ஸ்ரீ.

அழகி என்று புகழப்பெற்ற ஒரு பெண் ஏன் அப்படித் தன்னைப் புகழ்கிறார்கள் என்பதை அறிந்தாளில்லை.

'காரணம் என் நிறம் தானு?' என்று காதலனைக் கேட்டாள்.

'இல்லை.'

'என் உருவமா?'

'இல்லை.'

'என் முகப் பொலிவு?'

'இல்லை.'

'என்னுல் ஒன்றும் சொல்வதற்கில்லை.'

'அது தான் உன் அழகு!'

கவிதையைக் குறித்தும் இப்படி ஒரு 'வினுவிடை' தயாரிக்கலாம்.

'கவிதை பொருளிலா?'

'இல்லை.'

'மனேபாவத்திலா?'

'இல்லை.'

'அழகுணர்ச்சியிலா?'

'இல்லை.'

'இசையின்பத்திலா?'

'அது கூட இல்லை.'

அப்படியானுல் கவிதையைக் குறித்து என்ன தான் சொல்வதற்கு இருக்கிறது? 'கவிஞன் செய்வது கவிதை' என்று சொல்லி விட்டால் போதுமா? 'கவிஞன் யார்?' என்ற கேள்விக்கும்

'கவிதை செய்கிறவன்' என்று தானே பதில் சொல்லவேண்டியிருக்கும்?

கவிதை சொற்களால் ஆனது என்பதில் ஒருவருக்கும் சந்தேகம் இல்லை. ஆனால் சாதாரணப் பேச்சும் சொற்களால் ஆனது தானே. நான் எழுதும் இந்த வாக்கியங்களும் சொற்களால் ஆக்கப் பட்டவையே. வசனம் என்று சொல்லப்படும் இலக்கியம் முழுவதும் இப்படித்தான்; செய்தித்தாளும் இப்படித்தான். கவிதையென்பது சொற்களால் ஆக்கப்பட்ட தொன்று என்றால், செய்தித்தாள் கவிதையாகாதது ஏன்?

திறமையாகவும் அழகாகவும் இன் சொற்களை அதாவது. இசையழகு வாய்ந்த சொற்களைக் கோத்து ஒழுங்கு செய்வது கவிதை என்று கூறுவதுண்டு. இக்கருத்தை,

பாமாலை காட்டஇன்சொல்
பாவாணர் தேடுதல்போல்
பூமாலை கட்டமலர்
போய்எடுக்கும் பாங்கியர்கள்

என்ற கவிஞன் வாக்கிலே காணலாம். அழகிய நறு மலர்களைத் தேடிக்கொண்டு வந்து பூமாலை கட்டுவது போன்றதுதானா பாமாலை கட்டும் கவிதைக்கலையும்? அப்படியானால் கவிதைக்கு உரிய அழகிய இன்சொற்களின் அகராதி ஒன்றைத் தொகுத்து வைக்கலாமே!

கவிதையைச் சிற்பக்கலையுடன் ஒப்பிட்டுப் பேசுவதும் உண்டு. கல்லையோ கற்பாறையையோ பார்க்கும் சிற்பி தன் கனவைக் கற்களினூடே கண்டு கொள்கிறான். அந்த அழகுக் கனவு அக் கல்லிலே சிறைப்பட்டிருக்கக் காண்கிறான். ஒவ்வொரு உளி அடியும் அந்த அழகை விடுவிக்க உதவுகிறது என்ற குதூகலத்தில் செதுக்கிக் கொண்டே போகிறான். அப்படியே கவிதை என்ற சொற் சிற்பத்தில் கழிக்கவேண்டிய சொற் பகுதிகள் கொஞ்சமும் தாட்சணியம் இன்றி உடனே கழிக்கப்படுகின்றன என்று கூறுவோர் உண்டு. ஆனால் சிறந்த வசனத்தையும் மேதாவிகள் இத்தகைய சொற்சிற்ப நிலைக்கு உயர்த்துவதும் அரிதன்று.

எனவே, சொல்லும் பொருள் கவிதையன்று; அதைச் சொல்லும் வழிதான், முறைதான், கவிதை என்று இன்றைய ரஸிகர்கள் கூறுகிறார்கள். இவர்கள்,

பல்வகைத் தாதுவின்,
உயிர்க(கு)உடல் போல், பல
சொல்லால் பொருட்(கு)இட—
னாக, உணர்வினின்
வல்லோர் அணிபெறச்
செய்வன செய்யுள்

என்று நன்னூல் ஆசிரியர் கூறுவதை அப்படியே ஒப்புக்கொள்ள மாட்டார்கள். பொருளை உயிராகக் கொண்டு சொற்களை உடலாகக் கொண்டிருப்பது கவிதை என்றல்லவா இந்த இலக்கண ஆசிரியர் சொல்லுகிறார்?

கவிதைக் கலை ஸாராம்சத்தில் சொற்கலை தான். அதாவது சொல்லைக் கவிஞன் உபயோகப்படுத்தும் முறை அல்லது வழி தான். சிற்பி கல்லை உபயோகப் படுத்துவது போல், ஓவியன் வண்ண மையை உபயோகிப்பது போல், மற்ற எழுத்தாளர்கள் சொற்களைச் சொற்களாகவே பயன் படுத்திக் கொள்ளுகிறார்கள் —அதாவது பொருளுக்குச் சாதனமாக. கவிஞனே கலைக்கு உரிய சாதனமாகச் சொற்களை உபயோகப் படுத்துகிறான். ஆகவே, சொல்லை உபயோகப்படுத்தும் விதத்தில் வசனத்திற்கும் கவிதைக்கும் வேற்றுமை காணலாம் என்று கருதுவோர் உண்டு. இதுவும் முழு உண்மை யன்று.

சிறந்த வசனகர்த்தர்கள் சில சமயங்களில் தங்கள் சொற்களைக் கலைக்குச் சாதனமாக உபயோகிப்பதையும் காண்கிறோம்; கவிஞர்கள் பொருளுக்குச் சாதனமாகச் சொற்களை உபயோகித்துக் கொள்வதையும் பார்க்கத்தான் செய்கிறோம் எனவே சொற்கள் கவிதையில் உபயோகிக்கப்படும் வழிக்கும், வசனத்தில் உபயோகிக்கப்படும் வழிக்கும் என்ன வேற்றுமைதான் இருக்க முடியும் என்பதைக் கண்டுபிடிப்பதற்கு, ஏதாவதொரு பாட்டையோ அதன் பகுதியையோ உதாரணமாக எடுத்துக்கொண்டு சோதித்துப் பார்ப்பதே நலமாகும்.

வால்அடித்து மேலபதுங்கி
வாய்பிளக்க வாய்கிழிக்க
வேல்பிடித்து வீரர்குத்த,
விழ்புலிக்கு மேல்துடிக்க,.....

என்ற செய்யுளடிகளை வாசித்துப் பாருங்கள். அல்லது கேட்டுப் பாருங்கள். பாட்டைத் தாமாகவே படிக்கிறவர்களும் மானஸிகமாய் அதைக் கேட்டுத்தான் அனுபவிக்க வேண்டும். இப்படி மானஸிகமாய்க் கேட்டு அனுபவிப்பதற்குப் பாட்டைப் பாடிப் பார்ப்பதே நலம் கர்நாடக சங்கீதத்திலோ, வேறு சங்கீதத்திலோ அல்ல: கவிதைக்கு உரிய ஓசைப் பொலிவைப் புலப்படுத்தும் இசையில் தான். பாட்டை உரக்க ஓதினலும் போதும்.

மேலே சொன்ன செய்யுளடிகளின் ஓசை நயமே வேட்டையின் பரபரப்பையும், ஆத்திரமாகவும் குறி தவருமலும் செயல்கள் செய்யும் சாகஸத்தையும் நினைவூட்டுகின்றது. புலி வேட்டையின் அபாயங்களும் அகக்கண் முன் வருகின்றன. ஏன், வேடர்களின் பறைக் கொட்டையும் நினைவூட்டுகிறது பாட்டின் ஓசை நயம்.

வால், மேல், வேல் என்ற தனிச்சொற்களிலோ, வேறு எந்தத் தனிச்சொல்லிலோ இல்லை கவிதை என்பது உடனே

புலனாகிவிடுகிறது. தமிழ் மொழிக்குச் சாதாரணமாக உரிய சொற்களே இவை; வசனத்திலும் வரக்கூடிய சொற்களே. இந்தச் சொற்கள் ஒன்றோடொன்று கலந்து உறவாடும் அந்த உறவில் இருக்கிறது கவிதை. அப்படியானால் அந்த உறவுதான் என்ன?

யாப்பிலக்கண முறையில் பாட்டைப் பார்க்கலாம். மோனை முறியவில்லை, பிராசம் பிசகவில்லை எனலாம். யாப்பிலக்கணம் சரியாகிவிட்டால் கவிதை வந்துவிடுகிறதா? புலிகள் பதிபோட்டு வாலை அடித்துத் தின்னவேண்டுமென்று வாயைப் பிளப்பதையும், அந்தப் பிளந்த வாய்க்குள் பெரும் பயத்தால் தலையைக் கொடுப்பதற்கு மாறாகத் தங்கள் வேலைப் பாய்ச்சுவதையும், பிளந்த வாய் கிழிந்து இரத்தம் கக்கியவண்ணம் புலிகள் கீழே விழுந்து துடிப்பதையும் மேலும் பல விவரங்களுடன் யாப்பிலக்கணம் தெரிந்தவர் எவரும் ஒரு செய்யுளாகப் பாடி வைக்கலாம். ஆனால் இந்தச் செய்யுள் கவிதையாக அமையவேண்டும் என்பதில்லை. யாப்பிலக்கணம் சிறிதும் குன்றாத செய்யுட்கள் பல்லாயிரக்கணக்காக இருக்கின்றன. அவற்றுள் கவிதையோ அபூர்வமான சரக்கு. ஆனால் மேலே காட்டிய செய்யுளடிகளில் கவிதை எப்படி வந்துவிட்டது?

புலி வேட்டையின் ஒரு முழுமையுணர்வு நமக்குக் கிடைத்துவிடுகிறது இந்தச் செய்யுளடிகளிலே. சொற்களால் பெற முடியாத இந்த உணர்வைச் சொற்களின் ஒருவகைச் சேர்த்தி உறவால் பெற்றுவிடுகிறோம். இது எப்படி என்பதைக் கண்டு பிடிக்க யாப்பிலக்கணம் துணைபுரிவதில்லை. சொற்களில் சப்தங்கள் ஒன்றோடொன்று இசைந்து உறவாடும் ஒரு முறையைப் புலி வேட்டை குறித்து எழுதப்படும் வசனத்தைக் காட்டிலும் இக் கவிதையில் காண்கிறோம். வசனத்திலுள்ள சொல்லோசைகளின் உறவைக் காட்டிலும் இக்கவிதையின் சொல்லோசை உறவு அதிக அளவில் ஒழுங்குபட்டிருப்பதையும் காண்கிறோம்.

மீண்டும் ஒரு முறை 'புலி வேட்டை'ச் செய்யுளடிகளை ஓதிப் பாருங்கள். ஏதோ கண்டிப்பான ஒரு வகை ஒழுங்கிற்கு இச் சொல்லோசை—உறவு உட்பட்டிருப்பது போலவும் தோன்றக் கூடும். சந்தம் அமைத்துக்கொண்டு பாடுவதால் மட்டும் இந்த ஒழுங்கு வந்துவிடும் என்று சொல்வதற்கில்லை. கடலின் அலைகள் ஒரு வகை ஒழுங்கைப் பின்பற்றுவதுபோல் கவிதையின் சப்த ஜாலங்களும் வந்து நம் காதில் விழுகின்றன. 'முறை தவறு வேகத் திரைகளினால் வேதப்பொருள் பாடி' என்று பாரதி பாடியிருக்கிறாரே, அந்தக் கண்டிப்பான 'முறை தவறாமை' என்ற நியதியை உண்மைக் கவிதைகளில் எல்லாம் காண்கிறோம்.

இந்த ஓசைப்பொலிவு என்ற உறவு முறைக்கு யாப்பிலக்கணம் துணை செய்கிறது ஓர் உண்மைக் கவிஞன் விஷயத்திலே. போலிக் கவி அல்லது சாமானியக் கவி விஷயத்திலோ இலக்கணம், கைவிலங்கு கால்விலங்காகிக் கவிதைக்கு உரிய உயிர்—இயக்கத்தையே தடைப்படுத்திவிடுகிறது.

# எமது புதிய வெளியீடுகள்

| | | ரூ. நபை. |
|---|---|---|
| **டாக்டர் மு. வ.** | | |
| *கல்வி* | ... | 2-00 |
| *இலக்கியத்திறன்* | ... | 4-00 |
| **ராஜாஜி** | | |
| *கைவிளக்கு* | ... | 2-50 |
| **புலவர் குழந்தை** | | |
| *தொல்காப்பிய காலத் தமிழர்* | ... | 5-00 |
| *யாப்பதிகாரம்* | ... | 3-00 |
| **மயிலை சீனி வெங்கடசாமி** | | |
| *மறைந்து போன தமிழ் நூல்கள்* | ... | 6-00 |
| *சாசனச் செய்யுள் மஞ்சரி* | ... | 3-00 |
| **சி. பாலசுப்ரமணியன்** | | |
| *தமிழ் இலக்கிய வரலாறு* | ... | 3-00 |
| **சேரமலே** | | |
| *நீங்களும் தூதுவராகலாம்* | ... | 3-00 |
| **பாரதிதாசன்** | | |
| *குறிஞ்சித் திட்டு* | ... | 5-00 |
| *பாரதிதாசன் நாடகங்கள்* | ... | 3-00 |
| **ந. சஞ்சீவி** | | |
| *சிலம்புத் தேன்* | ... | 1-00 |
| **கு. ராஜவேலு** | | |
| *அணைகடந்த வெள்ளம்* | ... | 2-50 |
| *காதல் தூங்குகிறது* | ... | 3-50 |
| **அ. மு. பரமசிவானந்தம்** | | |
| *தமிழக வரலாறு* | ... | 6-50 |
| **பெ. தூரன்** | | |
| *குழந்தை மனமும் அதன் மலர்ச்சியும்* | ... | 1-25 |
| **தம்பி ஸ்ரீநிவாசன்** | | |
| *பத்திரிகையின் கதை* | ... | 0-75 |
| **எஸ். சூசைராஜா** | | |
| *டைம்பீஸ் ரிப்பேர் செய்தல்* | ... | 2-00 |
| **பகவதி ஜெயராமன்** | | |
| *திருக்குறள் வழங்கும் செய்தி* | ... | 2-00 |
| **டாக்டர் ராஜமாணிக்கனார்** | | |
| *தமிழக ஆட்சி* | ... | 2-50 |

**பாரி நிலையம் :** 59, பிராட்வே, சென்னை-1.

இந்தப் 'புலி வேட்டை'ப் பாட்டில் நாம் காண்பதுபோல் பொருள் சரியாகவும் இருக்கலாம்; அல்லது தவறாகவும் இருக்கலாம். பகுத்தறிவுக்குப் பொருத்தம் இல்லாத பொருளும் ஒரு கவிதைக்குள்ளே உண்மைப் பொருள்தான்; உறுதிப்பொருள்தான். கவிதைக்கு வெளியே தனியாக எடுத்துப் பார்த்தால் கவிதைக்கூற்று உண்மையாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை. கவிஞன் கூறும் பொருள் உண்மையிலேயே அழகுப்பொருள்தானா என்ற ஐயப்பாடும் நிகழலாம். கவிஞன் மிகைபடக் கூறியிருக்கலாம்; கற்பனை வானில் சிறகடித்துத் திரியலாம். எனினும் கவிதை உண்மைக் கவிதை யென்றால், சாதாரணப் பேச்சில் காணும் சொற்களின் உறவுகளைக் காட்டிலும் ஒழுங்கு விதிக்குக் கட்டுப்பட்டிருக்கும் சப்தஜாலங்களையே காண்கிறோம்.

சொல் என்பது பொருளோடு கூடிய ஒலிதானே? இந்த ஒலிகள் எண்ணிறந்த வழிகளில் ஒன்றோடொன்று உறவாடக் கூடுமே. சாமர்த்தியசாலிகள், சொற்சிலம்ப வித்தையாடிகள் சொல்லுக்கு இடமாக இருக்குப் ஒலியின் தனிச்சிறப்பை உணர்ந்து கொள்ளாமல் சப்தசாகஸங்கள் காட்டிக் கவிதைக்கு உரிய பாராட்டும் பெறக்கூடும். ஆனால் உண்மைக் கவிதையைக் கேட்டுக் கேட்டுப் பண்பட்டிருக்கும் செவி எந்தப் போலிச் செவியுணவையும் கண்டு மறுத்துவிடும்.

கவிதை ஸாராம்சத்திலே செவிச்செல்வம். கவிதைக்கு உரிய பாஷைச் சொற்களையும் அவற்றின் நயங்களையும் செவிப் பழக்கமாக அனுபவித்திருப்பவர்கள் பொருளும் ஒலியும் பின்னிப் பிணைந்து கிடக்கும் சொற்கலையின் சிறப்பியல்புகளைக் கவிதையில் எளிதாகக் கண்டுகொள்ள முடியும். எனவே, 'பிறமொழிகளின் மூலமாகக் கவியின் உயிர் நிலையை அறியப்படுவது, காதலியின் அருள் முறுவலைப் பெறுவதற்காக வக்கீலுக்கு வக்காலத்துக் கொடுக்கிற அழகுதான்' என்ற கவி ரவீந்திரரின் கருத்தையும், அதை இவ்வளவு அழுத்தமாகத் தமிழாக்கம் செய்திருக்கும் ரஸிக மணி டி. கே. சி. யின் கொள்கையையும் நான் பெரும்பாலும் ஆதரிக்கிறேன்.

தக்க அளவில் தாய்மொழிப் பயிற்சியோ பழக்கமோ இல்லாதவர்கள் தமிழ்க் கவிதையை அனுபவிப்பது என்பது சற்றுச் சிரமமான காரியம்தான். தர்க்க முறையில் தமிழ் வார்த்தைகளை அமைத்து இவர்கள் பேசக்கூடும், எழுதக்கூடும். இவர்கள் தமிழ் வசனத்தைப் போற்றி அனுபவிக்கவும் கூடும். ஆங்கிலப் பயிற்சி உள்ள இவர்களுக்குத் தர்க்கரீதியான ஒழுங்குதான் சாதாரண மனப்பழக்கமாயிற்றே. இந்தத் தர்க்க ஒழுங்கு நிலை அடிக்கடி மீறப்படும் கவிதை—அதிலும் தமிழ்க்கவிதை—இவர்களுக்கு அநாவசியமாக மூளையைக் குழப்பிக் கொள்ளும் ஒருவகைப் புதிர்.

ஸ்தூலமாகப் பார்க்கும்போது, கவிதையில் வரும் சொற்கள் சாதாரணப் பேச்சில் வரும் அல்லது எழுத்தில் வரும் சொற்களைக்

காட்டிலும் ஒழுங்கீனமாக அமைந்திருப்பது போலவே தோன்றும். எனினும் பொருளைக் காட்டிலும் அதிக அளவில் சப்தத்தைக் கவனிக்கும்போது, வசன ஒழுங்கிற்கு அதிதமான ஒருவகை ஒழுங்கைக் கவிதையில் தான் காண்கிறோம் என்பது புலனாகும். அதே சமயம் பொருளில் ஒழுங்கின்மையும் புலனாகக்கூடும். பொருளிலே ஒழுங்கின்மை என்று இங்கே நான் சொல்லும்போது, உணர்ச்சியை நம்பாத உள்ளம் அப்படிச் சொல்லுகிறது என்பதுதான் என் குறிப்பு. உண்மையில் இந்த 'ஒழுங்கின்மை' பொருள் அளவு மீறித் தன்னைப் புலப்படுத்தும் நிலைமைதான்.

கண்டிப்பாய்க் கட்டு அல்லது ஒழுங்கிற்கு உட்பட்ட சப்த ஜாலத்தையும், கட்டுக்கு அடங்காது விடுதலை பெற்றிருக்கும் பொருள் வளத்தையும் ஒருங்கே காண்கிறோம் கவிதையில். இந்த முரண்பாடுதான் சிலருக்கு மூளையைக் குழப்பும் புதிராகத்தோன்றவும் கூடும். இந்த இரண்டு முரண்பாடுகளும் சேராத சேர்த்தி அல்ல என்பதில் தான் கவிதையின் இரகசியம் இருக்கிறது. ஏன், கண்டிப்பாய்க் கட்டுப்பட்ட சப்தஜாலம் அளவுமீறி விடுதலை பெற்றிருக்கும் பொருளைத் திருமணம் புரிந்து கொஞ்சிக் குலாவும் பொழுது கவிதை பிறக்கிறது. இதை ஆராய்ச்சி முறையில் சுட்டிக்காட்ட இயலாது. உத்தமக் கவிதைகளை மேல்வரிச் சட்டமாகக் காட்டித்தான் கவிதைக் கலையின் மர்மத்தை உணர்த்த முடியும்.

இத்தகைய கவிதை தரும் அறிவு வேறு; விஞ்ஞானம் தரும் அறிவு வேறு. கவிதை பேசுவது சாதாரண மனித அனுபவத்தைத் தான். விஞ்ஞானியைப் போல் பகுத்தறிவைத் துணையாகக் கொண்டு விஷயங்களைத் தூண்டித் துளைத்து ஆராய்ச்சி செய்வதில்லை. பகுத்தறிவைக் கொண்டு ஒரு கவிதையையும் புரிந்து கொள்ள முடியாது. உள்ளொளியைத் தூண்டுவதுதான் கவிதை. இது போதிக்கும் அறிவு விஞ்ஞானி கருதும் வகையில் அமைவதில்லை. கவிஞன் வெளியிடுவது அனுபவமாகிய அறிவுதான்.

கவிஞன் உபதேசம் செய்வதும் இல்லை. கவிஞனும் நம்மைப் போல் பார்க்கிறான்; விஞ்ஞானிபோல் உற்றுப் பார்க்கவும் கூடும்; ஒரு மெய்ஞ்ஞானிபோல ஊடுருவிப் பார்க்கவும் கூடும், எனினும் தான் காணும் உலகத்தை, வாழ்க்கையை அனுபவமாய்க் காட்டுகிறான். அனுபவிக்கப்பட்ட பொருளைப் பேசுவதில்லை; அனுபவத்தையே பேசிவிடுகிறான். ஓர் அனுபவத்தின் முடிந்த முடிவு வரையில் போய்விடுகிறான் கவிஞன்—வேறொருவனும் அதற்குமேல் போகமுடியாது என்ற அந்த எல்லை வரை. இப்படி எவ்வளவு தூரம் போகிறானோ அவ்வளவிற்கு அனுபவம் சொந்தமாகி விடுகிறது.

விஞ்ஞானம் அனுபவத்தைப் பற்றிய அறிவை வெளியிடுகிறது என்றால், கவிதை வெளியிடுவது அனுபவத்தைப் பற்றியல்ல, அனுபவத்தின் அறிவேதான். இந்த அனுபவம் உயிரோடு வாசகர் இதயத்தில் பாய்கிறது, கவிதை வாயிலாக.

கவிதை தன் சொந்த விதிகளுக்கு இணங்க வார்த்தைகளைக் கொண்டே அனுபவத்திலும் அனுபவத்திலிருந்தும் ஒரு க்ஷணத்திற்கு நித்தியத்துவம் கொடுத்துவிடுகிறது. எனவே, கவிதையில் கிடைக்கும் அனுபவம் சொந்த அனுபவத்தைக் காட்டிலும் உண்மையான அனுபவமாகிவிடுகிறது. மிகவும் இருண்ட மனப்பகுதியில் கிடைக்கும் அனுபவங்களுக்கும் கவிதை வடிவம் தருகிறது.

கவிஞனுடைய அ.னுபவத்தை நாமும் அபூர்வமாக அடையத்தான் செய்கிறோம்—மிகவும் அபூர்வமாக. ஆனால், இந்த அனுபவங்களுக்குப் பாஷை கவிதைதான். வசனத்தை ஊமையாக்கும் வாழ்க்கையனு.பவமும் கவிதையில்தான் பேசுகிறது.

கவிதையனுபவம் ஒருவகை மனோபாவ முலாம்பூசி நமது அனுபவங்களுக்கும் ஒளி தருகிறது, அழகு தருகிறது. எனவே கவிதையை இயற்கைக்கும் வாழ்க்கைக்கும் பொருள் காட்டி விமர்சிக்கும் ஒரு தனிப் பெருங்கலை என்பர்.

> இந்திர ஜாலமெல்லாம் கவியில்
> இயற்றிக் காட்டிடுவோன்,
> மந்திரச் சொல்லாலே உள்ளம்
> மயங்கச் செய்திடுவோன்

என்று போற்றப்பெறும் கவிஞன், கவிதை வாயிலாகக் காட்டும் வாழ்க்கை ஒளியையும் அழகையும் வேறு எந்தச் சாதனத்தாலும் நாம் அடைவதற்கில்லை யென்றே தோன்றுகிறது.

★

## பி. ஸ்ரீ. எழுதியுள்ள நூல்கள்

ஆழ்வார்களும் நாயன்மார்களும்
கோதை அல்லது காதல் வெள்ளம்
துள்ளித் திரிகின்ற காலத்திலே
கிளைவ் முதல் ராஜாஜி வரை
மூவர் ஏற்றிய மொழிவிளக்கு
தொண்டக்குலமே தொழுகுலம்
பகவானை வளர்த்த பக்தர்
முதலியன.

★

[காலஞ்சென்ற 'தேவன்' தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்குச் சிறப்பாகச் சேவை செய்த சங்கத் தலைவர்களில் ஒருவர். கல்கியிடம் உதவியாசிரிய ராகவும்,பின்னர் பொறுப்பாசிரியராகவும் ஆனநத விகடனில் பணி செய்தவர். இந்தக் கட்டுரை சில வருஷங்களுக்கு முன் பம்பாய் கோரேகான் தமிழ்ச் சங்க மலருக்காக அவர் எழுதியது.]

# நான் கண்ட பி. ஸ்ரீ.

"தேவன்"

1933-ம் வருஷம். மயிலாப்பூர் ப்ராடீஸ் ரோடில் திரு டி. கே. சி. அவர்களது பங்களா. காலை நேரங்களில் மாடி அறையில் பி. ஸ்ரீ. அவர்கள் கம்ப சித்திரக் கட்டுரைகளைச் சொல்லி வர, 18 வயது இளைஞனை நான் அவைகளை எழுதி வந்து, ஆனந்த விகடனில் பிரசுரத்திற்குக் கொடுப்பது உண்டு.

அந்தக் காலத்தில் பத்திரிகை உலகத்திற்கு நான் புத்தம் புதியவன். டி. கே சி.யும், பி ஸ்ரீ.யும் பழகும் விதத்தையும், அவர்களிருவரும் "கல்கி"யுடன் கவிதா நயங்களைப் பருகிப் பருகி ஆனந்தமடைவதையும் கண்டு நான பிரமிப்படைந்திருக்கிறேன். தமிழ் உலகத்திற்குக் கம்பன் கவிதா நயத்தை திராக்ஷா பாகமாக எடுத்துக் கொடுத்தவர் பி. ஸ்ரீ. அவர்கள எத்தனை முறை கம்பனைத் திரும்பத் திரும்பச் சொன்னாலும் தெவிட்டாத சுவையுள்ளது ராம காதை என்பதை இன்றும் எடுத்துக்காட்டி வருகிறவரும் அவர் தான்.

23 வருஷங்களாக அவருடன் நெருங்கிப் பழகிய நான் அவருள்ளத்தை ஓரளவு அறிந்து கொண்டிருக்கிறேன் என்று நம்புகிறேன.

பி. ஸ்ரீ. தமிழ்ப் பற்று மிகுந்தவர். இது அவர் தந்தை வழியிலே குலதனமாக வந்தது ஆகும். அவருடைய சிறிய தகப்பனார் ஸ்ரீ அனந்த கிருஷ்ண அய்யங்கார் தமிழிலும், வடமொழியிலும் சிலேடை, யமகம், சித்திரக் கவிகள் எல்லாம் பாடுவார். திவ்யப் பிரபந்தம் நாலாயிரமும் மனப் பாடம்; சாமகானம் செய்வதில் இவருடைய திறமை பிரசித்தமானது ஐரோப்பிய அறிஞர் ஒருவர் இவரது சாமகானத்தை ஒலிப் பதிவு செய்துகொண்டு போயிருக்கிறார். தோததாத்திரி மடம் என்னும் வானமாமலை ஸ்ரீவைஷ்ணவ மடத்தில் ஆஸ்தான வித்வானாக இருந்தார். எனினும் சைவ வைஷ்ணவ சமரச உணர்ச்சி உள்ளவர். பி. ஸ்ரீ. அவாகள "சிவநேசச செல்வர்கள்" என்னும் சைவ நூல் இரு பாகங்களில் எழுதி வெளியிட்டு இருப்பதில் ஆச்சர்யம் இல்லை. மாணிக்கவாசகரைப் பற்றி ஓர் ஆராய்ச்சியும் பி. ஸ்ரீ. அவர்களின் போற்றத்தக்க நூல்களில் ஒன்றாகும்.

பி. ஸ்ரீ. அவர்கள் தென் பாண்டிய நாட்டில் விட்டலபுர கிராமத்தில் பிறந்தவர். தாமிரபருணி ஆறு ஒரு கல் தூரத்தில் வளைந்து செல்கிறது. அதற்கும் அப்பால் ஒரு கல் தூரத்தில், சிற்பச்செல்வங்களுக்குப்

பெயர்போன கிருஷ்ணபுரம் அன்றும் இன்றும் அமெரிக்காவிலிருந்தும், ஐரோப்பாவிலிருந்தும் கலை விநோதர்களை ஆகர்ஷித்து வருகிறது. பி. ஸ்ரீ. கல்வி கற்றது திருநெல்வேலி இந்து கலாசாலையில். அதன் பிரின்ஸிபாலாக இருந்த ஹெர்பாட் சாம்பியன் துரைக்கு பி. ஸ்ரீ. அவர்களே பின்னாளில் தமிழ் ஆசிரியர் ஆகித் தமிழ் கற்பித்து இருக்கிறார்.

தமிழ் ஆராய்ச்சித் துறையில் பெருந்தொண்டு புரிந்தவரும், லெக்ஸிகன் ஆசிரியராக அளப்பரிய சேவை செய்தவருமான திரு எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் இவருக்கு ஒரு சாலை மாணாக்கர். மிகவும் நெருங்கிய நண்பர் ஆவர். சமீபத்தில் வெளியாகியுள்ள திவ்யப் பிரபந்தப் பதிப்புகளில் முதலாயிரத்தையும், திருவாயமொழியில் ஒரு பகுதியையும் ஸ்ரீ வையாபுரிப் பிள்ளை அவர்கள் சோபிரித்து வெளிக்கொணர உதவினார்கள். அவர் காலமான பின் அந்தப் பணியைப் பூர்த்தி செய்யும் குழுவிலே பி. ஸ்ரீ. யின் மேதையும், ஊக்கமும், ஆர்வமும் பயன்பட்டிருக்கின்றன.

பி. ஸ்ரீ. அவர்களுக்கு கவி பாரதியாரிடமும் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி.யிடமும், மிகவும் ஈடுபாடு உண்டு. நேரில் அவர்களை அறிந்திருந்ததுடன், அவர்கள் தோற்றுவித்த தேசியக் கிளர்ச்சியில்நேரிடையாகப் பங்கு கொண்டார். 1907-ம் வருஷத்தில் நடந்த சுதேசிக் கலகத்தில் இந்து கலாசாலை மாணாக்கர்கள் பலர் பாதிக்கப்பட்டரர்கள். அவர்களில் பி. ஸ்ரீ.யும் ஒருவர்.

கவி பாரதியாருடன் 1918ம் வருஷம் முதல் மூன்றாண்டுகள் நெருங்கிய தொடர்பு கொண்டு வந்தார் பாரதியார், பி.ஸ்ரீ. அவர்களின் இல்லத்திற்கு வருவது வழக்கம் என்பதை நான் அவரிடமிருந்தே கேட்டறிந்திருக்கிறேன். தவிர, பாரதியாரின் இளம்பருவத் தோழரான திரு. வேதநாயகம் பிள்ளை இல்லத்திலும் வேறு பல இடங்களிலும், பாரதியாரே தம் பாடல்களைப் பாடக் கேட்டுக் கேட்டுப் பரவசமாகி இருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

ராஜாஜி அவர்களிடமும், 'கல்கி அவர்களிடமும் மிகுந்த அபிமானம் உள்ளவர். டாக்டர் அன்னி பெஸண்டின் வாக்கு வன்மையும், சமயக் கொள்கைகளும், ஹோம்ரூல் கொள்கைகளும் அவரை வசீகரித்திருந்தன. திவ்யஞான சங்கத்திலும் உறுப்பினராக இருந்திருக்கிறார். காந்தியத்திலும், தேச விடுதலையிலும், இதயபூர்வமான நம்பிக்கை கொண்டவர். அரசியல் போக்குகளை வெகு உன்னிப்பாக கவனித்து வந்தவர். "தமிழ்நாடும் காங்கிரசும்," "கிளைவ் முதல் ராஜாஜி வரை" என்னும் அவரது நூல்களை எடுத்துக் காட்டலாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக, பி. ஸ்ரீ. தம்மை "தமிழின் ஆயுள் மாணவன்" என்று சொல்லிக்கொள்வதில் மிகுந்த திருப்தியும், பெருமையும் கொள்வார். ஆரம்பத்தில் பி. ஸ்ரீ போலீஸ் இலாகாவில் சில ஆண்டுகள் உத்தியோகம் பார்த்திருக்கிறார் என்று சொன்னால் நம்ப முடியாமல் இருக்கிறதல்லவா? அவருடைய தமிழ்ப் பற்று விரைவிலே அவரைப் பேரறிஞர்களுடன் இணைத்து விட்டது. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் தொடர்பும், நட்பும் கிடைத்தன. ஆராய்ச்சி அறிஞர்களும், கம்பன் கலையை பரப்புவதில் மிகச் சிரத்தை கொண்டிருந்தவர்களுமான சகோதரர்கள் திரு கே. என். சிவராஜாவுடனும் திரு குமரேச பிள்ளையுடனும் பழகினார். பேரறிஞர் வ. வே. சு. அய்யர் திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த சேரன்மாதேவியில் குருகுலம் ஒன்று அமைத்துத் தொண்டாற்றி வந்த காலத்தில்

அப் பெரியாரின் கம்பராமாயண ஆராய்ச்சிகளில் மிகுந்த சிரத்தை கொணடார். பி. ஸ்ரீ. அவாகளுக்கு பழைய தமிழில் பேரபிமானம் உண்டென்றால், வளரும் தமிழில் சற்றும் அதற்குக் குறைவு காண முடியாது. அவருடைய தமிழ நடையிலே கம்பீரமும் உண்டு. சுவையும் உண்டு. ஓட்டமும் உண்டு. பல்லாயிரக் கணக்கான மக்கள் அவரது இலக்கிய ஆராய்ச்சி நூல்களையும் விரும்பிப் படிப்பதின் ரகசியம் இதுதான். பெரியாழ்வார், கம்பராமாயண கட்டுரை(பாலகாண்டம், சுந்தர காண்டம்), மூவர் ஏற்றிய மொழி விளக்கு, சுதந்திரச் சிற்பிகள், வினோபா, திருப்பாவை, திருவெம்பாவை, ஔவையார் ஆகிய நூல்கள் நல்ல தமிழ் படிக்கவும், எழுதவும் வழிகாட்டியாக அமைந்து உள்ளன.

பி. ஸ்ரீ. அவர்களைச் சிறிது நேரம் கண்டு பேசினாலும் அதில் பயன் காணலாம் எங்கு நல்ல விஷயங்கள் இருந்தாலும் அதை எடுத்துச் சொல்லிப் பிறரை அனுபவிக்கச் செய்வதில் ஆனந்தங் கொள்வார். அவர் இல்லத்திற்குச் சென்றுவிட்டாலோ சூடான ஆவி பறக்கும் இட்டலியில் தெளிந்த தேனை வட்டித்து உபசாரம் செய்துகொண்டே பி. ஸ்ரீ. இலக்கியச் சுவையையும் உடன் ஊட்டுவார்.

★

போன் : **4037** தந்தி : பிரிண்டிங் ஹவுஸ்

தபால் பெட்டி நெ. **1569**

உயர்தர அச்சு வேலைகளுக்கும்

நேர்த்தியான பிளாக்குகளுக்கும் சிறந்த இடம்

**கமர்ஷியல் பிரிண்டிங் அண்டு**
**பப்ளிஷிங் ஹவுஸ்**

**46, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1**

- [சங்கீதம், சமஸ்கிருதம் இரண்டும் சேர்ந்து பண்படுத்திய உள்ளம் பெற்றவர் டாக்டர் வே. ராகவன். சென்னைச் சர்வகலாசாலையில் சம்ஸ்கிருத இலாகாவின் தலைவர். பேராசிரியரின் சம்ஸ்கிருத ஆராய்ச்சிகள் எண்ணிறந்தவை. யுனெஸ்கோவுடன் தொடர்பு பெற்றவர். பல நாடுகளுக்குப் போய் சம்ஸ்கிருத, மற்றும் இந்திய சுவடி ஆராய்சசி செய்திருக்கிறார். நமது மகாநாட்டு இதழுக்காக டாக்டர் சட்டர்ஜியைப் பற்றியும், டாக்டர் பிலியோஸாவைப் பற்றியும் குறிப்புகள் எழுதித் தந்து உதவியுள்ளார்.]

# பாஷாசார்ய
# சுநீதி குமார் சட்டர்ஜி

டாக்டர் வே. ராகவன்

தமிழ் எழுத்தாளர் இவ்வாண்டு கௌரவிக்கப் போகும் புலவர்களில் ஸ்ரீசுநீதி குமார சட்டர்ஜி இந்தியா முழுவதிலுமே புகழ் பெற்ற புலவராவார்; இவரை தென்னாட்டிலும், தமிழகத்திலும் மொழிப்புலவர் நன்கு அறிவார்கள். மொழியிலக்கணத்துறையில் இந்திய வாசிரியருள் தலைவரான இவரை மேனாட்டு ஆராய்ச்சியாளரும் போற்றுவர்.

சட்டர்ஜிக்கு இன்று வயது 69. இன்னும் இளைஞர் போல்ஊக்கமும், புதிதுபுதிதான விஷயங்களைப் படிப்பது, ஆராய்வது என்ற ஈடுபாடும், சுற்றுப் பிரயாணம் செய்யும் ஆவலும் குன்றாதவர். படிப்பு, சர்வகலாசாலை, எழுத்து இத்துறைகளில் சிறப்படைந்து இன்று பொதுத்துறையிலும் இடம் பெற்று, மேற்கு வங்காளத்தின் மேல் சட்ட சபைக்குத் தலைவராய் விளங்குகிறார்.

இவர் கான்யகுப்ஜத்திலிருந்து வங்க நாட்டிற்கு 12-வது நூற்றாண்டுகளில் வல்லால அரசரால் அழைக்கப்பட்டு, அங்கே குடியேறிய ஸாமவேத அந்தண பரம்பரையைச் சேர்ந்தவர்; இவர்கள் முதலில் குடியேறிய கிராமம் 'சதுர்ஜ்ய' என்ற காரணத்தால் இவர்களை 'சட்டர்ஜி' என்று அழைக்க ஆரம்பித்தனர்.

சட்டர்ஜி சர்வகலாசாலையில் பி. ஏ., எம். ஏ. இரண்டு பரீக்ஷைகளிலும் முதல் பிரிவிலும், முதல் ஸ்தானத்திலும் தேறினர்; இவர் படித்து, முதன்முதல் ஆசிரியராய் இருந்து கற்பித்தது ஆங்கில மொழியும் இலக்கணமும். பின் வங்காள மாகாண சர்க்கார் நடத்தும் ஸம்ஸ்க்ருத பரீக்ஷைகளில் வேத காலத்திய ஸம்ஸ்க்ருதத்தில் பரீக்ஷை கொடுத்துத் தேறினர். 1919-22 இல் மேனுட்டில் படிப்பதற்கான உதவியை சர்க்காரிடம் பெற்று லண்டன், பாரிஸ் இரண்டு இடங்களிலும் மொழியாராய்ச்சியை சிறப்பாய் எடுத்துக் கொண்டு படித்து, டாக்டர் பட்டமும் பெற்றுர். இந்தோ-ஆரியம், பழம் காதிக், பழம் ஐரிஷ், பழம் பாரஸீகம், ப்ராக்ருதம், ஜர்மானிய மொழிகள்-இப்படிப் பல பண்டை மொழிகளில் இவர் பாடுபட்டுத் தேர்ச்சி பெற்றுர். முக்கியமாய் பாரிஸ் நகர் பல்கலைக் கழகத்திலும், மொழிகளுக்கென நிறுவப்பட்ட நிலயங்களிலும் ஸ்லாவிக், க்ரீக், லாதின், ஆஸ்த்ரோ-ஆசியம், மத்ய ஆசியாவைச் சார்ந்த கோடனீஸ், ஸாக்தியன் முதலிய மொழிகளையும் பயின்றுர்.

திரும்பி வந்தவர் கல்கத்தா சர்வகலாசாலையில் மொழிப் பேராசிரியராய் நியமிக்கப்பட்டு, 38 ஆண்டுகள் தன் ஆசிரியத் தொண்டை சிறப்பாய் நடத்தி வந்ததுமல்லாமல், இவ்வாண்டுகளில் தன் மொழி-அறிவை மேலும் வளர்த்துக் கொண்டார். ஸம்ஸ்க்ருதத்திலிருந்து பிறந்து வளர்ந்த பல வட இந்திய மொழிகள் சென்ற ஆண்டுகளில் நன்குஆராயப்பட்டு வருவதற்கானஉதவியை சட்டர்ஜிஅவ்வப்போது செய்து வந்திருக்கிறுர். வங்காளத்திலும், ஆங்கிலத்திலும் ஆயிரம் பக்கங்களுக்கு மேலான நூல் ஒன்றில் வங்காள மொழி வளர்ச்சியைப்பற்றி எழுதியிருக்கிறுர். இந்தோ-ஆரியமும், ஹிந்தியும் என்றும், ராஜஸ்தானி மொழியைப்பற்றியும் இவர் எழுதியிருக்கும் ஆராய்ச்சிகளைப் போற்றி இவருக்கு விருதுகளும், பதக்கங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன. மைதிலி மொழியை ஆராய்வதற்கு இன்றியமையாத முதல் நூலான வர்ணரத்னகரம் என்ற நூலையை அச்சிற்குக் கொண்டு வந்தார். கடைசியாய் இந்திய சர்க்கார் நியமித்த சம்ஸ்க்ருத கமிஷனுக்குத் தலைவராயிருந்து, அம் மொழிக்கும் தாம் செய்யவேண்டிய பணியை ஆற்றினர். இதற்காக நாட்டைச் சுற்றி வரும்போது பல விடங்களில், சமஸ்க்ருதத்திலேயே பேசினர்.

சட்டர்ஜி வெரும் ஆசிரியராயும் ஆராய்ச்சியாளராயும் மட்டும் இருந்துவரவில்லை. தேசீயப் பற்றுடன் கூடிய பல

கட்டுரைகளை எழுதி யிருப்பதோடு, பண்டைக்காலத்தில் இந்தியப் பண்பாடுபரவிய தென் ஆசிய நாடுகள் முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்து கடல் கடந்த பாரத கலாசாரத்தைப்பற்றி விரிவாய் எழுதியிருக்கிறார். சட்டர்ஜி சுற்றுப்பிரயாணத்தில் அவாக்கொண்டவர். கல்கத்தா சர்வகலாசாலை, இந்திய சர்க்கார் இவர்கள் சார்பில் நான்குமுறை ஐரோப்பாவிற்குச் சென்று மொழி மகாநாடு, கிழக்கு தேசப் பண்பாடு மகாநாடு, ப்ரெயில் திட்டத்திற்கான மகாநாடு முதலியவற்றில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார். இருமுறை அமெரிக்க சர்வகலாசாலை யொன்றிலும் விருந்து ஆசிரியராயிருந்திருக்கிறார். சீனத்திற்கும், ஜப்பானிற்கும்கூடப் போயிருக்கிறார்.

பாரத ஆதி வாசிகளின் மொழிகளிலும், சம்ஸ்கிருதத்தின் வழிவந்த மொழியல்லாத தென் மொழிகளிலும் சட்டர்ஜிக்கு பெரும் ஈடுபாடுண்டு. பாரதப் பண்பாடென்பது மிகப் பண்டைக்காலம் தொட்டு வாழ்ந்துவரும் மக்கள் அனைவரும் கூடி வளர்த்த விந்தை எனத் தம் விரிவுரைகளில் விளக்கியிருக்கிறார். மொழி யிலக்கண ஆராய்ச்சிகளில் தென்னாட்டு மொழிகளுக்கும தென்னிலக்கியங்களுக்கும் தக்க இடம் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்துவோரில் சட்டர்ஜி முக்கியமானவர்.

ஹிந்தியை பலாத்காரமாய் ஆட்சிமொழியாய்ச் செய்வதில் இவருக்கு நம்பிக்கையில்லை; ஆங்கிலம் அவசியம் வேண்டும் என்றும், ஸம்ஸ்க்ருதம் நாட்டின் ஒற்றுமைக்கும் பண்பாட்டிற்கும் அவசியமென்றும் இவருடைய கொள்கை. மொழி ப்ரச்னையில் இவர் பஞ்சசீல மார்க்கத்தை கடைப்பிடித்தவர்.

வங்காள மொழியிலும் ஆங்கிலத்திலுமாக சுமார் 30 புத்தகங்களையும், 350 கட்டுரைகளையும் இவர் இதுகாறும் எழுதி யிருக்கிறார். வங்கத்தில் இவர் நல்ல உரைநடை எழுத்தாளராய்க் கருதப்படுகிறார்.

ரவீந்த்ரநாத டாகூர் இவருக்கு 'பாஷாசார்யர்' என்ற பட்டத்தைக் கொடுத்தார்; இப்பட்டத்தை வேறொருவருக்ும் இவ்வளவு பொருத்தத்தோடு கொடுக்க முடியாது.

★

[எழுத்தாளர் சங்கத்தில் தனக்குப் பதக்கம் தருகிற செய்தியைக் கேட்டு, அதை ஏற்றுக்கொண்டு நன்றி தெரிவிக்கும் ரீதியில் டாக்டர் சுநீதி குமார் சட்டர்ஜி சங்கக் காரியதரிசிக்கு எழுதிய கடிதத்தில் பின் வருமாறு எழுதியுள்ளார்.]

# வங்காளிகளும் தமிழர்களும்

**டாக்டர் சுநீதி குமார் சட்டர்ஜி**
**(நன்னெறி முருகன்)**

---

என் கல்லூரி நாட்களிலேயே எனக்கு முதல் முதலாகச் சங்கத் தமிழ் இலக்கியம் பற்றித் தெரியவந்தது. அரும் பெரும் முன்னோடி நூலான திரு. வி. கனகசபைப் பிள்ளையின் "தமிழர்கள்-1800 வருஷங்களுக்குமுன்" என்பதைப் படித்து நான் சங்கத் தமிழ் பற்றிய விவரங்களை அறிந்துகொண்டேன். தமிழகத்தின் பழம்பெரும் பெருமைகளையும் பண்பையும் பற்றிய சிறந்த நூல் அது. தமிழ் இலக்கியத்தின் வளத்தையும், விரிவையும், ஆழத்தையும், அழகையும் எனக்கு எடுத்துச் சொல்லிய இன்னொரு நூல் என்று M. S பூரணலிங்கம் பிள்ளையின் "தமிழ் இலக்கிய ஆரம்பப் பாடம்" (Primer of Tamil Literature) என்பதைப் பாராட்டுகிறேன். ஆனால் இதற்கெல்லாம் முந்தியும்கூட, நான்பள்ளிக்கூடத்து மாணவனாக இருக்கும்போதே கல்கத்தாவின் தெருக்களில் தமிழ்முறையில் நடந்த ஒரு சுவாமி புறப்பாட்டை கண்டறிந்து ஆனந்தித்தேன்—அங்கு தமிழ் முழக்கத்தைக் கேட்டேன். பல்லாண்டுகளுக்கு முன் கல்கத்தாவில் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் ஒரு சுப்பிரமணிய சுவாமி கோயில் கட்டியிருக்கிறார்கள். அந்த சுப்பிரமணிய சுவாமியின் உற்சவமூர்த்தியைத் தெருவில் பவனி எடுத்து வந்தார்கள். சுவாமியைப் பின்தொடர்ந்து வந்த சில தென்னிந்தியப் பாடகர்கள் பழந்தமிழ்ப் பாடல்கள் பலவற்றைப் பாடி வந்தார்கள். அருணகிரியின் புகழிலிருந்தோ, அல்லது மாணிக்கவாசகரின் திருவாசகத்திலிருந்தோ பாடினார்கள் என்று எண்ணுகிறேன். என் மனத்தில் அந்தப் பாடும் முறையும், அழகும் ஆழ்ந்து பதிந்தன.

பின்னர் G. U. போப்பின் திருவாசக ஆங்கில மொழி பெயர்ப்பைப் படிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அது முதலே என்னால் திருவாசகத்தின் அழகுகளையும், அமைதிகளையும் என் மனத்தைவிட்டு அகற்ற முடிந்ததில்லை.

சம்ஸ்கிருத இலக்கியத்தின் ஸ்தானம் பற்றி எவ்விதப் பிரச்னைக்கும் இடமே கிடையாது. ஆனால் சம்ஸ்கிருத இலக்கியத்துக்கு அடுத்தபடியாக, நமது தேசத்தின் பழம்பெரும் இலக்கியங்களில் தமிழ்தான் முதலில் நிற்பது என்பதில் சந்தேகத்துக்கு இடமேயில்லை. காலத்தினால் மட்டும் அல்ல அதன் பொருளில், பல்வேறு பரந்த துறைகளில், காலத்தை வெல்லும் தன்மை பெற்ற பல சிறப்பான நூல்களினால் கூட தமிழ் முதன்மையானது என்று சொல்லவேண்டும். சங்க காலத்து இலக்கியம் என்று சொன்னால் அதற்கு ஈடே கிடையாது என்றுதான் சொல்ல வேண்டும். சிறப்பாகப் பத்துப்பாட்டு, பதிற்றுப் பத்து முதலியவற்றுடன் இவை போன்ற தொகுப்பு நூல்களும், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நீண்ட காவியங்களும் ஈடு இணையற்றவை. இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் தமிழர் வாழ்வும் பண்பும் எப்படியிருந்தன என்பதை அழகுடன் நமக்கு அறிவுறுத்தித் தெரியவைக்கின்றன. அதே சமயத்தில் அவை கவிதையாகவும் சிறப்புற்றுத் திகழ்கின்றன. இந்தச் சங்க இலக்கியமும் அத்துடன் ஆழ்வார்களுடைய நாலாயிரத் திவ்யப் பிரபந்தப் பாட்டுகளும், நாயன்மார்களுடைய தேவாரப்பாட்டுகளும் சேர்ந்து இந்திய இலக்கியத்திலேயே பெரிய ஐசுவரியமாகத் திகழ்கின்றன. இந்திய இலக்கியத்திலே என்று சொல்வதும் பிசகு. எந்த இலக்கியத்திலுமே இது பெரிய ஐசுவரியம்தான்.

தமிழ் பக்திமான்களுடைய பாடல்கள்—அவை சைவமோ, வைஷ்ணவமோ, எதுவானாலும்—படிப்பவர்களுடைய மனப்பான்மையை உயர்த்தும் அற்புத சக்தி வாய்ந்தவை. இந்தப் பாடல்களை நாம் படிக்கும்போது பழங்காலத்து அந்த மகாத்மாக்களுடனே ஒன்றிவிடுகிறோம்—ஒரு பிரார்த்தனை லயத்திலே. மற்ற எந்த இலக்கியத்திலுமே அடையமுடியாத ஒரு ஆன்மீக அநுபவம்அது.

அதற்குப்பின் வந்த தமிழ இலக்கியாசிரியர்களும் இருக்கிறார்கள்—இருந்து தமிழை எப்படி வளப்படுத்தி இருக்கிறார்கள்! ஆனால் சமயம், பக்தி, ஈசுவர அநுபவம் என்கிற துறைகளிலே தான் மற்ற இந்திய இலக்கியங்களிலிருந்து தமிழ் இலக்கியம் மாறுபட்டு பெருமைபெற்று நிற்கிறது—உதாரணமாக கம்பரின் ராமாயணத்தையும், தாயுமானவரின் பாடல்களையும் சொல்லலாம்.

குறள் மகத்தான நூல். அதற்கு ஒரு வங்காளி மொழி பெயர்ப்பு இருக்கிறது. ஆனால் இந்த மொழி பெயர்ப்பு தமிழிலிருந்து நேரடியாகச் செய்யப்பட்டதல்ல. ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. கல்கத்தாவிலும் ஹௌராவிலுமுள்ள சில தமிழ் நண்பர்கள் இப்போது குறளைத் தமிழிலிருந்து வங்காளியில் மொழிபெயர்த்துத் தரும் பணியில் ஈடுபட்டுள்ளனர் வங்காளமும் தமிழும் இப்பணியில் நன்றாக ஒத்துழைக்கிறது—வங்கமொழி அறிந்த தமிழ் அறிஞர்களுக்கு தமிழ்மொழி அறிந்த வங்கமொழிக்காரர்கள் உதவி செய்கிறார்கள்.

இன்னொரு பெரிய தமிழ் நூல் மொழிபெயர்ப்பும் மௌனமாக நடைபெற்று வருகிறது. இதைச் செய்பவர் வைஷ்ணவ சந்நியாசி யாகிவிட்ட ஒரு வங்காளி டாக்டர். பெயரும் புகழும் பெற்றவர். ஸ்ரீ ராமானுஜரைப் பின்பற்றும் வைஷ்ணவ சந்நியாசியாகி விட்டார் அவர்—ஸ்ரீ யதீந்திர ராமானுஜதாஸா என்று பெயர் வைத்துக்கொண்டிருக்கிறார் (பூர்வாசிரமத்தில் அவருடைய வங்கா ளிப் பெயர் டாக்டர் இந்து பூஷண வஸு என்பதாகும்). கல்கத் தாவுக்குச் சில மைல்கள் வடக்கேயுள்ள கர்தா என்கிற கிராமத் திலே அவர் நேர்த்தியான வைஷ்ணவக் கோயில் நிர்மாணித்திருக்கி றார். பாகீரதி நதிக்கரையில் உள்ள இந்த இடம் அமைதி தவழும் ஸ்தலம். இங்கு ஸ்ரீசம்பிரதாய முறைப்படி பூஜைவிதிகள் அனுஷ்டிக்கப்படுகின்றன. ஸ்ரீசம்பிரதாயத்தைச் சேர்ந்த சம்ஸ் கிருத, தமிழ் நூல்களை வங்காளியில் வெளியிடும் வேலையை ஸ்ரீராமானுஜதாஸா மேற்கொண்டிருக்கிறார். உஜ்ஜீவனு என்று ஒரு மாதப் பத்திரிகையை நடத்துகிறார் ஸ்ரீ ராமானுஜதாஸா. அதிலே பிரபந்தங்களிலிருந்து பல பகுதிகளை அவர் வங்காளி லிபியில் எழுதி வெளியிட்டு, அப்பகுதிகளுக்கான நேர் வங்காள மொழி பெயர்ப்பையும் வெளியிட்டு வருகிறார். இந்த மொழிபெயர்ப்பு இரண்டுவிதமாகவும் அமைந்துள்ளது. நேர்ப் பத மொழிபெயர்ப்பு ஒன்றும், அடியிலே வங்க கவிதையாகவும் அவர் மொழிபெயர்த்து வெளியிடுகிறார் என்பது விசேஷம். ஸ்ரீ ஆண்டாளின் திருப் பாவையை வங்காளி மொழியில் விளக்கங்களுடன் வெளியிட்டி ருக்கிறார்.

ஆழ்வார்களைப்பற்றியும் ஸ்ரீராமானுஜருடைய வாழ்க்கையைப் பற்றியும் ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தருடைய நூல்கள் தமிழ்நாட்டு வைஷ்ணவபக்திசமய தத்துவத்தை வங்காளிகளிடையே அறிமுகம் செய்து பரப்பப் பயன்பட்டன. தமிழ் இலக்கியம் பற்றி உற்சாக மாக உழைத்து வரும் இரண்டொரு வங்க அறிஞர்களில் ஸ்ரீசுதான்ஸு பானர்ஜி என்பவரைச்சிறப்பாகச்சொல்லவேண்டும். அவர் சர்க்காரில், பொருளாதார இலாகாவில், சிறப்புடன் வேலை பார்த்தவர். தமிழ் இலக்கியத்தின் பல சிறப்பான அம்சங்களைப் பற்றி அவர் பல இடங்களில் சொற்பொழிவுகள் ஆற்றியிருக் கிறார்.

ஆனாலும் துரதிருஷ்டவசமாகத் தமிழ் இலக்கியத்திலிருந்து நேரடியாக வங்க மொழிக்கு இலக்கிய நூல்களைப் பெயர்த்துத் தரக்கூடிய அறிஞர் யாரும் இன்னும் தோன்றவில்லை. தோன்ற வேண்டும்.

அறிவு, ஆன்மீகம் என்கிற இரண்டு அம்சங்களிலுமே வங்காளத்துக்கும் தமிழ் நாட்டுக்கும் ஓரளவு ஒருமைப் பாடும் இசைவும் இருக்கின்றன. ஒன்றையொன்று அறிந்தே வளர்ந்திருக்கின்றன என்றும் சொல்லலாம். பண்டை நாட்

களில், இந்தியா பூராவிலுமே, பிரதேசத்துக்குப் பிரதேசம் அறிஞர்களும் சாதாரண மக்களும் போய் வந்து விஷயங்களை அறிவதற்கும் பரப்புவதற்கும் வசதி இருந்து வந்திருக்கிறது. வட இந்தியாவைத் துருக்கர்கள் வென்றபின் பல ஹிந்து அறிஞர்கள் தென்னாட்டு ராஜ்யங்களில் அடைக்கலம் புகுந்தார்கள். அவர்கள் தமிழ்நாடு வரை போனார்கள் என்பதும் தெரிகிறது. இந்திய சமய அநுபவத்திலும் தத்துவத்திலும் புதிய அலையாக எழுந்த பக்தி அலை தென்னிந்தியாவிலேதான் உருப் பெற்றது என்பதை நமக்கு ஒரு பிரசித்தி பெற்ற சம்ஸ்கிருத ஸ்லோகம் அறிவுறுத்துகிறது. இந்தத் திசையில் வழி காட்டிகள், முன்னோடிகள் என்று நாயன்மார்களையும் ஆழ்வார்களையும் சொல்லலாம் வட இந்திய பக்தரான ராமானந்தா நேரடியாக ஸ்ரீராமாநுஜரின் அழைப்பை ஏற்றுச் சமைந்த மனம் பெற்றவர். வங்க சைதன்யாவும் வங்காளத்திலிருந்து தென்னிந்தியாவில் கன்னியாகுமரி வரையில் பிரயாணம் செய்தார் என்பதில் சந்தேகத்துக்கு இடமே யில்லை. தென்னிந்திய பக்தி மார்க்கம் அவர் மனத்தை வெகுவாக ஈர்த்தது என்பதற்கும் ஆதாரங்கள் உண்டு. வைஷ்ணவ பக்தி மார்க்கத்தைச் சொல்லும் இரண்டு பெரு நூல்களை ஸ்ரீ சைதன்யர் தென்னிந்தியாவிலிருந்து வங்காளத்துக்குக் கொணர்ந்தார்—லீலா சுகர் எனப்படும் பில்வமங்களரின் நூல்களையும், பிருஹம சம்ஹிதாவையையும் அவர் கொணர்ந்தார். ஸ்வேதஸ்வர உபநிஷத்தின் வைஷ்ணவ உருவம் என்று இந்த இரண்டாவது நூலைச் சொல்லாம். திருப்பதி, காஞ்சீபுரம், ராமேஸ்வரம், கன்யாகுமரி போன்ற ஸ்தலங்கள் அகில இந்திய முக்கியத்வம் பெற்ற திவ்ய ஸ்தலங்கள், வங்காளத்திலிருந்து பலர் அங்கெல்லாம் சென்று க்ஷேத்திராடனம் செய்து திரும்பினர் என்பது நிச்சயம். சமயத்தின் உயர் கொள்கைகளை, அடிப்படைத் தத்துவங்களை நாடெங்கும் பரப்புவதில் சம்ஸ்கிருதப் புலவர்கள் சுறுசுறுப்பாக இருந்தனர். பல பிராந்தியங்களில், பிராந்தியம் பெயர்ந்த ஆசாரியர்கள் இருந்திருக்கிறார்கள். சமய சீர்திருத்தவாதியான வல்லபாசாரியர் ஆந்திரர். அவரைப் பக்திமானாகவும், குருவாகவும் பின் பற்றுபவர்கள் வட இந்தியாவிலும் கூர்ஜரத்திலும் ஏராளமாக இருந்தனர். மொகலாய சக்கரவர்த்தி ஷாஜஹான் சபையிலே தென்னிந்தியாவிலிருந்து வந்த ஜகன்னாத பண்டிதர் பெரும் புலவராக அழியாப் புகழுடன் வீற்றிருந்தார். பல பெரும் புகழ் பெற்ற தென்னிந்திய அறிஞர்கள் வாரணாசியிலே வசித்து வந்தனர். இமயத்தில் பத்ரிநாத், கேதார் நாத் ஆலயங்களில் பூஜை செய்யும் குருக்கள்மார்கள் கேரளாவிலிருந்து வந்த பிராம்மணர்கள் என்பதும் கவனத்தில் வைக்கவேண்டிய விஷயம். இந்தியாவில் பல பாகங்களுக்கும் இடையே பண்பு, சமயம் முதலியனபற்றிய போக்கு வரத்து நெருக்கமாகவே இருந்தது.

இத்தனையும் தவிர, ராஜேந்திர சோழன் தலைமையில் வெற்றி கண்ட சேனை மேல் வங்கம் வரை வந்தது என்பதற்கான ஆதாரங்கள் தஞ்சாவூர்க் கோயிலிலும் வேறு பல கோயில்களிலும் காணக் கிடக்கின்றன. ஆனால் இது ஒரு நிலையான விஷயம் அல்ல. சரித்திர காலம் பூராவும் அமைதியான போக்குவரத்தும், கருத்துப் பரிமாறுதல்களும், சமய வளர்ச்சிக்கான தொடர்பும் இரண்டு பிரதேசங்களுக்கும் இடையே இருந்து வந்துள்ளன. சமீப காலத்தில் தமிழ் நாட்டையும் வங்கத்தையும் பிணைக்கும் தங்கச் சங்கிலியின் ஒரு கரணையாக விவேகானந்த ஸ்வாமியின் பெயர் விளங்குகிறது. ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் புனிதமான குருத்வம் இதற்கும் பின்னணியாக உள்ளது. விவேகானந்தருடன் தமிழ் நாட்டுக்கும் வங்கத்துக்கும் இடையே உள்ள ஆன்மீகப் பிணைப்பு இறுகியது என்று சொல்லலாம். ராமகிருஷ்ணர், விவேகானந்தர் இவர்கள் மூலம் தமிழர்களும் வங்காளிகளும் ஒருவரை ஒருவர் நெருங்கிவந்து அதிகமாக அறிந்து கொண்டு ஆன்மீகமானதோர் உறவு பூண்டனர். அது அறிவு உறவா, ஆன்மீக உறவா என்று பிரித்துக் சொல்வது சிரமம். விவேகாநந்தரின் பெருமையை முதலில் கண்டு அறிந்தவர் ஒரு ரஜபுத்திரத் தலைவர்-கெத்ரி ராஜா. ஆனால் அந்தப் பெருமையை அறிந்து அதை முழுவதும் உபயோகப் படக்கூடிய வகையில் விவேகாநந்தரை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தது தென்னிந்தியா தான்-தமிழர்கள் தான். அமெரிக்காவில் விவேகாநந்தர் பிரசன்னமாக இருந்ததும், 1893-ல் அவர் சர்வதேச சமய மகாநாட்டில் கலந்து கொண்டு பிரசங்கம் செய்ததும் மேலை நாட்டு மனிதனின் ஆன்மீக சரித்திரத்திலே ஒரு திருப்பம் என்று மேலை நாடுகளிலேயே ஒப்புக் கொள்கிறார்கள், கீழை நாட்டுச் சமயப் பண்பு மேலை நாடுகளை விவேகாநந்தர் மூலம் எட்டியது. வேதாந்த சிந்தனைகளுடன், உலகத்துச் சமயங்களின் சிறந்த சிந்தனைகளை யெல்லாம் ஒன்று திரட்டி, ஒருமைப் பாட்டுடன், இன்றைய மனிதனுக்கு ஒரு சிறப்பான கருத்தைத் தரும் காரியத்தை, விவேகாநந்தர் மூலம், வங்கமும் தமிழ் நாடும் சேர்ந்து சாதிக்க முயன்றன. இன்றையத் தமிழரின் மறு வாழ்வுக்கும் இலக்கியத்தின் மறு மலர்ச்சிக்கும் காரணமான மிகச் சிறந்த கவியான சுப்பிரமணிய பாரதி, பிரயாகைக்கும் வாரணாசிக்கும் எத்தனை உரியவரோ அத்தனை கல்கத்தாவுக்கும் உரியவர் என்பது வங்காளிகளாகிய எங்களைப் பெருமிதம் கொள்ளச் செய்கிறது. கல்கத்தாவில் ஸ்வதேசி இயக்கம் உருவெடுத்த காரணத்தினாலே தான் கவி சுப்பிரமணியர் தேச பக்தராக உருவெடுத்தார் என்பது எங்களுக்கும் பெருமை தருகிறது; தென்னிந்தியர்களுக்கும் ஒரு எடுத்துக் காட்டாக, ஆழ்ந்த அர்த்தமுள்ள ஒரு சம்பவமாகத் தோன்ற வேண்டும்.

வங்கத்தில் உள்ள நாங்கள், தென்னிந்தியர்களைப் போலவே பல விஷயங்களிலும் சம்பிரதாயங்களையும் தேசாச்சாரங்களை

யும் காப்பாற்றி வந்திருக்கிறோம். உதாரணமாக நாங்கள் இன்னமும் வேட்டி தான் கட்டுகிறோம். தென்னிந்தியாவில் போலவே இன்னமும் எங்கள் பிராந்திய ஆடை வேட்டியும் சட்டையும், காலில் செருப்புமாகவே இருக்கிறது. கிராமங்களிலும், இன்றும் எங்களுடைய சடங்கு விருந்துகளிலும் நாங்கள், தமிழர்களைப் போலவே, வரிசையாகக் கீழே உட்கார்ந்து சாப்பிடுகிறோம். எங்கள் உணவும் அரிசி தான். வாழை இலை போட்டுத்தான் சாப்பிடுகிறோம். தெற்கே தமிழர்கள் சாப்பிடுவது போலவே நாங்கள் எங்கள் உணவின் கடைசி அம்சமாகத் தயிர் சாப்பிடுகிறோம்; தயிர் இல்லாமல் உணவு பூர்த்தியாவதில்லை; அது தவிர்க்க முடியாத உணவு அம்சம். பழங் காலத்திலிருந்து நமக்கு வந்துள்ள விசேஷங்களில் இது போன்ற சின்னக் காரியங்கள் நூற்றுக் கணக்கில் நமக்குள் பொதுவாக இருக்கின்றன—ஒரு மாறுதலும் இல்லாமல் இன்றும் இருக்கின்றன. இவை மாறுபடாமல் தமிழர்களும் வங்காளிகளும் காப்பாற்றி வந்துள்ளனர். இவை யெல்லாம் மேலெழுந்தவாரியான விஷயங்கள். ஆனால் ஆழத்திலே, அறிவுத் துறையிலும் ஆன்மீகத் துறையிலும் ஒரு ஒற்றுமையும் ஒரே பண்பாடும் இரண்டு பிரதேசங்களிலும் இன்னமும் காணக்கிடைக்கின்றன என்பதுதான் பெரிய விஷயம். இந்த ஒருமையையும் பண்பாட்டு உணர்ச்சியையும், ஆன்மீகத்தையும் அறிவையும் இன்னமும் வளர்க்கவேண்டும், இந்த இரண்டு பிரதேசங்களிலும் மனிதர் மனத்தை இயக்கும் அடிப்படையான கருத்துக்களை அறிந்து கொண்டு நாம் ஒன்று சேரவேண்டும், இன்னும் நெருங்கி வர முயலவேண்டும். மொழி என்கிற தடை பெரிய தடையல்ல—அதைச் சுலபமாகவே தாண்டிவிடலாம். இந்த விஷயத்தில் சம்ஸ்கிருதத்தின் ஒரு சிறப்பையும் நான் இங்கு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். முக்கியமாகத் தமிழ் பேசும் சகோதரர்களுக்கு இதைச் சொல்ல வேண்டியது அவசியம் என்று எனக்குத் தோன்றுகிறது. முந்திய தலைமுறையைச் சேர்ந்த தமிழ் அறிஞர்களே இதை முழு மனத்துடன் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். சம்ஸ்கிருதத்தின் ஸ்தானம் சிறப்பான தொன்று, இந்தியாவின் பல பாகங்களையும் பிணைக்கும் ஒரு சங்கிலியாகச் சம்ஸ்கிருதம் இன்னமும் இருக்கவேண்டும்.

தமிழ் இலக்கியத்திலே புது மலர்ச்சியை உண்டாக்கித் தரும் சாதனமாகத் தமிழ் எழுத்தாளர் சங்கம் இயங்கவேண்டும் என்று வாழ்த்துகிறேன். தமிழ் எழுத்தாளர் சங்கம் மேலும் மேலும் வெற்றி பெறவேண்டும் என்று விரும்பி வேண்டுகிறேன். இதனாலெல்லாம் வங்கத்திலுள்ள நாங்களும் பயன் அடையவேண்டும், அடைவோம் என்றும் நம்புகிறேன்.

★

[கல்கத்தா தமிழ்ச் சங்கத்தின் காரியதரிசியான பநதி வங்க மொழிக்கும் தமிழுக்கும் இடையே ஒரு பாலமாக இருக்கிறார். அவருடைய நட்புத் தன்மையையும் விருந்துபசரணையையும் தமிழ் எழுத்தாளர்கள் அறிவார்கள். இவ் விதழுக்கு என்று, டாக்டர் சட்டர்ஜியை அறிமுகம் செய்துவைக்க எழுதிவந்த கட்டுரை இது.]

# பன்மொழிப்புலவர் டாக்டர் சுநீதி குமார் சட்டர்ஜி

"பநதி"

கங்கை நதி பாயும், பொன்கொழிக்கும் வளநாடு வங்கத்தில் ஹௌரா மாவட்டத்தில், சிப்பூர் கிராமத்தில், 1890-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ம் தேதி டாக்டர் சுநீதி குமார் சட்டர்ஜி தோன்றினர். இவருடைய தந்தையார் பாபு ஹரிதாஸ் சட்டர்ஜி ஒரு பேரறிஞர்.

பல்வேறு இந்திய மொழிகளிலும், மேலைநாட்டு மொழிகளிலும் பாண்டித்யம் பெற்ற பன்மொழிப் புலவர் டாக்டர் சட்டர்ஜி அவர்கள் தமது தாய்மொழியாகிய வங்காளிக்கு அடுத்தபடி வடமொழியையும் தமிழையும் நேசிப்பவர். அவருடைய தமிழ்க் காதல் அவருடைய பிள்ளைப் பிராயம் தொட்டே வளர்ந்த தொன்று. அவர் சிறு பையனாக இருந்தபோது, கல்கத்தா மாநகரின் ஒரு பகுதியான "படாபஜார்" பிராந்தியத்தில் குடியேறியிருந்த தமிழகத்தைச் சார்ந்த வணிகப் பெருமக்கள் தமிழ் மொழியில் ஒருவருக்கொருவர் பேசுவதைக் கூர்ந்து கவனிப்பாராம். ஆண்டுக்கொரு முறை அவர்கள் சுப்பிரமணிய சுவாமி விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவது உண்டு. அப்போது சுப்பிரமணிய சுவாமி வீதி உலா வருவதற்கு ஏற்பாடு செய்வார்கள். சுவாமி உலா வரும் போது அந்த வணிகப் பெருமக்கள் இசையோடு தேவாரம், திருவாசகம் ஆகியவைகளைப் பாடி வருவார்கள். அதைக் கேட்டு மெய்மறந்து அவர்களுடனே வீதி சுற்றி வருவாராம் இளைஞர் சுநீதி குமார். அவர்கள் பாடிய பாட்டின் அடிகளில் "திருப்பெரும் துறை உறை சிவபெருமானே" என்கிற வரி அவர் உள்ளத்திலே பதிந்து விட்டது.

அப்போது முதலே தமிழைக் கற்கவேண்டும், தமிழ் நூல்களைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வமும் காதலும் அவருக்குத் தோன்றிவிட்டன. பின்னர் மொழி ஆராய்ச்சி மாணவராக இருந்தபோது, பல மொழிகளைக் கற்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்ததைப் பயன்படுத்திக் கொண்டு சிறிது சிறிதாகத் தமிழைக் கற்கத் துவங்கினர். பேரறிஞர் ஜி. யூ. போப் அவர்களின் "தமிழ் இலக்கிய வரலாறு," "திருக்குறள்," "நாலடியார்," 'திருவாசகம்" ஆகிய நூல்களின் மொழி பெயர்ப்பு ஆகியவை அவருக்கு மிகவும் துணை புரிந்தன. யாழ்ப்பாணப் பேரறிஞர் திரு. வி. கனகசபை பிள்ளை அவர்களின் "1800 ஆண்டுகளுக்கு முன்னைய தமிழர்கள்" என்ற நூல் அவருக்கு மிகவும் உதவியாக இருந்தது. சங்க இலக்கியம், ஆழ்வார்கள், நாயன்மார்கள் பாசுரங்கள், திருவாசகம், திருமந்திரம் ஆகியவை அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. "மற்றைய புராதன இலக்கியத்தில் நான் பெருத அமைதியையும் ஆனந்தத்தையும் இந்த அற்புதமான தமிழ்ப் பொக்கிஷங்கள் மூலம் பெற்று வருகிறேன்" என்று பெருமிதத்துடன் அடிக்கடி கூறும் தகையாளர் இவர். சுமார் ஐம்பது ஆண்டுகட்கு முன்னர் தமிழ் நாடு முழுவதும் முதன் முதலாக இவர் சுற்றுப்பிரயாணம் செய்தபோது தமது வடமொழிப் பெயருக்குச் சமானமான 'நன்னெறி முருகன்' என்ற தமிழ்ப் பெயரைச் சூட்டிக் கொண்டார். சுமார் ஐம்பது ஆண்டுகட்கு முன்னர் வங்காளியில் வெளியான "திருக்குறள்" மொழி பெயர்ப்பு நூலுக்கு அற்புதமான முறையில் அவர் முன்னுரை வழங்கியிருக்கிருர். திருக்குறள் நூலில் அவர் எப்படி ஊறித் திளைத்திருக்கிருர் என்பதற்கு அவருடைய அந்த முன்னுரை எடுத்துக்காட்டு.

அண்மையில் இத்தாலிய மொழியில் வெளியான இவருடைய "பாரத மொழிகளின் இலக்கிய வரலாறு" என்ற மாபெரும் நூலில் ஒரு பெரும் அத்தியாயத்தை தமிழ் மொழியின் தோற்றம், இலக்கிய வரலாறு ஆகியவைகளுக்கு ஒதுக்கி யிருக்கிருர். பல்வேறு உலக மொழிகளில் இந்நூல் வெளிவர இருக்கிறது. உலக மக்களுக்குத் தமிழ் மொழியின் வரலாற்றை நல்ல முறையில் அறிமுகப்படுத்திய பெருமை இவருக்கு உண்டு. தற்போது மேற்கு வங்க மேல் சபையின் தலைவராகப் பணியாற்றும் இவர் பாரத நாட்டின் பல்வேறு இலக்கிய, கலாசார ஸ்தாபனங்களில்

## நீங்கள் அவசியம் வாசிக்க வேண்டிய

## எங்களின் சிறந்த வெளியீடுகள்

1. பாரதி பாடல்கள் (தொகுப்பு) ஜீவா - 1-00
2. கம்பனும் பாரதியும் ,, - 0-25
3. பாரதியின் தத்துவ ஞானம் ,, - 0-25
4. வள்ளுவர் வாழ்ந்த தமிழகம்—சாமி சிதம்பரனார் - 2-50
5. இளமைப் பிராயத்திலே (மலிவு) டால்ஸ்டாய - 3-00
6. புதுப்புனல்—இவான் துர்கெனெவ் - 3-00
7. தலைஞனின் கதை (மலிவு) ஆண்டன் செக்காவ் - 1-75
8. வாழ்வின் அலைகள் (மலிவு) கார்க்கி - 6-00
9. வீரநினைவுகள் (மலிவு) ஜூலியஸ் பூசிக - 1-25
10. உல்லாச குடும்பம்—என் நோசாவ் - 3-50
11. லெனின் நினைவுகள் (மலிவு) கிளாரா ஜெட்கின் - 1-25
12. வீரம் விளைந்தது (2 பாகங்கள்) நிகொலாய் ஆஸ்ட்ராவ்ஸ்கி - 9-00
13. உயிரின தோற்றம்—ஏ. ஐ. ஓபாரின் - 1-00
14. புற்று நோய்—வி. ஐ. காசான்ஸ்கி - 1-00
15. சுகப்பிரசவம் (மலிவு) கே. பிகர்னோவ் - 0-40
16. மார்க்ஸிய மெய்ஞ்ஞானம்—ஜார்ஜ் பொலிட்ஸர் - 3-00
17. தத்துவத்தின் வறுமை—காரல் மார்க்ஸ் - 3-50
18. History of Tamil Language and Lituature (In English)—S. Vyapuri Pillai - 4-75

# NCBH பிரைவேட் லிமிடெட்

**6, நல்லதம்பி செட்டி தெரு, சென்னை-2.**

சென்னையில் விற்பனை நிலையங்கள்.

**199, மவுண்ட் ரோடு,**
**சென்னை-2.**

**8-G, பைகிராப்ட்ஸ் ரோடு,**
**சென்னை-5.**

சிறப்பு அங்கம் வகிக்கிறார். பி. ஈ. என். என்ற உலக எழுத்தாளர் ஸ்தாபனத்தின் மேற்கு வங்க கேந்திரத்தின் தலைவராகவும் இருந்து வருகிறார். பாரத அரசாங்கத்தாரால் அமைக்கப்பட்ட வடமொழிக் கமிஷனின் தலைவராகவும், மொழிக் கமிஷனின் முக்கிய உறுப்பினராகவும் பணியாற்றியிருக்கிறார். 1955-ல் பாரத அரசாங்கத்தார் 'பத்மபூஷணம்'' விருதை டாக்டர் சட்டர்ஜி அவர்களுக்கு அளித்து அவருடைய இலக்கிய மேதையைப் பாராட்டினார்கள். கடந்த ஆண்டில் கல்கத்தாவில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் அவருடைய சேவையைப் பாராட்டிக் கேடயம் அளிக்கப்பட்டது.

இத்தகைய பெரியாரை கௌரவிப்பதில் நமது சங்கம் பெருமிதம் அடைகிறது.

★

**கி. சந்திரசேகரன்**

எழுதியுள்ள நூல்கள்

பஞ்சசக கிளி முதலிய கதைகள்

கன்னிகா கபோதி முதலிய கதைகள்

வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர்—ஜீவியம்

பலகணிக் காட்சிகள்.

தாகுர்—வாழ்வும் கலையும்.

முதலியன.

# நவீன மராட்டி இலக்கியம்

**தின்கர் ஸாக் ரேகர்**

மராட்டி இலக்கியத்தில் நவீன காலம் என்பது பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஆரம்ப வருஷங்களிலே தொடங்குவதாகச் சொல்லலாம். மற்ற இந்திய மொழி இலக்கியங்களைப் போலவே பழைய இலக்கியம், மரபு என்பது ஒன்றும் இல்லை என்கிற நம்பிக்கையுடனேயே புதிய மராட்டி இலக்கியம் தோன்றியது. ஆங்கிலத்தின் ஒட்டுப் புல்லாக பத்தொன்பதாம் நூற்றுண்டின் பெரும் பகுதி வரை அதை வளர்த்து வந்தார்கள். பண்பாடு பற்றி ஓரளவுக்குத் தாராள மனப்பான்மை படைத்திருந்த பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆதரவில் அகராதிகள், விஞ்ஞான முயற்சிகள், கல்வித் துறைக்கு அவசியமான நூல்கள் எல்லாம் தோன்றின. கிறிஸ்துவப் பாதிரிமார்களின் உதவியால் ஒரு புது வசனமும் நோக்கமும் மராட்டி இலக்கியத்துக்கு ஏற்பட்டது. இந்த வளம், இந்த வளத்தைச் சாத்தியமாக்கிய கிறிஸ்தவர்களையும் பிரிட்டிஷ் கல்வி முறையை எதிர்க்கவுமே 19-ம் நூற்றுண்டின் இறுதியிலே உபயோகப்பட்டது. ஆங்கிலத்தைப் போன்ற மராட்டி வசனம் எழுதும் பழக்கம் தோன்றித் தேய்ந்து மராட்டி மரபில் ஐக்கியமாயிற்று.

ஓரளவு பண்டைய மரபு, இலக்கணம் காரணமாக ஒரு தொடர்ச்சியான பண்பு இருந்தது. ஆனால் ஆங்கிலக் கல்வி காரணமாக மராட்டிக் கவிதையில் ஒரு புது வேகம் தோன்றிற்று. ஆங்கிலக் கவிகள் பாணியிலே கவிதைகள் எழுதப் பல மராட்டியக் கவிகள் ஆரம்ப காலத்தில் முயன்றுர்கள். நாடகக் கலையும் ஒரு புத்துயிர் பெற்றது. 19-ம் நூற்றுண்டின் முதற் பகுதியிலே, புராணக் கதைகள் தான் நாடகங்களாக எடுபட்டன. தஞ்சாவூரிலிருந்தும், கர்நாடகத்திலிருந்தும் பல நாடக உருவங்கள் மகாராஷ்டிரத்தை எட்டின. சம்ஸ்கிருத ஆங்கில நாடகங்களும் அடுத்தபடியாக மராட்டிய நாடகங்களை உருவாக்கின. பல ஷேக்ஸ்பியர் மொழி பெயர்ப்புகள் அந்தக் காலத்தில் மராட்டியில் வந்தன. மராட்டிப் பத்திரிகை எழுத்தும் அந்தக் காலத்திலேயே தோன்றிவிட்டது. மற்ற மொழி இலக்கியங்களில் போலவே, நவீன காலத்தில் மராட்டிப் பத்திரிகை எழுத்துத்தான், தோன்றியவுடன் சிறப்பான வளர்ச்சி பெற்று ஓங்கியது. விஷ்ணு சாஸ்திரி சிப்லங்கர் என்பவரின் பத்திரிகை எழுத்து மராட்டி மேதையின் மிகச் சிறந்த சின்னம். அவருடைய கிண்டலும் கேலியும் மிகவும் ரஸமானவை. அவர் எழுதியதில் எதையுமே நன்றாக இல்லை என்று சொல்ல இயலாது. மராட்டி வசனத்தை இன்றுள்ள வகையில் அமைத்தவர் என்று சிப்லங்கரைத்தான் சொல்ல வேண்

டும். அவரைப் பின்பற்றியே அடுத்த தலைமுறை எழுத்தாளர்கள் எழுத முயன்றூர்கள்—வெற்றியும் பெற்றூர்கள். மகாராஷ்டிரத்துக்கு, சமூகம், அரசியல், பொருளாதாரம், சமயம், பண்பாடு முதலிய பல துறைகளிலும் தன்மதிப்பும்,ஒருவிழிப்பும் உண்டாக்குவதில் வெற்றி பெற்றவர்கள் என்று அகர்கர், திலகர், பராஞ்சபே முதலியவர்களைக் கூறவேண்டும். இவர்கள் காலத்தை மராட்டி வசனத்தின் பொற்காலம் என்றே கூறலாம்.

மகாராஷ்டிரரின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் நாவல் கலையும் இந்தப் பொற்காலத்தில் தோன்றியதுதான். ஹரிநாராயண் ஆப்டேயை மராட்டி நாவலின் தந்தை என்று சொல்வது பொருத்தமாகும். அவருடைய சமூக, சரித்திர நாவல்களிலே ஒரு இருபது முப்பது வருஷத்திய மகாராஷ்டிர வாழ்க்கையை நாம் காண முடிகிறது. அவருடைய கதாபாத்திரங்களில் பலவும் மக்கள் வழங்கும் பேச்சிலே இன்று அடிபடுகின்றன. லட்சியவாதமா, யதார்த்தவாதமா என்று சொல்லமுடியாத ஒரு கலை உத்தியுடன் அவர் தன் நாவல்களை எழுதினுர். அவர் சிஷ்யர்கள் கையில் அந்தக் கலை வெறும் பிரசங்க பாணியாக மாறிற்று என்றுலும் ஆப்டேயின் நாவல்கள் சிறப்பான நாவல்கள்தான்.

மராட்டிக் கவிதையின் தந்தை என்று கேசவஸுதரைச் சொல்வது வழக்கம். பலவிதமான கலை மோதல்கள் தற்கால மராட்டிக் கவிதையை உருவாக்கியிருக்கின்றன. கிர்லோஸ்கர் நாடக மண்டலியுடன் புது நாடகம் மராட்டி மொழியில் இடம் பெற்றுவிட்டது, ஐரோப்பிய, சம்ஸ்கிருத நாடகங்களை மராட்டிக்குப் புதுப்பித்து அளித்த தேவல் அற்புதமான ஒரு சொந்த நாடகத்தையும் அளித்தார்— ஷாரதா என்று பெயர் அதற்கு. கோல்ஹாட்கரின் ஹாஸ்ய நாடகங்களும், காடில்கரின அரசியல் புராண சமூக சரித்திர நாடகங்களும் மராட்டி மொழியை வளப்படுத்தின. கட்கரி நாடகக் கலையை நீதிப் பிரச்னைகளை அலச உபயோகப்படுத்தினுர். அவர் 1920-ல் இறந்ததுடன் மராட்டி நாடகத்தில் ஒரு சகாப்தம் முடிந்தது என்று சொல்லவேண்டும்.

1920—30-க்குப் பிற்பட்ட காலத்தை மராட்டி இலக்கியத்தில் தற்காலம் என்று குறிப்பிடலாம். நாம் அதிலே சிக்கியிருப்பதால் இதைக் குழப்பமின்றித் தெளிந்து சொல்வது சற்றுச் சிரமமாகவேஇருக்கிறது. ஆனல் மொத்தத்தில் மராட்டி இலக்கியம் பல துறைகளிலும் வளம் பெற்று மிகவும் சுருசுருப்பாக முன்னேறி வருகிறது என்று சொல்லலாம். எழுத்திலே பொழுதுபோக்கு என்கிற அம்சம் அதிகமாகத் தலைகாட்ட ஆரம்பித்து விட்டது என்று பொதுவாகக் குறை சொல்லலாம். ஆனலும் இலக்கிய விமர்சனம், நாவல், சிறுகதை, கவிதை முதலிய துறைகளில் பலர் வெற்றி பெற்றுள்ளனர். சில பெயர்களை மட்டும் இங்கு சொல்லுகிறேன்.

பட்கே என்கிற நாவலாசிரியர் கலைகளுக்கெல்லாம் இன்பம்


தமிழ் நாட்டின் தலைசிறந்த கலைக்கூடமான
ஸேவாஸ்டேஜின் புகழ்பெற்ற நாடகம்
திரைக்காவியமாக உருவாகிறது
ஸேவாஸ்க்ரீன்ஸ்
நாலுவேலி
நிலம்
S.V.ஸகஸ்ரநாமம், S.V.சுப்பையா V.R.ராஜகோபால்
R.முத்துராமன் M.பண்டரிபாய், M.மைனாவதி
S.N.லக்ஷ்மி, C.ப்ரமீளா
மற்றும் ஸேவாஸ்டேஜ் நடிகர்கள்
கதை-வசனம்
தி.ஜானகிராமன்
இசை
M.K.ஆத்மநாதன்
கலை-நிர்வாகம்
கலாசாகரம் ராஜகோபால்
காமிரா
நிமாய்கோஷ்
ஸ்டுடியோ
பரணி
டைரக்ஷன்....
V.சீனிவாசன்
போன் எண்: 86711
தந்தி 'SEVARTS.'
விபரங்களுக்கு -ஸேவாஸ்க்ரீன்ஸ், 20,தாண்டவராயன் தெரு, சென்னை 14

தருவதும் பொழுதுபோக்கும் தான் அடிப்படை நோக்கங்கள் என்று நினைப்பவர். அவர் கைகளிலே மராட்டி நாவல் உத்தி விசேஷங்கள் பல பெற்றது.

அவருக்கு இணையான (சர்வஜன ரஞ்சகமான) நாவலாசிரியர் காண்டேகர், சிந்தனைத் தெளிவோ, உணர்ச்சி வேகமோ, கலை உண்மையோ இல்லாததால் அவருடைய நாவல்களில் பலவும் தோல்வியுறுகின்றன.

புத்தி சாதுர்ய நாவல்கள் எழுதுபவர் வாமன் ஜோஷி. அதே அளவில் சமூக மாறுதல்களை புத்தி சாதுர்யத்துடன் தன் நாவல்களில் சிருஷ்டிப்பவர் டாக்டர் கெட்கர். பரசுராம் தேஷ்பாண்டேயின் ஆரம்ப நாவல்களில் ஒரு உண்மை உணர்ச்சி காணக் கிடந்தது.

மராட்டி நாவலின் கனமின்மையையும் பொழுது போக்குத் தன்மையையும் எதிர்த்து 1935-லே பல நாவலாசிரியர்கள் புரட்சி செய்தனர். ஷிரூர்கர், பெடேகர் முதலியவர்கள் இந்த கோஷ்டியிலே முக்கியமானவர்கள். விபவரி ஷிரூர்கரின் பலி (1950) மிகவும் சிறந்த மராட்டி நாவல்களில் ஒன்று. பெண்டஸேயின் பள்ளி உபாத்தியாயரின் சித்திரமும் ஒரு சிறப்பான நாவல். சமீப காலத்தில் பிராந்திய நாவல்கள் பலவும் தோன்றியுள்ளன.

நாடகத் துறையில் மாமா வரேர்கரும், பி. கே. ஆத்ரேயும் மிகவும் சிறந்த சேவை செய்திருக்கிறார்கள். மராட்டி நாடகம் இன்று நல்ல நிலையில் உயர்ந்திருப்பதற்கு இவர்கள் இருவருமே காரணம், புராண நாடகங்களில் தொடங்கி மாமா வரேர்கர் சமீபத்தில் ஒரு இலக்கியாசிரியரின் ஆன்மிகப் போராட்டத்தைச் சொல்லும் நாடகம் வரையில் எழுதியிருக்கிறார். ஆத்ரே ஹாஸ்ய நாடகாசிரியர் சமூக கேலி நாடகங்கள் எழுதுபவர் ஷிர்வாட்கர், ஜோக் முதலியவர்களின் நாடகங்கள் நாடகக் கலைக்கு, ஒரு புது உயிர் தர முயலுகின்றன.

சாதாரணமாக நவீன மராட்டிச் சிறு கதை பட்கேயின் எழுத்துடன்தான் உதயமாயிற்று என்பார்கள். காண்டேகர் தனது கதைகளில் ஒரு கவிதைத் தன்மையை நமக்கு அளிக்கிறார். உணர்ச்சிவசப் படச் செய்யும் கதைகளை எழுதியவர் திவாகர் கிருஷ்ணா. 1930 முதல் 1940 வரை பல சிறு கதாசிரியர்கள் தனி மனித யனப்போக்கை சித்தரித்துக் கதைகள் எழுதினார்கள். சமீபகாலத்தில் அரவிந்த கோகலே, கங்காதர் காட்கில், பாவெ முதலிய சிறு கதாசிரியர்கள் மனோதத்துவ அலசல் முறைகளைப் பின்பற்றி நல்லசிறு கதைகள் எழுதியிருககிறார்கள்.

யஷ்வந்த், மாதவ் ஜூலியன் முதலியவர்கள் தனித்வம்பெற்ற தற்காலக் கவிகள். பி. எஸ். மர்டேகர் மராட்டியில் புதுக் கவிதை செய்ய முற்பட்டார்—அவருடையகவிதை முயற்சிகள் பல பலருக்கும் புரியவில்லை. ஜோஷி, முக்திபோத், கராண்டிகர், பாபத், பத்காம்கர் முதலியோரும் நல்ல கவிகள் என்று கருதப்படுகிறவர்களே.

[டாகடர் கபீர் இந்திய சர்க்கார் மந்திரி சபையில் கலாச்சார மந்திரியாகப் பணி புரிபவர். வங்க மொழியிலும், ஆங்கில மொழியிலும் பல நூல்கள், நாவல்கள், கதைகள், விமரிசனம் என்று பல துறைகளிலும் எழுதியிருக்கிறார். 'மனிதர்களும் ஆறுகளும்' என்கிற அவருடைய நாவல் சிறப்பான இந்திய நாவல்களில் ஒன்று. அவருடைய வங்கக் கதாசிரியர்களின கதைத் தொகுப்பு ஒன்று இவ்வாண்டு ஆங்கில மொழி பெயர்ப்பில் அமெரிக்காவில் பிரசுரமாகியிருக்கிறது. இந்தக் கட்டுரையில் விமரிசகர் கபீர் இந்திய நாவல் கலையை ஒரு அழகான ஒருமைத் தொடர்புடன் கண்டு சொல்லுகிறார்.]

# மேலைநாட்டுக் கலையும் இந்தியக் கதையும்

## டாக்டர் ஹுமாயூன் கபீர்

கதை சொல்லும் கலை மனித சரித்திரம் அத்தனை பழமையானது தான். ஆனால் தற்காலத்தில் நாம் நாவல்கள், சிறு கதைகள் என்று குறிப்பிடுகிற கலைப் பகுதிகள் சமீப காலத்தில் தோன்றியவையே. ஐரோப்பாவில் நவீன நாவல் கலை 18-ம் நூற்றாண்டில் உதயமாயிற்று. சமூகத்தில் தனி மனிதனின் ஸ்தானம் பற்றிய புது சிந்தனைகள் காரணமாகவும், பொது மறுமலர்ச்சி, தொழிற் புரட்சி இவற்றின் அடிப்படையில் ஏற்பட்ட மனிதர்களின் புது நோக்கு காரணமாகவும் இந்த மாதிரி நாவல் கலை தோன்றிற்று என்று நாம் வைத்துக் கொள்ளலாம். இன்றைய இந்தியக் கதை—நாவல் கலை பிறந்து வளர்ந்தது மேலை நாட்டுக் கதைக் கலையால் ஏற்பட்ட ஒரு புதுமை என்பதில் சந்தேகத்துக்கு இடமே யில்லை.

மேலை நாட்டுப் பாதிப்பில் முக்கியமானதும் முதலாவதுமாக பிரிட்டிஷ் இலக்கியத் தொடர்புதான் நமக்கு இருந்தது என்பதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. அந்தப் பாதிப்பு தவிர்க்க முடியாதது என்று கூடச் சொல்லலாம். ஆதி இந்தியக் கதாசிரியர்கள் பலருடைய கதைகள் ஸர் வால்டர் ஸ்காட் பாணியைப் பின் பற்றியே எழுந்தன. இந்தியக் கதைகளின் சரித்திரம், சரித்திர நவீனங்களுடனேயே தொடங்குகிறது. நாளடைவில் சமூகப் பிரச்னைகளும் நாவலாசிரியர்களையும் கதாசிரியர்களையும் கவர்ந்தன. இதற்கு அடிப்படை ஆதாரம் டிக்கன்ஸ், தாக்கரே முதலி

யவர்களுடைய நாவல்கள் இந்திய ஆசிரியர்களுக்குத் தெரிய வந்ததுதான். சென்ற நூற்றாண்டின் மத்தியிலிருந்து ஒரு நாற்பது ஐம்பது வருஷங்கள் பிரிட்டிஷ் பாதிப்பு இந்தியக் கதை உலகில் அதிகமாக இருந்தது என்று சொல்லலாம்.

இந்தியக் கதைகளைச் சமைத்த இரண்டாவது பெரும் கலை என்று ஃபிரெஞ்சு இலக்கிய மேதைகளைக் குறிப்பிட வேண்டும். விக்டர் ஹ்யூகோ, பால்ஸாக், டூமாஸ் முதலிய ஆசிரியர்கள் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகளிலே பல இந்தியக் கதாசிரியர்களுக்கு முன் மாதிரியாக அமைந்தார்கள். அநடோல் ஃபிரான்சுக்கும், ரொமேன் ரோலண்டுக்கும் இந்தியாவில் பல அன்பர்கள் தோன்றினார்கள். ஆனால் இதிலே ஒரு சுவாரசியமான விஷயம் சொல்லவேண்டும். ஃபிரெஞ்சுக் கலையின் சிறப்பான அம்சமான ஒரு இளிவரல் தன்மை இந்தியக் கதாசிரியர்களுக்கு அநேகமாகக் கைவராத கலையாகவே இருந்து விட்டது. விதிக்கு விலக்காக கேலி, கிண்டல் நடையிலே இளிவரல், உருவத்திலே அறிவு ததும்பும் ஹாஸ்யம் முதலியன சிலருக்கு வந்திருக்கலாம். ஆனாலும் மொத்தத்தில் ஃபிரெஞ்சு இலக்கியத்தின் சிறப்பான இதெல்லாம் இந்தியக் கதைக் கலையைப் பாதிக்கவில்லை.

ருஷ்யக் கதை மேதைகள் இந்நூற்றாண்டின் ஆரம்பகாலத்திலே இந்தியர்களால் கண்டுபிடிக்கப்பட்டனர். அது இந்தியக் கதைச் சரித்திரத்திலே ஒரு சிறப்பான அத்தியாயத்தைஆரம்பித்து வைத்தது. இந்திய மனத்தை டால்ஸ்டாயும். டாஸ்டாஸ்வ்கியும் சிறப்பாக பெரிதும் பாதித்துப் பண்படுத்தினர்(கலையைப்பற்றிய மட்டில்)அந்த பாதிப்பு அழுத்தமானது; ஆழமானது. டால்ஸ்டாயின் சமூக நோக்கும், வாழ்விலே அதனுடைய எல்லா அம்சங்களிலும் அவருக்கு இருந்த ஈடுபாடும் பிடிப்பும் இந்தியக் கதாசிரியர்களைப் பெரிதும் கவர்ந்தன. டாஸ்டாவ்ஸ்கியின் எழுத்திலே காணப்பட்ட மனிதனுடைய உள் மனப் போக்குகள் இந்திய சிந்தனைக்கு உகந்தவையாக இருந்தன. இந்த இரண்டு மேதைகளுடைய கதைகளும் பாணிகளும் இந்தியக் கதைக் கலையில் புது எல்லைகளைச் சிருஷ்டித்துத் தந்தன. சில இந்திய நாவலாசிரியர்களை டர்ஜனிவும் பாதித்திருக்கிறார். எனினும், ஆழமோ பரப்போ அவரைப் பற்றிய வரையில் டால்ஸ்டாய் போலவோ, டாஸ்டாவ்ஸ்கி போலவோ இல்லை. டர்ஜனிவும், ஃபிரெஞ்சு நாவலாசிரியர்களைப் போலவே ஒரு மேலெழுந்தவாரியான பாதிப்பாகத்தான் இந்தியக் கதையைப் பற்றிய வரையில் நாம் கொள்ளவேண்டும்.

1920 வாக்கிலே ஸ்காண்டிநேவிய கதாசிரியர்கள் பலரின் நாவல்களும், கதைகளும் இந்தியக் கதாசிரியர்களுக்குத் தெரிய வந்தன. ஐரோப்பிய நாவல் இலக்கியத்துக்கே ஒரு புது யதார்த்த நோக்கையும் இயற்கையை ஒட்டி சக்தி பிறக்க எழுதும் தன்மையையும் அமைத்துத் தந்தவர்கள் ஸ்காண்டிநேவிய நூலாசிரியர்கள்.

அதே சமயத்தில் டாக்டர் ஸிக்மண்டு ஃப்ராய்டின் மனோ தத்துவ அலசல் கொள்கைகளும் இந்தியாவிலே அறிமுகமாயின. அவருடைய அடிமன, ஆழ்மனக் கொள்கைகள் இந்தியக் கதாசிரியனுக்குப் புது நோக்குகள் பலவற்றைச் சிருஷ்டித்துத் தந்தன. ஃப்ராய்டால் பாதிக்கப்படாதவர்கள் என்று இன்று இந்தியக் கதாசிரியர்களிலே யாரையுமே சொல்ல முடியாது—யாரும் தப்ப இயலவில்லை அந்த பாதிப்பை. மிகவும் சநாதனமான மனப்பான்மைபடைத்த ஆசிரியர்களும், மரபு பிறழாதவர்களும்கூட, மனிதனின் உள் மனப் போக்குகளை ஆராய்வதில் இப்போது சிரத்தை காண்பிக்கிறார்கள். அதை ஃப்ராய்ட் கொள்கை தவிர மற்ற எந்தக் கொள்கைகளினாலும் அறிந்து கொள்ள முடியாதது.

1930-க்குப் பிறகு ஒரு புது விதமான சிந்தனை இந்தியக் கதாசிரியர்களை வெகுவாகப்பாதித்தது. மார்க்ஸியத்தையும், மார்க்ஸியத்தை ஒட்டிய சிந்தனைகளையும்தான் சொல்லுகிறேன். ஒருஅளவு இந்த சிந்தனைகள் பல எழுத்தாளர்களின் காலை வாரி விட்டதாகவே சொல்லலாம். உத்ஸாக வேகத்தில், எத்தனையோ மோசமான எழுத்துக்கள் மார்க்ஸிய அடிப்படையில் தோன்றின—இதன் பாதிப்பு மிகையானதாகவே இருந்தது. ஆனால் மிகையானதையும், உத்ஸாகம் தவிர வேறு அல்லாததையும் ஒதுக்கிவிட்டுப் பார்க்கும் போது, கதைக் கலையை மார்க்ஸியம் ஆழ்ந்தும், அழுத்தமாகவும், நிரந்தரமாகவும் பாதித்திருப்பது புலனாகிறது. மார்க்ஸிய சிந்தனை இன்றைய இந்தியக் கதை உருவத்தையும் பாணியையும் ஓரளவுக்குப் பிரமாதமாகச் சமைத்திருக்கிறது என்பதை மறுக்கமுடியாது. நாவல்கள் கதைகள் இவற்றின் பொருள், கருத்து, பாணி முதலியவை மார்க்ஸியச் சிந்தனையால் பெரிதும் பாதிக்கப்பட்டு இன்றைய நிலையை எட்டி யுள்ளன. யதார்த்தவாதம் இந்தச் சிந்தனையின் பாதிப்பால் ஒரு புது எல்லையை எட்டியது அதே சமயம், ஐரோப்பிய இலக்கிய உத்தியான மனப் பிரக்ஞை முறையும், தனி மனிதனின் மனுஷ்யத்வம் சிதறுகிற காரியமும் இந்தியக் கதாசிரியர்கள் சிலரைப் பாதித்தன. நவீன ஐரோப்பிய இலக்கியக் கலையிலே மார்க்ஸியத்துக்கு அடுத்தபடியாக ஆழமும் அழுத்தமும் அர்த்தமும் கூடிய போக்குகள் இவை இரண்டும் என்பது ஐரோப்பிய இலக்கியப் போக்கை அறிந்தவர்களுக்குத் தெரியும்

இப்படியாக இந்தியக் கதை, நாவல் கலையைப் பலவிதமான சக்திகள் மோதி இன்று சமைத்திருக்கின்றன. சில சமயம் இந்த மோதல்களின் விளைவு பல விஷயங்களில் விசித்திரமான பலன்களை விளைவித்திருக்கிறது. மொத்தத்தில் இந்திய நாவலும், கதையும் எல்லாத் திசைகளிலும் விரிந்து பரந்து கிடக்கிறது என்று தான் சொல்லவேண்டும். புதுக் கருத்துக்கள், புது விஷயங்கள், புதுப்புது உத்திகள் முதலியன இந்தியாவிலே சமீப காலத்தில் தோன்றியிருக்கின்றன. உள்ளூர் மரபுகளும் வெளிநாட்டு பாதிப்புகளும் இவற்றிற்கெல்லாம் அடிப்படைக் காரணங்கள்.

அநேகமாக எல்லா இந்திய மொழி இலக்கியங்களிலுமே வளர்ச்சி சற்றேறக்குறைய இதே அளவில், இதே படிகளில்தான் சென்றிருக்கிறது என்பது ஆராய்ச்சி செய்து பார்த்தவர்களுக்குச் சுலபமாகவே தெரிகிறது. குறிப்பிட்ட ஒரு மேலை நாட்டு பாதிப்பு ஒரு குறிப்பிட்ட மொழியில் ஒரு பத்து ஆண்டுகள் முன்னே பின்னே ஏற்பட்டிருக்கலாம். தவிரவும் இந்திய மொழிகள் பலவும் ஒன்றோடொன்று மோதிக் கலந்தும் ஓரளவு பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதனாலும் சில சில்லரை வித்தியாசங்கள் ஏற்பட்டிருக்கலாம்; மேலைநாட்டுப் பாதிப்பைக் கலையில், இலக்கியத்தில் சாதாரணமாக முதல் முதலில் காட்டிய இந்திய மொழி என்று வங்காள மொழியைச் சொல்வது பொருந்தும். அதே மேலைநாட்டு பாதிப்பு பிற மொழிகளை எட்டும்போது இந்த வங்காளி உருவமும் சேர்ந்து புது மொழி இலக்கியத்தைப் பாதித்திருக்கிறது.

கடைசியாக, இந்தியாவின் அரசியல் போக்கும் சமீப காலத்திய சம்பவங்களும் இந்திய நாவல், கதை வளர்ச்சியை பாதித்துச் செதுக்கியிருக்கின்றன. நோக்கம், கொள்கை, லக்ஷ்யம் என்பவற்றுடன் பல இந்திய ஆசிரியர்களுக்கு சமீப காலத்திய சம்பவங்களும் போக்குகளும் கூடிய அளவில உதவியிருக்கின்றன.

இந்தியக் கதை, நாவலிலே மேலை நாட்டு பாதிப்பு மூன்று விசேஷ முறைகளில் ஏற்பட்டிருக்கிறது என்கிற முடிவுக்கு வரலாம் நாம். மூன்று முறைகளும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டவை தான்.

இந்த மூன்றிலே அதிகமான பாதிப்பு என்று இந்தியக் கதாசிரியர்களின் வாழ்க்கை நோக்கை மேலை நாட்டுக் கதாசிரியர்கள் பாதித்திருப்பதைச் சொல்லவேண்டும். பல பழைய இந்திய நம்பிக்கைகளுக்கு இன்றைய மேலை நாட்டுக் கொள்கைகளும் நோக்கங்களும் சவால் விடுத்தன. விஞ்ஞானப் போக்கும், ஜனநாயக நோக்கும், வாழ்வோடு ஒட்டி இயங்கும் materialistic கலை உத்தியும் இந்திய மனத்தையும் சிந்தனைகளையும் கிளறின. மிகப் பழமையான பல பிரச்னைகளையும் புதுக் கோணங்களில் நின்று பார்க்க இந்தியக் கதாசிரியர்களும் நாவலாசிரியர்களும் கற்றுக்கொண்டார்கள். இந்த விஷயத்தில் மேலை நாட்டுப் பாதிப்பு முழுவதும் நன்மையே பயந்திருக்கிறது.

மேலை நாட்டுப் பாதிப்பின் இரண்டாவது அம்சம் கலை உத்திகள் சம்பந்தமானது. நாவல், கதை இவற்றை எழுதி முடிப்பதில் உத்தி பூர்வமான பாதிப்பு இரண்டாவது பெரும் அம்சம். இதிலும் கூட இந்தியக் கதாசிரியர்கள் பல தரப்பட்ட மேலைநாட்டு உத்தி ஐசுவரியங்களால் பாதிக்கப்பட்டு லாபம் அடைந்திருக்கின்றனர். நேர்முகமான கதை, மனப் போக்கை அலசிக் காண்பிக்கும் நாவல், ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்தின் வாழ்வையோ, அல்லது ஒரு குறிப்பிட்ட கோஷ்டியினரின் வாழ்க்கையையோ பிரதிபலிக்கும் நீளக் கதை என்று எத்தனையோ கிளைகளாக இந்தியக் கதை இப்போது வளம் அடைந்திருக்கிறது.

பிலிம் தொழிலுக்கு
சேவைச்
சின்னம்

VIJAYA PRODUCTIONS PRIVATE Ltd.

மெஸ்ஸர்ஸ்
விஜயா ஸ்டூடியோ
வாஹினி ஸ்டூடியோ
சென்னை

கட்டிட நிர்மாண, சிற்ப சாஸ்திர உத்திகளைப் பின்பற்றும் நாவல்கள் பலவும் நம்மிடையே உண்டு. நவீன காலத்திய இந்தியக் கதைகளில் எத்தனையோ தனி உருவச் சிறப்புகள், உத்திச் சிறப்புகள் காணக்கிடக்கின்றன. வெறும் பத்திரிகை நிருபர் சரடு போன்ற கதை முதல், கோத்துவாங்கி நிர்மாணித்து நிறுத்தப்பட்ட கதைகள் வரை எத்தனையோ உள. அத்தனையும் மேலை நாட்டுக் கலை நம்மை பாதித்திருப்பதை சந்தேகமற நிரூபிக்கின்றன.

மூன்றாவது அம்சம் என்று சொல்ல வேண்டியது இந்திய நாவலின் விஷயத்தை மேலைநாட்டுக் கதைகள் பாதித்திருப்பதுதான். மொத்தத்தில் இந்த அம்சம் பற்றிய வரையில் பாதிப்பு பூராவும் நல்லதாகவோ திருப்தி தருவதாகவோ சொல்வதற்கில்லை, இந்தியக் கதாசிரியன் மேலை நாட்டு ஆசிரியனைப் பின்பற்றவோ, தழுவவோ, அல்லது முழுவதும் மனத்தில் வாங்கிக் கொள்ளாமல் தன் மொழியில் தரவோ முயன்றிருக்கிற இடங்களிலெல்லாம், பலன் அவ்வளவாகத் திருப்தியளிப்பதாக இல்லை. துரதிருஷ்டவசமான ஒரு முயற்சியாகவே அது நின்று விடுகிறது. மேலை நாட்டு விஷயங்களையும், பழக்க வழக்கங்களையும், சமய சந்தர்ப்பங்களையும் பாத்திரங்களையும் இந்திய உருவில் தரமுயன்ற கதாசிரியர்கள் வெற்றி பெற்றிருப்பதாகச் சொல்ல முடியாது. இந்திய அநுபவத்திலே மேலை நாட்டு விஷயமும் ஏன் ஒருமித்துச் சேரக் கூடாது? சேரலாம் தான். தாகூரின் எழுத்துக்கள் சிலவற்றிலே இந்திய மேலை நாட்டு விஷயங்கள் சிறப்பாக ஒன்றி நிற்பதைக் காண்கிறோம். இந்த அமைதியைச் சமைக்கத் திறன் அபாரமாக வேண்டும்.

இன்று வரையில் மேலை நாடு—இந்திய பாதிப்பு ஒருதலைப்பக்ஷமாகவேதான் இருந்துவந்திருக்கிறது.மேலைநாட்டில் ஏற்படுகிற ஒவ்வொரு புது மாறுதலும் இந்தியக் கதைக்கலையை ஓரளவு பாதித்திருக்கிறது. இந்த நிலை மாறாது அப்படியேயிருக்கும் என்று சொல்ல முடியாது. பரப்பிலும் எண்ணிக்கையிலும் இந்திய எழுத்து விஸ்தரிக்க விஸ்தரிக்க அதன் தரமும் ஏறும்—சிறப்பும் பெறும். சமீபத்தில் ஒரு முயற்சி நமது கவனத்துக்குரியது-ஒரு பிராந்தியச்சரித்திரத்தை விளக்கி, ஒரு கோஷ்டி மனிதர்கள் மூலம் பிரபஞ்சம் முழுவதையும் விவரிக்கிற கலை இந்தியாவில் சிறப்பாகத் தோன்றியிருக்கிறது. தனி மனிதனை, மனித கோஷ்டிகளை, பிரபஞ்சமாக்கி, விரித்து விவரிக்கிற கலை இந்தியாவின் சிறப்பான கலை. ஒருமையைப் பன்மையாகவும், பன்மையை ஒருமையாகவும் ஆக்கும் வித்தை இது. நாளடைவில் இந்தமாதிரியெல்லாம் நாவலும் கதையும் வளம்பெற்றுப் புது உத்திகள் இந்தியாவிலே பிறக்கலாம். மேலை நாட்டின் முன்மாதிரியில் இந்தியக் கதை, நாவல் தோன்றியது என்பது உண்மைதான் என்றாலும், இது போன்ற இந்திய நாவல் கலை உத்திகள் உலகத்தை, முக்கியமாக மேலை நாட்டு இலக்கியத்தைப் பதிலுக்கு ஒரு காலத்தில் பாதிக்கலாம். மேலை நாட்டுக் கதைக் கலையைப் பாதிக்கிற அளவு இந்தியக் கதைக்கலை வளராது போய் விடாது.

[தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் துணைத் தலைவர்களிலே சாமி சிதம்பரனார் ஒருவர். பல பண்டைத் தமிழ் நூல்களைப்பற்றி விமரிசனங் களும் ஆராய்ச்சிகளும் நடத்தியிருக்கிறார். பண்டிதர்களில் 'பழசை மட்டும்தான் கவனிக்க வேண்டும், புதுசாக வெளிவருவதைப் பார்க்க வேண்டியதில்லை' என்கிற கோஷ்டிக்கு எதிரி. தமிழ் எழுத்தாளர் சங்க இதழுக்காக சாமி சிதம்பரனார் அன்புடன் எழுதியளித்த கட்டுரை இது.]

# இலக்கியம் வளர வேண்டுமானால்....?

**சாமி சிதம்பரனார்**

---

*தமிழிலே இலக்கியங்கள் வளரவேண்டும்; வளர்க்க வேண்டும். இதில் யாருக்கும் முரண்பட்ட கருத்தில்லை. இதில் நமக்கு எவ்வளவு ஆவல் இருக்கிறதோ அவ்வளவுக்குத் தமிழ் இலக்கியம் வளர்ந்திருக்கின்றதா? என்பதுதான் கேள்வி. வளர வில்லை, வளர்க்கப்படவில்லை, என்று சொல்லமுடியாது. வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால் நமது ஆசை அளவுக்கு வளர்ந்து விட்டது, அல்லது வளர்ந்துகொண்டு வருகின்றது என்று கூறமுடியாது.*

*இலக்கியம் என்று நான் இங்கே குறிப்பிடுவது நமது பழைய இலக்கியங்களை அல்ல. புதிய இலக்கியங்களைத்தான் குறிப்பிடு கின்றேன்.*

*பழய இலக்கியங்களைப் பற்றிய புத்தகங்கள் ஏராளமாக எழுதப்பட்டிருக்கின்றன. இன்னும் எழுதப்பட்டு வருகின்றன. பண்டிதர்கள் பெரும்பாலும் பழய இலக்கியங்களைப் பற்றித்தான் எழுதிக்கொண்டிருக்கின்றனர், பேசிக்கொண்டிருக்கின்றனர்.*

*கம்பராமாயணத்தின் திருத்தமான பதிப்பு இன்னும் பூரண மாக வெளிவரவில்லை. ஆயினும் அது பற்றிய ஆராய்ச்சி நூல்கள் கட்டுரைகள் எத்தனையோ வந்துவிட்டன; வந்துகொண்டிருக்கின் றன. இதைப் போலவே திருக்குறளைப் பற்றிய ஆராய்ச்சி நூல் கள் எத்தனையோ வந்துவிட்டன; இன்னும் வந்துகொண்டிருக் கின்றன. இதைப் போலவே, பத்துப்பாட்டு எட்டுத் தொகை முதலிய சங்க நூல்களைப் பற்றிய ஆராய்ச்சி நூல்களும் வந்து விட்டன; வந்துகொண்டும் இருக்கின்றன.*

பழய நூல்களைப் பற்றிய ஆராய்ச்சிகள்—ஆராய்ச்சி என்ற பெயர் கொண்டவைகள் எத்தனை வெளிவந்திருக்கின்றன என்பதை எளிதிலே கணக்கெடுத்து விடலாம். ''பாடமாக வைப்பதற்கு ஏற்றவை'' என்று பாடபுத்தகக் கழகத்தாரால் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கும் பட்டியல்களைப் புரட்டிப் பார்த்தால் போதும். கணக்கு அகப்பட்டு விடும். பள்ளிக்கூடத்தில் பாடமாக வைப்பதற்கு என்று எழுதப்பட்டிருக்கும் பழய இலக்கியக் குஞ்சுகள் ஏராளமாக இருக்கின்றன. பொது மக்கள் படிப்பதற்கு என்று எழுதப்பட்டிருக்கும், பழய இலக்கியம் பற்றிய புத்தகம் அவ்வளவு அதிகம் இல்லை.

இதிலிருந்து ஒரு உண்மை விளங்குகின்றது. பழந் தமிழ் இலக்கிய மேதைகளில் கூடப் பெரும்பாலோர், பணத்தைக் குறியாகக் கொண்டுதான் இலக்கியங்கள் எழுதுகின்றனர் என்றுதான் எண்ணவேண்டியிருக்கின்றது.

பழய இலக்கியங்களை அறிமுகம்செய்வதற்குப் பல ஸ்தாபனங்கள் இருக்கின்றன. பத்திரிகைகளிலே பழய இலக்கிய அறிமுகம். மதுரைத் தமிழ்ச் சங்கம், கரந்தைத் தமிழ்ச் சங்கம் போன்றவை பழய இலக்கியங்களைப் பற்றியே மக்கள் அறியும்படி செய்து வருகின்றன. சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களும் பழய இலக்கியங்கள் பரவ ஆதரவளித்துவருகின்றன.

சென்னை, திருச்சி ரேடியோக்களிலும் அடிக்கடி பழய இலக்கியங்களைப் பற்றி ஒலிபரப்பப்படுவதைக் கேட்கின்றோம்.

பழய இலக்கியம் இவ்வாறு வளர்ந்து வருகின்றது. வளர்க்கப்பட்டு வருகிறது. நன்றாக வளரட்டும். பழய இலக்கியங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதன்மூலம் மக்கள் பண்பாடு வளரட்டும் இதை வரவேற்போம். இம்முயற்சியை வாழ்த்துவோம்.

ஆனால், பழய இலக்கியப் பிரசாரம் மட்டும் வளர்ந்தால் போதுமா? தமிழ் இலக்கியம் வளர்ந்துவிடுமா? தமிழ்நாட்டுமக்கள் மற்ற நாட்டு மக்களுக்குச் சமமாகத் தலைநிமிர்ந்து நிற்கமுடியுமா?. தமிழர் பண்பாடு வளர்ந்துவிடுமா? இவை போன்ற சில கேள்விகளைக் கேட்டுத்தான் ஆகவேண்டும். ஏன்? இப்படிக் கேட்பதில் என்ன தப்பு?

நவீன இலக்கியங்கள் தமிழிலே போதுமான அளவு வளரவில்லை என்பது நிச்சயம். வளர்க்க வேண்டும் என்னும் முயற்சி கூடப் போதுமான அளவுக்கு இல்லை. சாகித்திய அக்கடமியின் போக்கு நாம் அறிந்ததுதான். அது, பழங்கதைகளுக்குப் பரிசு கொடுப்பதையே தமிழ் இலக்கிய வளர்ச்சியாகக் கருதியிருக்கிறது என்றுதான் எண்ண வேண்டியிருக்கின்றது.

சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களும் இந்த முயற்சியில் போதுமான முயற்சி எடுத்துக்கொள்ளும் என்று நினைக்க இடம் இல்லை.

சிறு கதைகள், நாவல்கள், கட்டுரைகள் போன்ற புதிய இலக்கியங்கள் இன்று வரையிலும் எந்த ஸ்தாபனங்களாலும் வளர்க்கப்படவில்லை என்று துணிந்து கூறலாம். தனிப்பட்ட பல எழுத்தாளர்கள், தனிப்பட்ட பலபத்திரிகைகள் இவர்களால்தான் புதிய இலக்கியங்கள் தோன்றிவருகின்றன. இத்தகைய புதிய எழுத்தாளர்களுக்கு ஊக்கம் ஊட்டத் தமிழகத்தில் ஒரு நல்ல உறுதியான ஸ்தாபனம் வேண்டும். இந்தக்காரியத்தைச் சென்னை எழுத்தாளர் சங்கம் செய்யலாம். எழுத்தாளர் சங்கத்தினர், ஆண்டுக்கொரு விழா நடத்திவிட்டுப் போவதில் மட்டும் பயன் இல்லை. அல்லது சில பொதுக் கூட்டங்களை நடத்திவிட்டுப் போவதில் மட்டும் பயன் இல்லை. நவீன இலக்கியங்களைப் பெருக்குவதற்கு உருவான வேலை செய்வதற்கான ஒரு திட்டத்தை வகுத்தாக வேண்டும்.

தமிழ் இலக்கியம் வளர முதலில் எழுத்தாளர்கள் செய்ய வேண்டிய வேலை நவீனங்களை அறிமுகப்படுத்த வேண்டும். நவீன இலக்கியங்கள் என்ற பெயரில் வெளிவந்திருப்பவைகளை நன்ருகச் சலித்துப் புடைத்து எடுக்க வேண்டும். குப்பை கூளங்களைக் கழித்துவிட்டு படிக்கத் தகுந்தவை, பாராட்டத் தகுந்தவை இன்னின்னவை என்பதைத் தெளிவாக அறிவிக்க வேண்டும்

இதுவரையில் வெளிவந்திருக்கும் சிறு கதைகளிலே இலக்கிய வரிசையில் வைக்கத்தக்கவை இவை என்பதை ஆராய்ந்தெடுக்க வேண்டும். இவைகளில் முதல்தரயானவை இரண்டாந்தரமானவை, மூன்ரும்தரமானவை இவைகள் என்று குறிப்பிட வேண்டும். இதுபோலவே நவீனங்கள், கட்டுரைகள் ஆகியவைகளையும் தொகுத்து ஆராய வேண்டும். இப்படிச் செய்வது எழுத்தாளர்களுக்கு ஒரு உற்சாகத்தை ஊட்டும் என்பதில் ஐயம் இல்லை.

இக்காரியத்தைச் செய்வது அவ்வளவு எளிதன்று என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிரேம். விருப்பு வெறுப்பில்லாமல் ஆராய்ந்து உண்மையான இலக்கியத்தன்மை பொருந்திய நூல்களை எடுத்துக் காட்ட வேண்டும். இலக்கியத்தன்மை யில்லாதவைகளை அவைகள் யாரால் எழுதப்பட்டிருந்தாலும் சரி ஒதுக்கித்தள்ள வேண்டும். இச்செயல் தமிழ் இலக்கியம் வளரப் பெருந்துணை செய்யும் என்பதில் ஐயம் இல்லை.

இதுவரையிலும் தமிழிலே வெளிவந்திருக்கும் நாவல்கள் எத்தனை? சிறுகதைகள் எத்தனை? அவற்றின் தொகுதிகள் எத்தனை? நாடகங்கள் எத்தனை? புதிய செய்திகளைப் பற்றிய கட்டுரைகள் எத்தனை? இக்கணக்கு யாருக்காவது பூரணமாகத

தெரியுமா? தெரிந்தால் அவர்கள் அக்கணக்கை விவரமாக வெளியிடுவார்களானால் அதுவும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும்.

மேலே நான் குறிப்பிட்டிருக்கும் வேலை புத்தகப் பட்டியல் (கேட்லாக்) தொகுக்கும் வேலைதான். ஆனால் இலக்கிய வளர்ச்சிக்காகத் தொகுக்கும் புத்தகப் பட்டியலில் எல்லாப் புத்தகங்களும் இடம்பெறமாட்டா படிக்கத் தகுதியுள்ளவை; இலக்கியச் சுவை அமைந்தவை, மக்களுக்கு அறிவூட்டுகின்றவை; என்று எண்ணப்படும் புத்தகங்கள் தாம் இடம்பெறும்.

இக்காரியத்தைச் செய்யத் தகுதியுள்ளவர்கள் எழுத்தாளர் சங்க உறுப்பினர்களிலே பலர் உண்டு. அவர்கள்தாம் செய்தாக வேண்டும். இலக்கிய மேதைகள் என்று பிரபலம் பெற்றிருப்பவர்களால் செய்யமுடியாது. ஏனென்றால் அவர்களிலே பலர் புதிய இலக்கியங்களைப் படிப்பவர்கள் அல்லர். கம்பன் சொல்லாதவை, வள்ளுவர் வழங்காதவை; இளங்கோ இயம்பாதவை இப்புதிய இலக்கியங்களிலே என்ன இருக்கமுடியும்? என்ற நினைப்பு அவர்களிலே பலருக்கு உண்டு. ஆதலால் அவர்களை நம்பிப் பயன் இல்லை. இவர்களிலே நவீன இலக்கிய வளர்ச்சியில் கருத்துள்ளவர்கள் ஒரு சிலர் உண்டு. அவர்கள் இந்த முயற்சிக்குத் துணை செய்வார்கள் என்பதில் ஐயம் இல்லை.

நான் விரும்பும் இத்தகைய முயற்சி நல்லதுதான் என்றால் எழுத்தாளர்கள் இத்துறையில் இறங்க வேண்டும். எழுத்தாளர்கள் பின்வாங்கினால் எழுத்தாளர் சங்கம் துணிந்து இதில் தலையிட வேண்டும். எண்ணியதைச் சொல்லிவிட்டேன். பிறகு உங்கள் இஷ்டம்; தமிழ் இலக்கியத்தின் தலைவிதி எப்படியோ? அதை யார் அறிவார்?

★

## சாமி சிதம்பரனார் எழுதியுள்ள நூல்கள்

திருக்குறள் பொருள் விளக்கம்
கம்பன் கண்ட தமிழகம்
தொல்காப்பியத் தமிழர்
பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரும்
எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும்
பதினெண்கீழ்க் கணக்கும் தமிழர் வாழ்வும்
சிலப்பதிகாரத் தமிழகம்
இலக்கியச் சோலை
வள்ளுவன் வாழ்ந்த தமிழகம்
வடலூரார் வாய்மொழி

[தமிழ் எழுத்தாளர் சங்கம் வளர்ந்த கதையை இங்கு சுருக்கமாகச் சொல்லும் ஸ்ரீ டி. எஸ். கிருஷ்ணமூர்த்தி சங்கத்தின் துணைக் காரியதரிசி. சுருசுருப்பான இளைஞர். "ஸ்ரீ ரஞ்சனி" என்கிற பெயரில் கதைகள் பல எழுதிப் பரிசு பெற்றிருக்கிறார்.]

# சங்கம் வளர்ந்த கதை

டி. எஸ். கிருஷ்ணமூர்த்தி

*தமிழ் எழுத்தாளர்களுடைய நலன்களைப் பாதுகாக்கவும் இலக்கியத்துக்குத் தொண்டாற்றவுமென எழுத்தாளர்கள் பலர் கூடி அமைத்தது தமிழ் எழுத்தாளர் சங்கம். 1946-ல் திரு. ரா. நாராயணன் தலைமையில் அமைந்த இச்சங்கம் ஆரம்பகாலத்தில் பல்வேறு காரணங்களால் குறிப்பிடத்தக்க பணி எதுவும் செய்ய இயலவில்லை. 1950-ல் மீண்டும் பல எழுத்தாளர்கள் கூடி திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி ('கல்கி')யைத் தலைவராகவும், திரு. ஆர். வெங்கடராமன், திரு. பி. கோதண்டராமன் ஆகியோரைச் செயலாளர்களாகவும் தேர்ந்தெடுத்து சங்கத்தை மீண்டும் துவக்கினர். ஒரு உபகமிட்டியின் உதவியுடன் சங்கத்துக்கான அமைப்பு, விதிமுறைகள் வகுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன. 7-5-52-ல் சங்கம் முறைப்படி பதிவு செய்யப்பட்டது. பின்னர் 1951 லிருந்து ஆண்டு தோறும் பேரவை கூடி நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்து வருகிறது.*

## அங்கத்தினர்கள்

*சங்கத்தில் இப்போது சுமார் நானூற்றைம்பது பேர் அங்கத்தினர்களாயிருக்கின்றனர். கடந்த ஆண்டுகளை விட இது அதிகம் தானென்றாலும், இன்னும் சென்னையிலேயே உள்ள பல எழுத்தாளர்களும், வெளியூர்களிலுள்ள பலரும் சங்க உறுப்பினர்களாக ஆகவில்லை யென்பதைக் குறிப்பிட்டு, அவர்களனைவரையும் அறிமுகப்படுத்தி சங்க உறுப்பினர்களாக்கி சங்கத்தை மேலும் பலப்படுத்தவேண்டுமென்ற வேண்டுகோளை நமது உறுப்பினர்களுக்கு விடுக்கிறோம்.*

## மகாநாடுகள்

*நமது சங்கத்தின் மிக முக்கிய நிகழ்ச்சியான மகாநாடு பல ஆண்டுகளாகச் சிறப்பாக நடைபெற்று வருகிறதென்பதைப் பலரும் அறிவர். முதல் மகாநாடு 1953-ல் திரு. கி. சந்திரசேகரன் தலைமையில், திரு. வி. க. அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது.*

அடுத்த ஆண்டு திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் கூடிய மகாநாட்டில் தமிழ்த் தொண்டாற்றிய தமிழறிஞர் இரு வருக்குக் கேடயங்கள் வழங்கி கௌரவிக்கும் முறை துவக்கப் பட்டது. தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் தமிழ்ப் பணியாற்றும் அறிஞர்கள் இருவருக்குக் கேடயங்களும், தமிழ் மொழி இலக்கி யங்களை பிற மொழியாளர்க்குப் பயன்படும் வகையில் மொழி பெயர்த்து, மொழிப் பணியாற்றும் பிற மொழி அறிஞர்களிரு வர்க்கு பதக்கங்களும் வழங்கி கௌரவித்து வருகிறது நமது சங்கம். இதுவரை சங்கத்தால் கௌரவிக்கப்பெற்றுள்ள அறிஞர் களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

திரு. ச. பாஷ்யம் வரவேற்புக் குழுத்தலைவராக இருந்து நடத்திய 1954-ம் ஆண்டு மகாநாட்டில் பாரதி கண்காட்சி ஒன்றும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதனைச் செவ்வனே செய்து முடித்த திரு. ரா. அ. பத்மநாபன், 'பாரதி தமிழ்' ஆசிரி யரான பெ. தூரன் இருவருக்கும் தங்கப்பதக்கங்கள் அளிக்கப் பட்டன.

1955-ம் ஆண்டு மகாநாட்டுக்கு திரு. எஸ். ஏ. பி. அண்ணா மலை அவர்கள் வரவேற்புக் குழுத்தலைவராக இருந்து சிறப்பாக நடத்திக் கொடுத்தார். திரு. ம. பொ. சி. தலைமையில் கவர்னர் திரு. ஸ்ரீபிரகாசா விழாவில் கலந்துகொண்டு கேடயங்களை வழங் கினர். அன்றைய விழாவில் ருஷ்ய இலக்கிய கோஷ்டியினரும் வந்திருந்தனர். 'கல்கி'யின் உருவப்படத்தை திரு. சி. ஆர். ஸ்ரீனிவாசன் திறந்துவைத்தார்.

அடுத்த ஆண்டில் திரு. ஆர். மகாதேவன் தலைமை தாங்கி நடத்திய மகாநாட்டில் திரு. சி. சுப்பிரமணியம் கேடயங்கள் வழங்கினர். ரசிகமணி டி. கே. சி.யின் உருவப்படம் ராஜாஜி அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. திருமதி சீதாலக்ஷ்மி குமார சுவாமி அவர்கள் இம்மகாநாட்டுக்கு வரவேற்புக் குழுத்தலைவரா யிருந்து சிறப்பாக நடத்தித்தந்தார்.

1957-ம் ஆண்டு நமது மகாநாடு திரு. ஏ. ஜி. வெங்கடாச்சாரி தலைமையில் சிறப்பாக நடந்தது. திரு. ந. சிதம்பர சுப்ரமண்யன் வரவேற்புக் குழுத்தலைவராயிருந்து சிறப்பாக நடத்திய இம்மகா நாட்டில், திரு. எஸ். வரதாச்சாரி அவர்கள் கலந்துகொண்டு கேடயங்கள் வழங்கினர். திரு. தேவன் அவர்களது படத்தை திரு. ம. பொ. சி. திறந்துவைத்தார்.

1958-ம் ஆண்டு நமது நாகர்கோவில் கிளைச் சங்கத்தின் ஆதரவில் நமது ஆறுவது மகாநாடு நாகர்கோவிலில் நடைபெற்றது. 'தினமலர்' ஆசிரியர் திரு. டி. வி. ராமசுப்பய்யர் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து நடத்தித்தந்தார். மகாநாட்டில் மத்திய மந்திரி பேராசிரியர் ஹுமாயூன் கபீர் கலந்துகொண்டார். சங்கத்தலைவர் திரு. வெ. சாமிநாத சர்மா தலைமை தாங்கினர்.

## இதுவரை கேடயங்கள் பெற்ற அறிஞர்கள்

| | |
|---|---|
| 1954 | திரு. ரா. பி. சேதுப்பிள்ளை |
| | ,, வெ. சாமிநாத சர்மா |
| 1955 | ,, மு. ராகவய்யங்கார் |
| | ,, எஸ். வையாபுரிப் பிள்ளை |
| 1956 | ,, வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் |
| | ,, டி. வி. சதாசிவப் பண்டாரத்தார் |
| 1957 | ,, ப. சம்பந்த முதலியார் |
| | ,, ச. சோமசுந்தர பாரதியார் |
| 1958 | ,, சி. கே. சுப்பிரமணிய முதலியார் |
| | ,, பி. எஸ். ராமானுஜாசாரியார் |

## பதக்கங்கள் அளிக்கப்பெற்றவர்கள்

| | |
|---|---|
| 1957 | திரு. பி. நாராயண் நாயர் (மலையாளம்) |
| | ,, பி. ஸ்ரீராமுலு ரெட்டி (தெலுங்கு) |
| 1958 | ,, எஸ். சங்கரராஜு நாயுடு (ஹிந்தி) |
| | ,, எல். குண்டப்பா (கன்னடம்) |

### பரிசுத் திட்டங்கள்

எழுத்தாளர்களை, குறிப்பாக இளம் எழுத்தாளர்களை, ஊக்குவிக்க எழுத்தாளர் சங்கம் ஒவ்வொரு ஆண்டிலும் ஒரு இலக்கியப் போட்டி ஏற்பாடு செய்து வருகிறது. 1955–ம் ஆண்டில், அவ்வாண்டு பத்திரிகைகளில் வெளிவந்த கதை, கட்டுரைகளில் தலை சிறந்த மூன்றுக்குப் பதக்கங்கள் அளிக்கப்பட்டன. 1957–ம் ஆண்டில் கவிதை, கட்டுரை ஆகிய துறைகளில் போட்டி வைத்து, இரண்டு பரிசுகளும், பாராட்டிதழ்களும் வழங்கப்பட்டன. ஓரங்க நாடகப் போட்டி ஒன்றும் வைத்து, திரு. தேவன் நினைவுப் பரிசுகளாக ஏழு நாடகங்களுக்குப் பரிசளிக்கப்பட்டது.

பாரதி : திரு. சி. ஆர். ஸ்ரீனிவாசன் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட சங்கப் பத்திரிகையான 'பாரதி' முதல் ஆண்டு இரு மாதங்களுக்கு ஒரு முறை வெளிவந்தது. இடையில் சில தவிர்க்க முடியாத காரணங்களால் வெளிவராத 'பாரதி' 1956 லிருந்து சற்று ஒழுங்காக வெளிவரத் தொடங்கியது. தவறுமல் மாதமொருமுறைப் பத்திரிகையாக வெளிவந்ததும் தபால் கட்டணச் சலுகையும் கிடைத்தது. 1957, 1958 இரண்டு ஆண்டுகளில் நமது மகாநாடுகளை ஒட்டி, 'பாரதி' விசேஷ இதழ்கள் வெளியிடப்பட்டன. சிறந்த இலக்கியக் கட்டுரைகளடங்கிய இவ்விதழ்கள் பலராலும் பாராட்டப் பெற்றமையே நம்மைத் தொடர்ந்து விசேஷ இதழ்கள் வெளியிட ஊக்குவிக்கிறது.

**புத்தகசாலை**. ஏராளமான சிறந்த நூல்கள் நம் நூல் நிலையத்தில் இருந்தும் இடவசதியின்மையென்ற ஒரே காரணத்தால் நூல் நிலையத்தை நன்கு பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. சில அங்கத்தினர்கள் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கி, தத்தம் நூல்கள் வெளிவரும்போது நூல் நிலையத்துக்கு அன்பளிப்பாக பிரதிகள் வழங்கி வருகிறார்கள். அவர்களுக்கு நமது நன்றி. நமது சங்கத்துக்கென இலவசமாக நவ இந்தியா, ஜனசக்தி, தினமலர் ஆகிய தினசரிகளையும், ஆனந்த விகடன், கல்கி, குமுதம், கலைமகள், பஞ்சாயத்து செய்தி, சௌராஷ்டிரமணி, நல்லறம், ஹனுமான், ஈழநாடு, சுதந்திரன், பேசும் படம் முதலிய பத்திரிகைகளை அனுப்பி உதவும் அப்பத்திரிகை நிர்வாகிகளுக்கு நமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

**க்ஷேம நலநிதி**: எழுத்தாளர் க்ஷேம நல நிதிக்குக் கொஞ்சம் கொஞ்சமாக நிதி கூடிக்கொண்டு வருகிறது. கடலூர் பாவலருக்கு ரூ. 200-ம், திரு. பீ. வி. சபரிராஜனுக்கு 250 ரூபாயும், இவ்வாண்டில் காலஞ்சென்ற எழுத்தாளர் திரு. கி. ரங்கராஜன் குடும்பத்தாருக்கு 250 ரூபாயும் உதவியளிக்கப்பட்டது. நிதியை மேலும் வளர்க்கவேண்டிய அவசியத்தைப் பற்றி அதிகம் வற்புறுத்த வேண்டியதில்லை யென நினைக்கிறோம்.

தனிப்பட்ட முறையில் 'புதுமைப் பித்தன்,' 'வஸந்தன்', ஆகியோரது குடும்பங்களுக்கு உதவவும், பரலி திரு. சு. நெல்லையப்பர் அவர்களது சேவையைப் பாராட்டவும், நிதிகள் வசூலிக்கப்பட்டு அளிக்கப்பட்டன.

**சங்கத்துக்கு ஓர் இடம்**: சங்கம் தனக்கென ஓர் இடம் ஏற்படுத்திக்கொள்ள பல ஆண்டுகளாக முயன்று வருகிறது. பல அன்பர்கள், சங்கங்களுடைய ஒத்துழைப்பால் ஆங்காங்கு அலுவலகத்தை வைத்துக்கொண்டு வேலை செய்து வந்த சங்கம் இப்போதும் வாடகைக் கட்டடத்தில் தான் இருக்கிறது. இடக்குறைவு காரணமாகவே பல வேலைகளைச் சிறப்பாகச் செய்ய இயலவில்லை. இவ்வாண்டில் திரு. ந. சிதம்பர சுப்ரமண்யன் தலைமையில் தொடங்கியுள்ள கட்டிட நிதிக்கு ஏராளமாக நன்கொடை அளித்தும், வசூலித்துக் கொடுத்தும் உதவி இவ்வாண்டு இறுதிக்குள் நமது இடம் என்ற பெருமையோடு புதுமனை புகும் வாய்ப்பை அளிக்கவேண்டுமென்று நமது அங்கத்தின அன்பர்களையும், ஆதரவாளர்களையும் வேண்டிக்கொள்கிறோம்.

**நூல்கள் வெளியீடு**: வால்மீகி, ராமாயணம், திருவாய்மொழி, பார்த்திபன் கனவு, லிப்கோ மலிவு நூல்கள் போன்ற நூல்களின் வெளியீட்டு விழாக்களில் சங்கம் கலந்து கொண்டு, ஆதரவு காட்டியது.

**மற்றவை**: 1956-ம் ஆண்டில் மகா நாட்டை ஒட்டி ஒரு புத்தகக் காட்சி—1955-ம் ஆண்டில் வெளி வந்தவை—ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்கும்

'பாரதி'க்கும்

# எமது வாழ்த்துக்கள்

★

சுதேசமித்திரன்

மவுண்ட்ரோடு, : : சென்னை-2.

தமிழ் இலக்கியத்துக்கும் தமிழ் நாட்டுக்கும், தமிழன்பர்கள் அறிஞர்களுக்கும் இயன்ற சேவையைச் சங்கம் தொடர்ந்து செய்து கொண்டுவருகிறது. ஆசிய எழுத்தாளர் மகாநாடு. கல்கத்தா எழுத்தாளர் சங்க ஆண்டு விழா, பி. இ. என். மகாநாடு முதலியவற்றுக்கு சங்கம் பிரதிநிதிகளை அனுப்பி, பலரும் பாராட்டும் வகையில் பணி செய்திருக்கிறது. வெளி நாட்டு அறிஞர்கள். பிறமொழி வல்லுனர்கள் தமிழகம் வரும்போது அவர்களை வரவேற்றுப் பாராட்டி மகிழ்ந்துள்ளது. அவ்வப்போது நகரிலும் வேறிடங்களிலும் நடைபெறும் இலக்கிய விழாக்களில் பங்கு கொண்டு பணியாற்றி யுள்ளது.

சென்னை அரசாங்கத்தால் நிறுவப்பட்டுள்ள, தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக் கவுன்சிலில் நமது சங்கத்துக்குப் பிரதிநிதித்துவ மளிக்கப்பட்டிருப்பது நமக்கு மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

எழுத்தாளர் யார், யார் தொகுப்பு வேலையும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அதற்கான துணைக்குழுவும் ஆவன செய்வதில் முனைந்துள்ளது. விரைவில் அத்தொகுப்பு வெளி வருமென எதிர்பார்க்கிறோம்.

**வேண்டுகோள் :** சங்கம் என்பது அங்கத்தினர்களது கூட்டுறவாலும் பூரண ஒத்துழைப்பாலும் இயங்க வேண்டிய ஸ்தாபனம் என்பதை யாவரும் ஒப்புக் கொள்வர். சந்தாவை காலந்தவறாமல் செலுத்தி வருவதும், அவ்வப்போது நன்கொடைகள் தருவதும் மட்டுமின்றி, அவ்வப்போது நடக்கும் கூட்டங்களுக்கும், இதர நிகழ்ச்சிகளுக்கும் அங்கத்தினர்கள் ஏராளமாக வந்து கலந்து கொண்டால் சிறப்பாக இருக்குமென்பதைக் குறிப்பிட விரும்புகிறோம். வருகிற ஆண்டுகளில் அங்கத்தினர்கள் பூரணமாக ஒத்துழைத்து ஆதரவு காட்டவேண்டுமென்பதே நமது வேண்டுகோள்.

[ஸ்ரீ ந. சிதம்பர சுப்பிரமண்யம் தமிழின் இன்றைய இலக்கிய மறுமலர்ச்சியிலே முக்கியமான ஸ்தானம் வகிப்பவர். தமிழ் எழுத்தாளர் சங்கத்திலும் அவர் பொறுப்பு வாய்ந்த பொருளாளராக இருக்கிறார். இன்றைய எழுத்திலே அவருடைய சிறு கதைகள், கட்டுரைகள், ஓரங்க நாடகங்கள் சிறப்பான தமிழ் அணிகள். ஸ்ரீ டி. எஸ். சொக்கலிங்கத்தின் மணிவிழாவை உத்தேசித்து எழுதப்பட்ட கட்டுரை இது.]

# சொக்கலிங்கமும் மறுமலர்ச்சியும்

## ந. சிதம்பர சுப்ரமண்யம்

தனி மனிதன் வாழ்க்கையில் இருபத்தைந்து வருஷங்கள் பெரும் பகுதிதான். ஆனால் தேசத்தின் சரித்திரத்திலோ, மொழியின் சரித்திரத்திலோ அது அறிய முடியாத ஒரு சிறு துளிதான். ஆனாலும். நான் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு திரு. சொக்கலிங்கம் அவர்களையும் மற்ற இலக்கிய நண்பர்களையும் சந்தித்த முதல் சந்திப்பிற்கும், இன்றையத் தினத்திற்கும் நடுவிலே சென்ற காலம் காலவெள்ளத்தில் உருத் தெரியாமல் மறைந்து விடப் போவதில்லை. ஏனென்றால், இந்த நாட்களில், தேச சரித்திரத்திலும், மொழியின் சரித்திரத்திலும் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதுவே அதன் காரணம்.

சொக்கலிங்கம், வ. ரா . ஸ்ரீனிவாசன் இவர்கள் மூவரும் ஆரம்பித்த மறுமலர்ச்சி வட்டத்தில் சேர்ந்து நானும் எழுத ஆரம்பித்த காரணத்தினால். எனக்கும் மறுமலர்ச்சி எழுத்தாளன் என்ற அத்தாட்சிப் பத்திரம் கிடைத்தது ஆனால் இன்று பல நண்பர்கள் 'மறுமலர்ச்சி' என்பது எதைக் குறித்தது? என்று அதைப்பற்றித் தெரிந்து கொள்ள பிரியப்படுகிறார்கள். சிலர் அவர்கள் சாதித்ததென்ன என்று ஆத்திரத்துடன் கேட்கிறார்கள். மறுமலர்ச்சியென்றுகூட ஒன்று உண்டா என்று சிலர் பரிகசிக்கிறார்கள்.

'மறுமலர்ச்சி என்ற வார்த்தையை முதன் முதலாக இந்த இயக்கத்தின் கொள்கைக்கு அஸ்திவாரம் போல் உபயோகித்தவர் வ. வே. சு. அய்யர். அவரும் பாரதியும் தமிழில் இலக்கிய வளர்ச்சி

எப்படி யெப்படி யிருக்க வேண்டுமென்பதை யெல்லாம் பற்றிக் கனவு கண்டுகொண்டிருந்தார்கள். இதற்குத் திட்டம் வகுப்பது போல் பாரதியார் அழகாகச் சொன்னார்.

பிறநாட்டு நல்லறிஞர்
    சாத்திரங்கள் தமிழ் மொழியில்
பெயர்த்தல் வேண்டும்;
    இறவாத புகழுடைய
புது நூல்கள் தமிழ் மொழியில்
    இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே
    பழங்கதைகள் சொல்வதி லோர்
மகிமை இல்லை
    திறமான புலமை யெனில்
வெளி நாட்டோர் அதை வணக்கஞ்
    செய்தல் வேண்டும்

இந்தக் கனவை நனவாக்கவே, வ. ரா., சொக்கலிங்கம், ஸ்ரீனிவாசன் மூன்று பேரும் சேர்ந்து ஒரு இலக்கிய வட்டத்தை நிறுவினார்கள். வ. வே. சு. அய்யர் உபயோகப்படுத்திய மறுமலர்ச்சி என்ற வார்த்தையை எடுத்துக் கொண்டு 'மறுமலர்ச்சி எழுத்தை' உருவாக்க ஆரம்பித்தார்கள். ஆங்கிலத்தில் Renaissance என்ற சொல்லுக்குச் சமமாக இந்த வார்த்தையை உபயோகித்தார்கள்.

ஆங்கிலத்தில் இந்த வார்த்தைக்கு என்ன பொருள்? ஐரோப்பாவில், இருள் சூழ்ந்த மத்திய காலத்திலிருந்து நவீன காலத்திற்கு மாறும்பொழுது ஒரு விழிப்பு ஏற்பட்டது. அதனால், கலை, இலக்கியம், சமயம், அரசியல், சமூகம் எல்லாவற்றிலும், புத்துயிர் தோன்றியது. இந்தப் புத்துயிர்பெற்ற விழிப்பே, கவிதைகளிலும், நாடகங்களிலும், ஓவியங்களிலும், அரசியல் கொள்கைகளிலும் பிரதிபலித்து நின்றது. Gothic (அதாவது வட ஐரோப்பிய) கோதிக் கலை முறையை விட்டு விட்டு, ரோம், கிரீஸ் இந்த நாட்டுச் சிற்ப முறைகளைப் பின்பற்ற ஆரம்பித்தது. வாழ்க்கையில் ஏற்பட்ட இந்த புது மலர்ச்சியைத்தான் மறுமலர்ச்சி என்றார்கள்.

அதைப் போலவே, நம் நாட்டிலும், ஆங்கில அரசாட்சியின் விளைவாக, நம் எண்ணங்கள், வாழ்க்கை முறைகள், கோட்பாடுகள் எல்லாம் புரட்சிகரமாக மாற ஆரம்பித்தன. மேல்நாட்டு இலக்கியங்களோடு நமக்குப் பரிச்சயம் ஏற்பட்டது. அவர்களுடைய ஆட்சி முறையை நமக்குச் சொல்லிக் கொடுத்தார்கள். அவர்களுடைய பலவிதமான அரசியல் தத்துவங்களை ஒவ்வொன்றாக நாம் தெரிந்து கொள்ள ஆரம்பித்தோம். கட்டை வண்டி நடத்திப் போவதுபோல் போய்க் கொண்டிருந்த நமக்குப் புதுப் பாதைகள், புது சேருமிடங்கள் எல்லாம் ஒவ்வொன்றாகத் தோன்ற ஆரம்பித்தன. மகாத்மா காந்தி வேறு தண்டி யாத்திரை ஆரம்பித்து மக்களி

டம் ஒரு பெரிய விழிப்பை ஏற்படுத்திவிட்டார். போராட்டம் வலுக்க ஆரம்பித்ததும், அதைத் தெரிந்து கொள்ள மக்கள் ஆவலுடன் துடித்தனர் பத்திரிகைகள் அதிகரிக்க ஆரம்பித்தன. திரு. சொக்கலிங்கம் அவருக்கே உரிய பாணியில் மக்களின் அறிவை வளர்த்தார். அவருடைய துணிகரமான போக்கும், சகலருக்கும் புரியும்படியான முறையில் எடுத்துச் சொல்லும் திறனும், அன்று மக்கள் இதயத்தில் கொழுந்து விட்டெரிந்த குமுறலின் வேகத்தைப் பிரதிபலிக்கும் உணர்ச்சி வேகமும், மக்கள் சொக்கலிங்கத்திடம் கண்டதுபோல் வேறு ஒருவரிடமும் காணவில்லை.

இந்த விழிப்பையே உறுதுணையாக வைத்து வ. ரா., சொக்கலிங்கம், ஸ்ரீனிவாசன் மூன்று பேர்களும் இலக்கியத்தில் ஒரு புது யுகத்தைப் படைக்க ஆசைப்பட்டார்கள், இலக்கியம் பழைய தடத்தை விட்டு மாறவேண்டுமென்பதே இவர்கள் குறிக்கோள். வாழ்க்கையோடு ஒட்டாத பழையமரபுகளிலிருந்து பிரிந்து வாழ்க்கையோடு ஒட்டிய புது மரபுகளைத் தடம்பிடித்துச் செல்லவேண்டும், உயிரில்லாதவைகளை உதறி எறிந்து விட்டு உயிருள்ளவைகளைப் பிடித்து வைத்துக் கொள்ள வேண்டும். புது இலக்கியத்தின் திணையும் மருதமும், ரஷியாவிலும் அமெரிக்காவிலும் மற்ற மேல் நாடுகளிலும் தான் இருக்கின்றன என்று முடிவு கட்டினார்கள். மேல் நாட்டுப் பண்பாட்டின் தாக்குதல்களினால் குழம்பியிருந்த வாழ்விலே,புதுக் கருத்துக்கள், புதுக் கற்பனைகள், புதுக் கொள்கைகள் இவைகளையெல்லாம் கொண்டு வந்து வாழ்விலே மறுபடியும் ஒரு மலர்ச்சி ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்துடனே தான் மறுமலர்ச்சி எழுத்தாளர் என்று சொல்லிக் கொண்டார்கள்.

மறுமலர்ச்சி இயக்கம் ஆரம்பிப்பதற்கு முன்பு வெளி வந்த புத்தகங்களில் பெரும்பாலும் ரெயினால்ட்ஸ் நாவல்களின் மட்டரகமான தழுவல் புத்தகங்கள், துப்பறியும் நாவல்கள், சிற்றின்ப நூல்கள், கேவல உணர்ச்சிகளைத் தூண்டக் கூடிய கதைகள் இவைகள் தாம் பதிப்பாகி வந்துகொண்டிருந்தன. இவைகளுக்கும் இலக்கியத்திற்கும் சம்பந்தமே கிடையாது. மறுமலர்ச்சிக் குழுவினர் இலக்கியப் படைப்பு என்பதையே முழு நோக்காகக் கொண்டு எழுத ஆரம்பித்தார்கள். இந்த மறுமலர்ச்சி வட்டத்தோடு இலக்கியம் அடைபட்டு விடவில்லை. கல்கி முதலிய நண்பர்கள் ஆனந்த விகடனில் சுவையாக எழுதிக் கொண்டு வந்தார்கள். அவர்கள் எழுத்திலும் சில சிறந்த இலக்கிய சிருஷ்டிகளும் இருக்கத்தானிருந்தன. ஆயினும் அவர்கள் எழுத்து பெரும்பாலும் இன்பமூட்டும் பொழுது போக்கு என்ற அடிப்படையில் எழுதப்பட்டது. இலக்கியத்திற்குச் சீரிய பயன் உண்டு, மக்கள் சிந்தனையைத் தூண்டி, உணர்ச்சியைக் கிளறிவிட வேண்டும் என்ற முறையில் மறு மலர்ச்சி கோஷ்டியினர் எழுதினார்கள். இலக்கியத்தில் நகைச் சுவை ஒன்று மட்டும் போதாது; இலக்கியத்திற்கு ஆழம் வேண்டும். சோக ரஸமான கதைகள், சமூகத்தின்

சிக்கலான பிரச்னைகள். வாசகர்களைக் கொஞ்சம் அதிரச் செய்து சிந்திக்கச் செய்யும் கருத்துக்கள் இவைகள் எல்லாம் அநேகப் பத்திரிகைகளுக்கு ஒவ்வாத விஷயங்களாயிருந்தன. இவைகளை எல்லாம் மறுமலர்ச்சி வட்டாரப் பத்திரிகைகளான மணிக்கொடி, காந்தி, தினமணி வெளியிடத் தயங்கியதில்லை. உண்மையைச் சொல்லத் தயக்கம் வேண்டியதில்லை; அச்சம் வேண்டியதில்லை; கோழைத்தனமான பயமோ, போலி கௌரவமோ வேண்டியதில்லை என்றுதான் எழுதினார்கள். அவைகள் மேற்சொன்ன பத்திரிகைகளில் வெளியாயின. புதுமைப்பித்தன் கதைகளில் பெரும்பாலும், மௌனியின் கதைகள், எம். வி. வி.யின் சில கதைகள் மற்றப் பத்திரிகைகளில் பிரசுரமாயிருக்கவே முடியாது. ஆனால் இன்று அவைகள் மிகவும் பாராட்டப்படுகின்றன.

மறுமலர்ச்சி கோஷ்டி செய்த மற்றொரு காரியம் இலக்கியத்தில் களவு செய்தலை அம்பலப்படுத்துவது எழுத்தாளனுக்கு இலக்கியப் படைப்பு சம்பந்தப்பட்ட வரையில், நேர்மையும், நாணயமும் வேண்டும். இதர மொழிகளில் சிறந்து விளங்கிய கதைகளையும் கற்பனைகளையும், சில எழுத்தாளர்கள் பெயர்களையும் சூழ்நிலையையும் மாற்றி தங்கள் எழுத்தாகப் பிரசுரிப்பது சகஜமாக இருந்தது. இது இலக்கிய வளர்ச்சிக்கே ஒரு பெரும் தடை. தங்கள் பெயர் பத்திரிகைகளில் வரவேண்டும் என்று ஆசைப்படுகிறவர்கள் சுலபமாகச் செய்யக்கூடிய காரியம் இது. பெயர் வாங்க எளிதான காரியம் ஒன்று இருக்கும்பொழுது சொந்தக் கற்பனைக்குத் திண்டாடுவானேன் என்றுதான் நினைக்கத் தோன்றும். இது மோசமான நிலை. அதை மறுமலர்ச்சி வட்டம் அழுத்தமாகக் கண்டித்து இலக்கியத்தில் நேர்மையை வளர்த்தது.

மற்றொன்று பாரதிப் பிரசாரம். இன்று பாரதியின் பெயர் எங்கும் முழங்குகிறதென்னவோ வாஸ்தவம்தான். இன்று பாரதியை மிகவும் கொண்டாடுபவர்களிடையேகூட அன்று பாரதிக்குச் செல்வாக்கு இல்லை. வ. ரா. விற்குப் பாரதிதான் மூச்சு. தம்மைப் போலவே, மறு மலர்ச்சிக் குழுவில் ஒவ்வொருவரையும் பாரதி பக்தராக்கினார். இவர்களுடைய பாரதிப் பிரசாரமே, இன்று பாரதியை யாவரும் ஒப்புக்கொள்ளும் நிலையை ஏற்படுத்தியதென்று கூடச் சொல்லலாம்.

மறுமலர்ச்சிக் குழுவினர், இலக்கியத்தில் புதுச் சோதனைகள் செய்யவேண்டும் என்பதில் அடிப்படையான ஒற்றுமை கண்டார்கள். மேனாட்டு இலக்கியங்களில் எத்தனை மாதிரியான உருவங்கள் உண்டோ அவைகளையெல்லாம் கையாளப் பிரியப்பட்டனர். வசன கவிதை, சிறு கதைகளில் பலவித உத்திகள், ஓரங்க நாடகங்கள். அரசியல் கட்டுரைகள், தத்துவக் கட்டுரைகள், நாடகச் சித்திரங்கள், நிழல் சித்திரங்கள், வியாசம், வாழ்க்கை வரலாறு இப்படிப் பல உருவங்களைக் கையாண்டு வெற்றியும் பெற்றனர். இலக்கிய ஆராய்ச்சி, இலக்கிய வடிவங்களைப் பற்றிய

## கலைமகள் இலக்கியம்

தமிழ இலக்கிய சரித்திரத்தில் கலைமகள் முக்கிய மான இடம் வகிப்பதைத் தமிழன்பர்கள் யாவரும் அறிவார்கள். விஞ்ஞானம், சரித்திரம், கலை, பிரயாணம் முதலிய பல்வேறு விஷயங்களைப்பற்றிய உயர்தரமான இலக்கியத்தை, எல்லோரும் புரிந்துகொண்டு படிக்கக் கூடிய இனிய நடையில் தோன்றச் செய்த பெருமை கலைமகளைச் சாரும். நாவல், சிறுகதை என்னும் துறைகளில் இன்று தமிழில் உன்னதம் பெற்ற எழுத் தாளர்களில் பெரும்பாலோர் கலைமகளில் எழுதி யவர்களே. இவ்வாறு புதிய தமிழ் இலக்கியத்தில் ஓர் அத்தியாயத்தைக் கவர்ச்சிகரமாகவே இணைத்திருக்கிறது கலைமகள்.

கலைமகள் வெளியீடுகள், அந்த அந்த விஷயங் களில் தேர்ச்சிபெற்ற எழுத்தாளர்கள் எழுதி, நன்கு பரிசோதிக்கப்பெற்று, கண்ணுக்கும் கருத்துக்கும் அழகிய அமைப்புடன் வெளிவருகின்றன. ஆகையால் தமிழ நாட்டில் இன்று நிறையப் பேர் அவற்றை விரும்பிப் படிக்கிறார்கள்.

எந்த விஷயத்திலும் எந்த நல்ல புத்தகத்துக்கும் எங்களுக்கு எழுதுங்கள் —

**கலைமகள் காரியாலயம்**

**மயிலாப்பூர் : : சென்னை-4**

சர்ச்சை, இலக்கியங்களைப் பற்றிய விவாதம் இவைகளை அடிக்கடி ஏற்பாடு செய்து இலக்கியத்திலே ஒரு உணர்வு இருக்கும்படி செய்து கொண்டிருந்தனர்.

வேற்று மொழிகளிலிருந்து உயர்ந்த இலக்கியங்களை மொழி பெயர்க்கத் தொடங்கியதும் இந்தக் குழுவினர் தாம். டிக்கன்ஸின் 'இரு நகரக் கதை', இப்ஸனின் 'பொம்மை வீடு'. சர்வதேசக் கதைகள், ஜப்பானிய நாடகங்கள் இவைகள் இந்த வட்டாரத்து பத்திரிகைகளிலேயும், நவயுகப் பதிப்புக்களாகவும் வெளியாயின. மேனாட்டு இலக்கியங்களில் தலைசிறந்தவைகளை அதிகப்படியாகத் தமிழாக்கியிருப்பது இந்தக் குழுவைச் சேர்ந்தவர்களே. சமீப காலத்திலேகூட, திரு சொக்கலிங்கம், டால்ஸ்டாயின் தலை சிறந்த நாவலான 'போரும் வாழ்வும்' என்ற நூலைத் தமிழாக்கியிருப்பது இதற்கு ஒரு சிறந்த அத்தாட்சி.

இலக்கியம் நிரந்தரமாக இருக்கவேண்டுமானால், அது ஒரு கோஷ்டிக்கோ, சமூகத்திற்கோ கட்டுப்பட்டு நிற்காது. கட்டுப்பாட்டுக்குள் அடக்கப்பட்ட எந்த சிருஷ்டியும் உயர்ந்த இலக்கியமாக அமையாது. ஏனென்றால், இலக்கியம் என்பது தனி மனிதனின் சிருஷ்டி. ஒரு தனி மனிதனின் தனிமையான அனுபவமே இலக்கியமாக மலர்கிறது. எல்லோரும், ஒரே விதமாக நினைப்பதோ, செய்வதோ, அனுபவத்தில் காண்பதோ, இலக்கியம் சம்பந்தப்பட்ட வரையில் நடைபெறாத காரியம். தனித் தன்மை என்று ஒன்று இருக்கும்பொழுதுதான் அது இலக்கியமாகிறது. தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் ஒன்றைப்போன்று மற்றொன்று இருக்க முடியும். ஆனால், கலை சம்பந்தப்பட்ட வரையில் ஒன்றைப்போன்று மற்றொன்று இருக்குமேயானால், ஒன்றுதான் உண்மை; மற்றொன்று போலிதான்.

ஆனல், இலக்கியம் ஒரு சூழ்நிலையில் வளரலாம், அந்தச் சூழ்நிலையைப் பிரதி பலிக்கலாம். சூழ்நிலை என்ற அளவில் தான் மறுமலர்ச்சி என்ற வட்டத்தை நாம் எடுத்துக் கொள்ளவேண்டும் ஒருவர் மாதிரி மற்றொருவர் நினைக்கவில்லை; எழுதவில்லை. அவர்களிடம் இருந்த ஒருமைப்பாடு ஒரு விஷயத்தில்தான். அது இலக்கியத்தில் அவர்களுக்கிருந்த ஆர்வம் ஒன்றிலேதான். இலக்கியத்தால் வாழ்விலே வெற்றியைக் கண்டு விடலாமென்றோ, பெரும் புகழை அடைந்து விடலாமென்றோ அவர்கள் இலக்கியத்தை நாடி வரவில்லை. இலக்கியத்தில் புதிய சோதனைகளும் சாதனைகளும் செய்யவேண்டும் என்ற ஆர்வம் ஒன்றுதான் அவர்களை ஒன்றாகப் பிணைத்தது. மற்றபடி ஒருவர்க்கொருவர் கொள்கைகளிலும் பார்க்கும் கோணங்களிலும் எவ்வளவோ வித்தியாசங்கள் இருக்கத்தானிருந்தன.

இந்த இயக்கம் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றிருக்கிறது என்பதைக் காலம்தான் நிர்ணயிக்கும். ஆனாலும், சொக்கலிங்கமும் மற்ற இருவரும் ஆரம்பித்த ஒரு சிறு முயற்சி பெருகி,

இன்று ஒரு பெரிய பரம்பரையையே தமிழுக்குக் கொடுத்திருக்கிறது. பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், கு. ப. ரா., பி. எஸ். ராமையா, மௌனி, சிட்டி, செல்லப்பா, க. நா. சுப்ரமண்யம், எம் வி. வி. பி. எம். கண்ணன், தி. ஜ. ர., கி. ரா. இளங்கோவன் முதலியவர்களையும். அடுத்த வாரிசுகளான ஜானகிராமன், கரிச்சான்குஞ்சு, சிதம்பர ரகுநாதன் முதலியவர்களையும், இன்னும் பலரையும், ஒரு இயக்கம் உண்டாக்கி யிருக்கிறதென்றால் அது பெருமைப்பட வேண்டிய விஷயம்தான். தமிழ் இலக்கியத்தில் மேலே குறிப்பிட்டவர்களுடைய படைப்புகள் எந்த நிலையில் இருக்கின்றனவோ, அதுவே இந்தக் குழுவின் அடிப்படைக்கு நற்சாட்சி.

திரு. சொக்கலிங்கம் தேசத்திற்காகச் செய்திருக்கும் தியாகங்களும் சேவைகளும் நாடு விழித்தெழுவதற்கு அவர் பத்திரிகை மூலம் செய்த செயற்கரிய சாதனைகளும் பெரிதென்பதை மக்கள் நன்கு அறிவார்கள்.

ஒரு பெரிய இலக்கிய பரம்பரை தோன்றுவதற்கும் அவர் காரணமா யிருந்திருக்கிறார் என்பது அவருடைய சேவைகளுக்கு மகுடம் வைத்தது போன்றது. நாட்டுக்கும் மொழிக்கும் அவர் செய்திருக்கும் திருப்பணிகளுக்கு, நம் அன்பு கலந்த அஞ்சலியைத்தான் அவருக்கு நாம் கொடுக்க முடியும். அவர் பணி மேன்மேலும் ஓங்குக!

★

## ந. சிதம்பர சுப்ரமணியம் எழுதியுள்ள நூல்கள்

**சக்ரவாகம்** முதலிய கதைகள்

**சூர்யகாந்தி** முதலிய கதைகள்

**வருஷப்பிறப்பு** முதலிய கதைகள்

**ஊர்வசி** முதலிய ஓரங்க நாடகங்கள்

**இதயநாதம்** — நாவல்

**நாகமணி** — நாவல்

[பதினைந்து வருஷங்களுக்கு முன் 4-11-1944 அன்று கோவையில் கூடிய முதல் தமிழ் எழுத்தாளர் மகாநாட்டுக்குத் தலைமை வகித்து ஸ்ரீ டி. எஸ். சொக்கலிங்கம் அவர்கள் பேசியதில் சில பகுதிகளை இங்கு தந்திருக்கிறோம். அதற்கு முந்திய பதினைந்து வருஷங்களில் ஸ்ரீ சொக்கலிங்கம் தமிழ் எழுத்து மறுமலர்ச்சியிலே அற்புதமாகச் சேவை செய்தவர். ஒரு கோஷ்டியினர் அவரையே தலைவராக ஏற்று எழுதிவந்தனர் என்பது பிரசித்தமான விஷயம். எழுத்தாளர்களின் பொறுப்புகளையும் கடமைகளையும் உரிமைகளையும் நமக்கு எடுத்துச் சொல்கிற இந்தக் கட்டுரை இன்றும் சிந்தனைக்குரியது.]

# தமிழ் எழுத்தையும் எழுத்தாளரையும் பற்றி....

டி. எஸ். சொக்கலிங்கம்

தமிழ் எழுத்தாளர்கள் ஒரு மகாநாடு கூடுவது சாத்தியமானது பற்றி நான் ரொம்ப சந்தோஷப்படுகிறேன். ஏனெனில் இந்தக் காரியம் அவ்வளவு சுலபமானதல்ல. மணலைக் கூடக் கயிறாய்த் திரித்துவிடலாம், வானத்தை வேண்டுமானாலும் வில்லாய் வளைத்துவிடலாம். ஆனால் எழுத்தாளர்கள் ஒன்று சேருவதென்பது அவைகளைவிட கஷ்டமான காரியம். நவக்கிரகங்களை சிருஷ்டி செய்தவர்கள் இந்த எழுத்தாளர்களைப் பார்த்துதான் சிருஷ்டி செய்தார்களோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. அந்த மாதிரியாக ஒவ்வொருவரும் வெவ்வேறு திக்கை பார்க்கக் கூடியவர்கள். அப்படிப் பார்ப்பதைப்பற்றி எனக்கு வருத்தமில்லை' அறிவாளிகள் எப்பொழுதுமே தங்களுடைய நுண்ணிய அறிவால் புதிய சிருஷ்டிகள் செய்வதிலேயே விருப்பமுள்ளவர்களாய் இருப்பார்கள். எழுத்தாளர்கள் எல்லாருமே அறிவாளிகள். அவர்கள்தான் சமூகத்தின் மூளை. ஒரு பிரச்னையின் பற்பல அம்சங்களையும் தங்களுடைய அறிவால் துலக்குவதுதான் எழுத்தாளர்களின் வேலை. ஆகவே எல்லா விஷயங்களிலும் எல்லாரும் ஒரே அபிப்பிராய முள்ளவர்களாய் இருக்க முடியாது. இருக்கவுங் கூடாது. கிளிப்பிள்ளையைப்போல ஒரேமாதிரி சொல்லுவதென்றால் அன்றே சமூகத்தின் வளர்ச்சி ஸ்தம்பித்து விட்டதென்று சொல்லலாம். அன்றே அறிவாளிகளின் சிருஷ்டி—சக்தி குறைந்து விட்டதாக ஏற்படும். ஆகவே உலக நன்மைக்காகவென்று எப்படி நவக்கிரகங்கள் வெவ்வேறு திசைகளைப் பார்த்து இருக்கின்றனவோ அதே மாதிரி, சமூகத்தின் நன்மைக்காக எழுத்

தாளர்களும் வெவ்வேறு திருஷ்டி கொண்டிருக்க வேண்டியது ரொம்ப அவசியம். ஆனல் அதற்காகப் பொதுவான வேலைகளை செய்து முடிக்க ஒன்று சேரக்கூடாது என்பதுண்டா? இல்லை. அப்படியானல் எழுத்தாளர் ஏன் ஒன்று சேருவதில்லை? அதுதான் தமிழ்நாட்டிற்குள்ள பெரிய குறை.

## சங்க காலத்தில்

சங்க காலத்தில் பல கவிகள் ஒன்று சேர்ந்து தமிழை வளர்த்திருக்கிருர்கள் அதே மாதிரி தமிழுக்குத் தற்சமயம் அவசியமான வேலையைச் செய்வதற்கு எழுத்தாளர்கள் ஒன்று சேரலாம்; ஒன்று சேர்ந்துதான் ஆகவேண்டும். அப்படியிருந்தும், ஜனங்களுக்கு எத்தனையோ நீதிகளை போதிக்கும் இந்த எழுத்தாளர் மட்டும் ஒன்று சேருவதில்லை ஏன் சேருவதில்லை? எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். ஒன்று மட்டும் நிச்சயம். எழுத்தாளர் ஒவ்வொருவரும் தனித்திலங்கும் வன்மை பெற்றவர்கள் என்று நினைக்கிருர்கள். இந்த இறுமாப்பை நான் வரவேற்கிறேன். ஆனல் மற்ருெரு முக்கியமான விஷயம் இருக்கிறது. எழுத்தாளர்கள் சொற்பமாய் இருக்கும் காலத்தில் இந்த இறுமாப்பு கொள்கையால் கெடுதல் எதுவுமில்லை. எழுத்தாளர் எண்ணிக்கை அதிகமாய்விட்டால் அவர்கள் அந்த இறுமாப்பைக் கொஞ்சம் ஒதுக்கி வைத்துத்தான் ஆகவேண்டும். அவர்களுடைய லட்சியம் நிறைவேறுவதற்கும், அவர்களுடைய இகலோக வாழ்க்கையில் சௌகரியங்களைப் பெறுவதற்கும் எழுத்தாளர்கள் ஒன்று சேர்ந்துதான் தீரவேண்டும். ஆகவே எண்ணிக்கை அதிகமாய் விட்டால் ஒன்று சேரவேண்டிய அவசியம் தானுக ஏற்பட்டு விடுகிறது. அந்த அவசியமே இந்த மகாநாடு சாத்தியமானதற்குக் காரணமாய் இருந்ததென்று நினைக்கிறேன்.

## புதிய அத்தியாயம்

எப்படியோ இன்று முதல் தடவையாக ஒன்று கூடியிருக்கிருேம். இம்மாதிரிக் கூடும்படி செய்ததற்கான பெருமை முழுவதும் கோவை ஜில்லா எழுத்தாளர் சங்கத்தை சேரவேண்டும். ஏனெனில், இந்த மகாநாட்டின் மூலம் தமிழ் மொழியின் சரித்திரத்திலும், தமிழ் எழுத்தாளர்களின் சரித்திரத்திலும் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாவதாக நினைக்கிறேன். எழுத்தாளர்தான் சமுதாயத்திற்கு வழி காட்டுகிறவர்கள். அவர்களுடைய பேனு முனையினுல். கத்திமுனையினுல்கூட சாதிக்கமுடியாத பெரிய காரியங்களைச் சாதிக்கிருர்கள். ஜனங்களின் மனப் போக்கை அவர்களால் மாற்றமுடியும். புரட்சியைக் கிளப்பிவிட முடியும். சமூக அமைப்புகளையே தலை கீழாகப் புரட்டிவிட அவர்களால் முடியும். இதனுல்தான் எழுத்தாளர் என்ருல் எதேச்சாதிகார சர்க்கார் நடுங்குகிருர்கள். இதனுல்தான் எழுத்தாளனுக்கு ஜனங்கள்

உயர்ந்த அந்தஸ்தைக் கொடுக்கிறார்கள். இந்த அந்தஸ்தைக் கண்டு ஆனந்தம் கொண்டு பலர் எழுத்தாளர்களாக வர வேண்டுமென்று ஆசை கொள்ளுகிறார்கள். அவர்களை யெல்லாம் நான் வரவேற்கிறேன். ஏனெனில், போதுமான வருமானம் இல்லாத தொழில் ஒன்று உண்டென்றால் அதுதான் எழுத்தாளர் தொழில், அந்தக் காலத்திலும் சரி, இந்தக்காலத்திலும் சரி, நித்திய தரித்திரத்திற்கும் எழுத்தாளர்களுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருந்து வருகிறது. இதைத் தெரிந்துங்கூட எழுத்தாளராய் வரச் சிலர் விரும்புவார்களானால் உண்மையிலேயே அதில் அவர்களுக்கு ஆர்வம் இருப்பதையே காட்டுகிறது. அம்மாதிரியாக அடக்க முடியாத ஆர்வமுள்ளவர்கள் எழுத்தாளர்களாகவோ, எழுத்தாளர்களில் சிறந்தவர்களாகவோ ஆக முடியும் என்பதில் சந்தேகமில்லை.

## காரிய விவேகம் வேண்டும்

ஆனால் எழுத்தாளர் என்போர் எப்பொழுதும் தரித்திரத்தில் தான் இருந்து வரவேண்டுமென்ற கட்டாயம் உண்டா? இதைப் பற்றி எழுத்தாளர் சிந்திப்பதில்லை. உலகிலுள்ள மற்ற எல்லா விஷயங்களையும் எழுத்தாளர் சிந்திக்கிறார்கள். தங்களைப் பற்றி மட்டும் சிந்திப்பதில்லை. தங்களுடைய பாட்டுகள் பிரசுரமானால் போதும் என்று கவிகள் நினைக்கிறார்கள். கதைகள் புத்தக ரூபமாய் வந்தால் போதும் என்று கதை எழுதுகிறவர்கள் எண்ணுகிறார்கள். கட்டுரைகள் பத்திரிகைகளில் வந்தால் போதுமென்று அவற்றை எழுதுகிறவர்கள் விரும்புகிறார்கள். இந்த நினைப்பைப் பல பிரசுரகாரர்கள் தங்களுடைய சுயநலத்திற்காக உபயோகப் படுத்திக்கொள்ளுகிறார்கள். பிரதிப் பிரயோசனத்தை ரூபாய் அணா பைசாவில் காட்டாமல், காசு செலவில்லாத உபசார மொழிகளில் காட்டுகிறார்கள். இவற்றைப் பெற்று எழுத்தாளரும் திருப்தியடைகிறார்கள். இந்த நிலைமை மாறவேண்டும். மற்ற ஜனங்களைப் போலவே எழுத்தாளருக்கும் பசி உண்டு; தாகம் உண்டு. அவற்றைப் போக்குவதற்கான வசதிகளை மற்றவர்களைப் போலவே எழுத்தாளரும் பெறவேண்டும். இதற்கு எழுத்தாளர்களுக்குள் ஒற்றுமை வேண்டும். அந்த ஒற்றுமை இந்த மகாநாட்டின் மூலம் ஏற்படுமென்று நம்புகிறேன்.

## சமுதாய தர்மகர்த்தர்கள்

எழுத்தாளர்தான் சமுதாயத்தின் தர்மகர்த்தர்கள். சமுதாயத்தின் முன்னேற்றத்திலேயே அவர்கள் சிந்தனை இருக்கவேண்டும். புதிது புதிதாகக் கிளம்பும் தீமைகளுக்குப் பரிகாரம் கண்டு பிடிக்கவேண்டியது அவர்களுடைய வேலை. வரப்போகும் பிரச்னைகளை முன்னதாக அறிந்து சொல்லுவதும் அவர்களுடைய கடமை. ராஜீயவாதிகளால் தனியாக எதுவும் செய்துவிட முடியாது.

கருத்து மிகுந்த கதை -

திகட்டாத தீந்தமிழ் வசனம் -

நல்ல நடிப்பு - -

பொருள் பொதிந்த பாடல்கள் -

இத்தனையும் உண்டு என்றால் அது -

★

**ஏ எல்எஸ். தயாரிப்பு**

என்பது திண்ணம்

★

*பல்லாண்டுகளாகப் படவுலகுக்குப்*
*பணி புரிந்து வருகிறது*

**( ALS. PRODUCTION )**

**ஏஎல்எஸ். புரொடக்‌ஷன்ஸ்**

(லெஸ்ஸீஸ் : பரணி ஸ்டூடியோ)

தங்களுடைய கவிகளாலும், கதைகளாலும், கட்டுரைகளாலும் ஜனங்களை எழுத்தாளர் தயார் செய்துவைத்த பின்புதான், ராஜீய வாதிகள் அந்த சந்தர்ப்பங்களை உபயோகிக்க முடியும். இம்மாதிரி ஜனங்களை தயாரிப்பதற்கு முதலில் பாஷையை வளர்க்கவேண் டும். உலகில் தோன்றும் சகல விஷயங்களையும் அந்த பாஷையில் சொல்லக்கூடிய விதத்தில் அது வளம் அடைய வழி கண்டுபிடிக்க வேண்டும். அடுத்தபடியாக, சகல விஷயங்களைப் பற்றியும் அறியக்கூடிய புத்தகங்களை அந்த பாஷையில் வெளியிடவேண் டும். இந்த இரண்டையும் செய்து முடித்தால்தான் சமுதாய வளர்ச்சிக்காக எழுத்தாளர் தங்களுடைய வேலையைச் செய்ய முடியும்.

## ஆதாரத் தமிழ்

தமிழ் மொழி வளர்ச்சியடையவேண்டுமானால் சில காரி யங்களை நாம் உடனே செய்தாகவேண்டும். ராஜாங்க பாஷை ஆங்கிலமாய் இருப்பதாலும், செய்திகளும் புதிய கருத்துக்களும் ஆங்கில மொழியிலேயே வருவதாலும் அதற்குத் தக்கபடி தமிழை வளர்க்கவேண்டும். தற்காலம் வழக்கத்திலுள்ள தமிழ் மொழியை அடிப்படையான (பேஸிக்) தமிழ் என்றே சொல்லலாம். ஆங்கில மொழி ரொம்ப விரிவடைந்திருப்பதால், புதிதாகக் கற்றுக்கொள்ளு கிறவர்களுக்கு சுலபமாய் இருக்கும்பொருட்டு "அடிப்படை ஆங் கிலம்" என்று ஒருமுறையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். தமிழுக்கு அம்மாதிரிச் செய்யவேண்டிய அவசியமே இல்லை. ஏனெனில், தமிழ் அந்த அடிப்படையில்தான் இருக்கிறது. ஆங்கிலத்தை போல விரி வடையும்படி அதைச் செய்யவேண்டும் அதற்கு அதிகமான வார்த் தைகள் வேண்டும். வெவ்வேறு பொருளுள்ள பல ஆங்கில வார்த் தைகளுக்கு தற்சமயம் ஒரே தமிழ் வார்த்தையைத்தான் உப யோகிக்க வேண்டியிருக்கிறது. பிரீடம், லிபர்ட்டி, இண்டிபெண் டன்ஸ் மூன்றுக்கும் விடுதலை என்பதுதான் தற்சமயம் உப யோகத்திலுள்ள வார்த்தை. பள்ளிக்கூடங்களில் சொல்லிக் கொடுக்கும் மொழி பெயர்ப்புக்கும் பத்திரிகை மொழி பெயர்ப் புக்கும் வித்தியாசம் இருக்கிறது. இதனால் இன்ன ஆங்கில வார்த் தைக்கு இன்ன தமிழ் வார்த்தைதான் அர்த்தம் என்ற நிச்சய மில்லாமல் தமிழ் உழலுகிறது. நிச்சயமான பொருளை வரை யறுத்தால்தான் பாஷை வளர முடியும். இடையிடையே ஆங்கில வார்த்தைகளைப் போட்டோ, அல்லது சுற்றி வளைத்து வியாக் யானஞ் செய்தோ சொல்லிக்கொண்டு போவதால் பாஷை வளர முடியாது. அவசியமான ஆங்கில வார்த்தைகளுக்கெல்லாம் தமிழில் வார்த்தைகள் கண்டு பிடித்தாகவேண்டும். வழக்கத்தில் நிலைத்துப் போன பிறமொழி சொற்களுக்குப் பதிலாக கண்டிப்பாக தமிழ் வார்த்தைகள் கண்டுபிடிக்கவேண்டு மென்கிற அவசிய மில்லை. சைக்கிள், மோட்டார், ரயில், பெட்ரோல், பீரங்கி, துப்பாக்கி இம்மாதிரி வார்த்தைகளை அப்படியே சேர்த்துக் கொள்

வாழ்க்கையில் உள்ளதை உள்ளபடி சித்திரிப்பதுதான் இலக்கிய முறை. ஆனாலும் வாழ்க்கையில் மேன்மையும் உண்டு. சிறுமையும் உண்டு. அழகும் உண்டு, அவலட்சணமும் உண்டு. பயன்படுவதும் உண்டு, பயனற்றதும் உண்டு. பொறுக்கி எடுத்துக் கொள்வதில்தான் எழுத்தாளர்களின் கலைத் திறமை நிற்கிறது. கலையில் உண்மை இருக்க வேண்டும். உண்மையின்றிக் கலை யில்லை. ஆனால் உண்மையெல்லாம் கலையாகி விடாது. நிகழ்ச்சிகளையும் சம்பாஷணைகளையும் பதிவு செய்து விட்டால் இலக்கியமாகி விடாது. எது கலைக்கு உதவும் என்பதைக் கண்டு அதைத் தனிப்படுத்தி இலக்கிய உருவத்தைத் தந்தால் அது கலையாகும்.

—ராஜாஜி

*Space donated by* The Bharathan Publications Private Limited
Proprietors of the KALKI & SWARAJYA

ளலாம் இம்மாதிரியாகத் தமிழ் வார்த்தைகளை தொகுத்து ஒரு நிச்சயமான அர்த்தத்திற்குள் அவைகளை அமைக்க வேண்டுமானால், அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதுதான் ஆங்கில-தமிழ் அகராதி தயாரிப்பதாகும். தற்சமயம் ஒரு நல்ல ஆங்கில அகராதி இல்லாதிருப்பது தமிழுக்கே பெரிய அவமானம் என்று நினைக்கிறேன்.

## எழுத்துப் பிரச்னை

தமிழ் எழுத்துக்கள் சம்பந்தமாகவும் நாம் உடனே கவனம் செலுத்த வேண்டும். கன எழுத்துக்கள் தமிழில் இல்லை. அவை அவசியமா என்பதைக் கேட்க வேண்டியதே இல்லை. பெயர்களை சரியாக உச்சரிக்க வேண்டுமானால் கன எழுத்துக்கள் இல்லாமல் முடியாது. தமிழ் மொழியில் அம்மாதிரி உச்சரிக்க முடியாது என்ற குறை இருக்கக்கூடாது. தமிழின் கௌரவத்திற்கும் வளர்ச்சிக்கும் கனஎழுத்துக்கள் அவசியமென்று நினைக்கிறேன். இதோடு தற்காலத் தமிழ் எழுத்துக்களை சீர்திருத்த வேண்டியதும் ரொம்ப முக்கியமான வேலை. எழுத்துக்கள் மேலும் கீழும் போவதால் அநாவசியமாக இடத்தை அடைக்கின்றன. ப என்ற எழுத்து எவ்வளவு உயரமிருக்கிறதோ அதுதான் ஒரு வரியில் எழுத்துக்களின் மத்திய பாகமாக அமைகிறது. ஆனால், அந்த வரி முழுவதும் இ என்ற எழுத்துக்காக மேலும் கீழும் எவ்வளவு இடம் வேண்டுமோ அவ்வளவையும் விடும்படியாய் இருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது மூன்றில் இரண்டு பங்கு இடத்தை பல உயிர்மெய்யெழுத்துக்களுக்காக விட வேண்டியிருக்கிறது. ஒரு பத்தி ஆங்கில எழுத்துக்கள் அளவுள்ள தமிழ் எழுத்துக்களுக்கு மூன்று பங்கு இடம் வேண்டியிருக்கிறது. இந்த அளவைக் குறைக்க வேண்டுமானால், தற்காலத் தமிழ் எழுத்துக்களை மாற்றி அமைக்க வேண்டும். நவீன சாதனங்களான டைப்ரைட்டர், லினோ டைப் முதலியவைகளை தமிழுக்கும் உபயோகப்படுத்த வேண்டுமானால், அவற்றிற்கும் ஏற்றபடி தற்கால எழுத்துக்களை மாற்றினால் தான் சுலபமாய் இருக்கும் மெய்யெழுத்தோடு இகரத்தை சேர்க்கும் போது சி-யிக்கு ஒரு மாதிரியாகவும், பி-யிக்கு இன்னொரு மாதிரியாகவும், இப்படியாக உயிரெழுத்து அடையாளங்கள் மாறிக் கொண்டு போவதால், ஒவ்வொன்றுக்கும் தனித்தனி எழுத்து வேண்டியிருக்கிறது. ஆகாரத்திற்கும், எகர ஏகாரங்களுக்கும் முறையே ா, ெ; ே, ம் அடையாளங்களாக எல்லா எழுத்துக்களுக்கும் பொதுவாய் இருக்கின்றன. அதே மாதிரி இ, ஈ, உ, ஊ, ஐ ஆகிய உயிரெழுத்துக்களுக்கும் புள்ளி எழுத்துக்களும் ஒரே மாதிரி அடையாளங்களை ஏற்படுத்தினால் எத்தனையோ தனி எழுத்துக்கள் குறைந்துவிடலாம், எழுத்துக்களில் அம்மாதிரி மாறுதல் செய்ய வேண்டியதை எழுத்தாளர் ஆட்சேபிக்கமாட்டார்கள் என்பது நிச்சயம், ஏனெனில் அவர்களுக்குதான் மாற்ற வேண்டிய அவசியம் தெரியும்.

## உருவ மாற்றம்

தமிழ் எழுத்துக்கள் ரொம்பப் புராதனமானவை யாயிற்றே. அவற்றை எப்படி மாற்றுவது என்று சொல்லுவதற்கும் வழியில்லை. தற்சமயம் உள்ள தமிழ் எழுத்துக்களின் உருவம் ஏற்பட்டு சுமார் 200 வருஷங்கள் தான் இருக்கு மென்று ஆராய்ச்சியாளர் சொல்லுகிறார்கள்; அதற்கு முன்னால் இருந்த உருவங்களை அவசியத்திற்கு தக்கபடி மாற்றுவதற்கு அக்காலத்தவர்கள் தயங்கவில்லை. உதாரணமாக க என்ற எழுத்து அந்த காலத்து கல்வெட்டுகளில் + என்ற மாதிரிதான் இருக்கிறது + இன்று க வாக உருமாறியிருக்கிறது. உயிரெழுத்துக் குறிகளை காட்டுவதற்கு தனியாக எழுத்துக்களைச் சேர்த்த காலமும் உண்டு. ஆகவே அவசியத்திற்கு தக்கபடி எழுத்துக்களை மாற்றி யமைப்பதால் குற்றம் எதுவுமில்லை. கல்வெட்டுக்காரர்களுக்கு சௌகரியமானபடி அமைந்த உருவங்களை ஓலை எழுத்துக்காரர்கள் தங்களுடைய சௌகரியத்திற்குத் தக்கபடி மாற்றி அமைத்தார்கள். அவற்றை அச்செழுத்துக்குத் தக்கபடி மாற்றாமல் அப்படியே விட்டுவிட்டபடியால் இன்று ஏராளமான எழுத்துக்கள் இருக்கின்றன. இயந்திர உலகத்திற்குத் தக்கபடி அவற்றை மாற்றியமைக்கவேண்டியது இப்பொழுது ரொம்ப அவசியமாய் இருக்கிறது.

## கூட்டு பேரத்துக்கு ஏற்பாடு செய்க

தமிழ் நாட்டு எழுத்தாளர் வேறு எந்த எழுத்தாளர்களுக்கும் எவ்விதத்திலும் குறைந்தவர்களல்ல. பத்திரிகைத் தொழிலில் இந்தியா பூராவாக தமிழ் நாட்டாரே அதிகமாய் இருக்கிறார்கள். அதேமாதிரி கதைகள், அறிவு நூல்கள், விஞ்ஞான சாஸ்திரங்கள் ஆகிய துறைகளிலும் தமிழர் முன்னேற வேண்டும். பிற பாஷை நாவல்களை மொழி பெயர்க்கும் வேலை மாறி நமது கதைகளையும், நாவல்களையும், பிற நூல்களையும், பிற பாஷைகளில் மொழி பெயர்த்துப் பரப்பவேண்டும். தமிழ் நாட்டு எழுத்தாளருக்கு இப்பொழுது முதலில் வேண்டியது ஒன்றே ஒன்றுதான். அதாவது அவர்களிடமுள்ள சிறுமைப் பித்து நீங்க வேண்டும். மற்ற எழுத்தாளர்களைவிடத் தாங்கள் எவ்விதத்திலும் தாழ்ந்தவர்களல்ல என்ற உறுதி அவர்களுக்கு ஏற்பட வேண்டும் அடுத்தபடியாக விசால நோக்கும், கொள்கையில் உறுதியும் வேண்டும், இந்த நாடு முழுவதையும் தங்கள் நாடாகப் பாவித்து பிரச்னைகளை யோசிக்க வேண்டும், தாங்கள் சரியென்று நினைப்பவைகளைத் தைரியமாக எழுதவேண்டும். தமிழ் நாட்டை தேவலோகமாக்க வேண்டுமானால் எழுத்தாளர்களால்தான் முடியும், ஆக்கல், அழித்தல் இரண்டும் அவர்கள் கையில் இருக்கின்றன அவற்றைப் பொறுப்புடன் உபயோகிப்பதற்கு வேண்டிய சிறந்தகுணங்களையும், கௌரவத்தையும் எப்பொழுதும் அவர்கள் பாது

காக்க வேண்டும். இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக அவர்களு டைய பொருளாதார நிலைமை அமைய வேண்டும் என்பது ரொம்ப முக்கியமானது. அவர்களுக்குள் கட்டுப்பாடு இருக்குமானல் இன்றுள்ள மோசமான நிலைமையில் அவர்கள் இருக்கமாட்டார்கள். குறைந்தபட்சசம்பளம் இவ்வளவு, அல்லது சன்மானம் இவ்வளவு என்று ஏன் அவர்கள் தீர்மானிக்கக் கூடாது? இந்த மகாநாட்டின் மூலம் ஏதாவது நன்மை ஏற்பட வேண்டுமானல், தமிழ்நாட்டு எழுத்தாளர் சங்கம் ஒன்றை இங்கு கூடியிருப்பவர்கள் ஏற்படுத்தி ஞல், அந்த நன்மையைக் கண்டிப்பாய் பெறமுடியும். எழுத்தாளர் மூலம் தமிழ் நாட்டுக்கும், தமிழ் நாட்டின் மூலம் எழுத்தாளருக் கும் அந்தச் சங்கம் வேலை செய்ய முடியும்.

—: :—


# வேல் புத்தக நிலையம்

## புதிய வெளியீடுகள்

இன்றையத் தலை சிறந்த நாவலாசிரியர்களின்
மஹோன்னதமான சிருஷ்டிகள்

பெரிய மனிதன்
—க. நா. சுப்ரமண்யம்

அறுவடை
—ஆர். ஷண்முக சுந்தரம்

மோகமுள்
—தி. ஜானகிராமன்

**வேல் புத்தக நிலையம் : சென்னை-5**

# டாக்டர் ஜீன் பிலியோஸா

டாக்டர் வே. ராகவன்

18-வது நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்தே இந்திய இலக்கியத்திலும் பண்பாட்டிலும் ப்ரான்ஸ் தேசத்தினருக்கு ஊக்கம் ஏற்பட்டிருந்தது. அன்று முதல் இன்று வரையில் ப்ரெஞ்சுப் புலவரும், சர்வ கலாசாலைகளும் இந்திய இலக்கியம், மதம், பண்பாடு முதலிய துறைகளில் பெரும் தொண்டைச் செய்திருக்கின்றன. இன்று ப்ரான்ஸ் தேசத்தில் உழைத்துவரும் இந்தியப் பண்பாட்டு ஆசிரியருள் டாக்டா பிலியோஸா முன்னணியிலிருப்பவர்; வயதில் கொஞ்சம் சிறுவராயிருந்தாலும், பலவிடங்களுக்குச் சென்று, பல ஆக்கவேலைகளை ஏற்றுக் கொண்டு, சிறந்த உழைப்பாளியாய் விளங்குபவர்.

பிலியோஸா பிறந்தது 4—11—1906. இவர் முதலிலிருந்தே இந்திய மொழிகளையோ, இலக்கியங்களையோ படித்தவரல்ல. இவர் முதலில் கல்லூரியில் படித்து பட்டம் பெற்று தொழிலிற்கு வந்தது வைத்தியத்தில். 1935-இல் தற்காலத்திய இந்திய மொழிகளுக்காக பாரிஸில் நடத்தப்படும் கலாசாலையில் சேர்ந்து, தமிழைப் படித்தார். 1946-இல் டாக்டர் பட்டம் பெற்றார்.

பின் 1936—41 ஆண்டுகளில் பாரிஸில் உள்ள பெரும் புத்தகாவயமான 'பிப்ளியோதெக் நாஷனல்' என்றதில் இந்தியச் சுவடிகளை சோதித்து வந்தார். 1937—9 ஆண்டுகளில் கிழக்கு தேச மொழிகளுக்கான ஸ்தாபனத்தில் தற்காலத்திய இந்திய மொழிகள், தமிழ் மொழி இவ்விரண்டையும் போதித்து வந்தார். பாரிஸில் ஆசியப் பண்பாட்டாராய்ச்சிக்காக நடத்தப்படும் 'ஸொஸைடி ஆசியாடிக்' என்பதற்கு 1941-இலிருந்து காரியதரிசியாய் இருந்து வருகிறார். யுனெஸ்கோவின் மேல் பார்வையில் ஸ்தாபிக்கப்பட்ட கிழக்கு தேச ஆராய்ச்சிக் கழகங்களில் பொதுச் சங்கத்திற்கும் காரியதரிசியாயிருந்து, அதை வளர்த்தார். சமீபத்தில் கம்போடியாவிற்கு அடிக்கடி சென்று அங்கே பலவாண்டுகளாய் நடந்து வரும் ப்ரெஞ்ச் ஆராய்ச்சிக் கழகத்தை, புது முறையில் நிறுவுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். இந்தியாவில் ப்ரெஞ்ச் அதிகாரிகள் ஆண்டுவந்த இடங்களை பாரதத்துடன் சேர்த்தபோது, புதுச்சேரியில் இருந்து இந்திய இலக்கியப் பண்பாடு ஆராய்ச்சிகளைச் செய்வதற்காக 'பரெஞ்ச் இந்தொலாஜிகல் இன்ஸ்டிட்யூட்' என்ற ஸ்தாபனத்தை ஏற்படுத்த அதிகாரிகள்

எண்ணியபோது, இவரையே அதற்கு தலைவராக நியமித்தனர். தாய்லண்டிலிருக்கும் சம்ஸ்க்ருதச் சுவடிகளை சோதிப்பதற்காக வும் இவரை பிரஞ்சு சர்க்கார் நியமித்தனர்.

முதன் முதலில் வைத்யம் படித்து அதில் டாக்டராய் ஆன தால் இவர் இந்தியாவின் ஆயுர்வேதத்தைப் பற்றி நூல்களையும், பல கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார். அது போலவே இந்திய ஜோதிஷத்தைப் பற்றியும் எழுதியிருக்கிறார். கிழக்கு தேசங்கள் பண்டை காலங்களில் விஞ்ஞானத் துறைகளில் எவ்வளவு தூரம் தேர்ச்சி பெற்றிருந்தன என்பதைப் பற்றி பிலியோஸா சொல் வதை பிரமாணமாய் மற்ற மேனாட்டு விஞ்ஞான ஆராய்ச்சியாளர் ஏற்கின்றனர்.

தமிழ் நாட்டிடையேயுள்ள புதுச்சேரி, காரைக்கால் இவற் றுடன் இருந்த அரசியல் தொடர்பின் காரணமாய் ப்ரான்ஸ் தேசத்தில் தமிழைக் கற்றும் ஆராய்ந்தும் வந்தனர். பிலியோஸா இன்றும் காலேஜ் தெ ப்ரான்ஸ் என்று தான் தலைவராயிருந்து வரும் கல்வி ஸ்தாபனத்தில் தமிழை போதித்து வருகிறார். தென் கிழக்கு ஆசியாவில் இந்தோ—சீன நாட்டில் முன் ப்ரெஞ்சு ராஜ் யம் இருந்து வந்ததால் தென் கிழக்கு ஆசியப் பண்பாட்டு ஆராய்ச்சியில் ப்ரான்ஸ் எப்போதுமே முன்னணியில் இருந்து வந்தது. தாய்லண்ட், கம்போடியா முதலிய விடங்களுக்குச் சென்ற இந்தியப் பண்பாட்டில் சைவத் தொடர்பும், தென்னிந் தியத் தொடர்பும் உண்டு; இத்தொடர்பை ஆராய்வதற்காகவும் தமிழ் ஆராய்ச்சியில் இவர் ஈடுபட்டார்: இவ் விஷயத்தைப்பற்றி ஒரு ஆராய்ச்சி நூலையும் எழுதிக் கொண்டிருக்கிறார். பாண்டிய மன்னரைப் பற்றி க்ரேக்க இலக்கியத்திலுள்ள குறிப்புகளை பரி சீலனை செய்து எழுதி இருக்கிறார். ஆண்டாளின் விஷ்ணு பக்தி யைப்பற்றியும், காரைக்கால் அம்மையாரின் சிவ பக்தியைப்பற்றி யும் விளக்கவுரைகளை வெளியிட்டிருக்கிறார்.

இந்திய வாராய்ச்சி முழுவதற்கும் களஞ்சியம்போல் 'லா இந்தே க்ளாஸிக்' என்றதோர், நூலை ப்ரெஞ்ச் மொழியில் தொகுத்திருக்கின்றனர். மிகவும் பயன்படுமாறு தொடுக்கப்பட்ட இந்த நூலிலும் பிலியோஸா பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்.

வரும் அக்டோபர் மாதம் ஒரிஸ்ஸாவில் புவனேச்வரத்தில் அகில பாரத கிழக்கிந்திய ஆராய்ச்சி மகாநாட்டின் 20-வது கூட்டம் நடைபெறும்; அதில் உள்ள பல பிரிவுகளில் இந்திய நாகரீகம் வெளி நாடுகளில் பரவியதின் சரித்திரத்தைப் பற்றிய பிரிவு ஒன்றும் உண்டு; அதற்கு பிலியோஸாவே தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

★

[புதுச்சேரியில் இந்தியக் கலாசார ஸ்தாபனத்தின் தலைவராகப் பணியாற்றும் ஜீன் ஃபிலியோஸா இவ்வாண்டு தமிழ் எழுத்தாளர் சங்கத்தால் பதக்கம் அளித்து கௌரவிக்கப்படுகிறார். அவர் அபிப்பிராயங்களுக்கு ஒரு உதாரணமாகப் பின் வரும் பகுதிகள் ஃபிரெஞ்சு மொழியிலிருந்து தமிழாக்கப்பட்டிருக்கின்றன.]

# தமிழும் தமிழர் பண்பாடும்

**ஜீன் ஃபிலியோஸா**

இந்தியாவைப் பார்க்க வருபவர்கள் கண்களில் முதலில் படுவது என்னவென்றால் இங்குள்ள பலதரப்பட்ட ஜனங்களும், அவர்களுடைய மாறுபட்ட பண்பாடுகளும், தனித்தனி மொழிகளும்தான். ஜனங்களையும் மாறுபட்ட பண்பாடுகளையும் பற்றி விவரித்து விவரித்து மனிதகுல விற்பன்னர்கள் (Anthropologists) ஒரு குழப்பத்தை உண்டாக்கி யிருக்கிறார்கள். ஆனால் மொழிகள் சம்பந்தப்பட்டவரையில் இந்தக் குழப்பம் இல்லை மூன்று மொழி இனங்கள் இந்தியாவில் வழக்கில் உள—இண்டோ—ஆர்யன், திராவிட, முண்டா இனங்கள் என்று இந்திய மொழிகள் எல்லாவற்றையும் பிரிக்கலாம்.

திராவிட இனத்தைச் சேர்ந்த மொழிகளிலே முக்கியமானது தமிழ்; ஒரு மிகப் பழைய பண்பாட்டையும், சிறப்பான அம்சங்களையும் வெளியிடும் மொழி அது. தமிழ் என்றாலே இனிமை என்றுதான் அர்த்தம் என்று சொல்லுகிறார்கள். இந்த மொழியிலே முக்கியமான ஒரு இலக்கியம் காணக்கிடக்கிறது. இந்த மொழியை இன்றும் சுமார் இரண்டரைக் கோடி ஜனங்கள் பேசுகிறார்கள். இந்தோ ஆர்யப் பண்பாடு சம்ஸ்கிருத மொழியாக மலர்ந்தது என்று சொல்வது போலத் திராவிடப் பண்பாடு தமிழ்மொழியாக, இலக்கியமாக மலர்ந்திருக்கிறது.

தமிழ் வழங்கும் பிரதேசங்களில் எல்லாம், சென்னை முதல் குமரி வரை தென்னிந்தியாவிலும், இலங்கையில் வடகிழக்குப் பிரதேசத்திலும், சம்ஸ்கிருத மொழியும் கௌரவிக்கப்பட்டு வந்திருக்கிறது; தமிழும் அதே சமயம் வளம்பெற்று வந்திருக்கிறது. தமிழ்ப் பண்பாட்டில் பல அம்சங்களும் சம்ஸ்கிருத மூலம் வந்தது தான் என்று சொல்ல இடமுண்டு; எனினும் இரண்டு பண்பாடுகளும் நுணுக்கமான வித்தியாசங்கள் உள்ளவையாகவே இருக்கின்றன. இலக்கணம், கவிதை, கதைகள், சட்டம், தர்க்கம், தத்துவம், மருத்துவம், சமயம், கணக்கு, வானசாஸ்திரம் என்கிற துறைகளில் எல்லாம் முன்னேறிக்

காணப்படுகிறது. பல சம்ஸ்கிருத நூல்களும் ஆரம்பகாலத்திலேயே தமிழில் கிடைக்கச் செய்யப்பட்டிருக்கின்றன. எல்லாத் துறைகளிலுமே ஒரு தொடர்பு இருந்து வந்திருப்பது தெரிகிறது. இருந்தும் ஒருவித்தியாசமும் கூடவே காணப்படுகிறது என்பதுதான் விசேஷம்.

இலக்கியத்துறைகளில் தமிழிலுள்ளதற்கு ஒப்பாகவோ, நேராகவோ எடுத்துக் காட்ட சம்ஸ்கிருதத்தில் இல்லை என்று சொல்லும்படியாகவும் பலபகுதிகள் இருக்கின்றன.

ஐரோப்பிய அறிஞர்களுக்குப் பல ஆண்டுகளாகவே, இரண்டொரு நூற்றாண்டுகளாகவே சம்ஸ்கிருத இலக்கியத்தையும் பண்பாட்டையும் பற்றித் தெரியும். இப்போது சில ஆண்டுகளாகத்தான் தென்னிந்தியப் பண்பாடு தெரியவந்திருக்கிறது என்று சொல்ல வேண்டும். அதைப் பூராவும் அறிந்து கொண்டுவிட்டதாகவும் சொல்லி விடமுடியாது. ஆராய்ச்சி செய்து முடிவுகட்ட வேண்டிய பல விஷயங்கள் தமிழிலும், திராவிட இலக்கியத்திலும், தமிழ்ப் பண்பாட்டிலும் இருக்கின்றன.

சரித்திரகாலத்துக்கு முன்னும் பின்னும் தமிழர் நாகரிகம் வளமாக இருந்து வந்திருக்கிறது என்பதற்கு ஆதாரங்கள உண்டு. சரித்திர காலத்துக்கு முந்திய விஷயங்கள் பற்றி ஓரளவு குத்துமதிப்பாகத்தான், யூகங்களாகத்தான் எதுவும் சொல்ல முடியும். ஆனால் சரித்திர காலத்துக்குப் பிந்திய ஆதாரங்கள் அசைக்க முடியாத வகையில் ஒரு திராவிடப் பண்பாட்டின் தொன்மையைக் காட்டுகின்றன. சேர சோழ பாண்டியர் என்கிற திராவிட மூன்று ராஜ்யப் பிரிவினை இந்திய சரித்திர கால ஆரம்பத்திலேயே இருந்திருப்பது தெரிகிறது. கிறிஸ்துவுக்கு முந்திய மூன்றாவது நூற்றாண்டிலிருந்து சரித்திர ஆதாரங்கள் தொடர்பாக உள. இலங்கையின் சரித்திரக் கதைகளை நம்பலாமானால் கி. மு. 5-ம் நூற்றாண்டிலிருந்தே தமிழ் சரித்திரம் தொடர்ச்சியாக இருக்கிறது என்று சொல்லலாம்.

மூன்று சங்கங்களையும் பற்றிய கதைகளைச் சரித்திரமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றாலும் அவை சரித்திர காலத்தில், இன்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே யிருந்து, தமிழர் கதைகளில் இடம் பெற்று விட்டன. மூன்றாவது சங்க காலத்து நூல்கள்தான் நமக்கு அதிகமாகக் கிடைத்திருக்கின்றன. அவற்றிலேயே லேசான சம்ஸ்கிருதக் கலப்புத் தெரிகிறது.

ஆனால் சங்ககாலத்துக் கவிதைகளிலே ஒரு புது உத்தியும், அற்புதமான நேர்த்தியான அழகுணர்ச்சியும் உள்ளடங்கிக் கிடக்கின்றதைக் காண்கிறோம். இலக்கண விதிகள் இலக்கியத்தைக் கெட்டியாகப் பிடித்திருப்பது தெரிகிறது. தீர்மானித்துத் திடம்பட்டுவிட்ட ஒரு சுவட்டிலே பாய்கின்றன. இந்தக் கவிதைகள், கடினமான பல பிரச்னைகளையும் தீர்க்கக் கூடிய வகையிலே இலக்கிய மரபுகள் அந்தக்காலத்திலேயே ஸ்திரப்பட்டுவிட்டன. சமஸ்கிருதத்தி

விருந்து மாறுபட்டுள்ள தமிழ் மொழிக் கட்டுக்கோப்புக்கு ஏற்றபடியாக அமைந்திருக்கிறது தொல்காப்பியத்தின் பல பகுதிகள்.

* * *

தமிழ் பக்திக் கவிகளுடைய பக்தியும் தத்துவமும் பொதுவாக இந்திய அடிப்படையிலேயே அமைந்து இரண்டு கிளைகளாகப் பிரிந்தன என்று சொல்லலாம். பொதுவாக வேதாந்தக் கருத்துக்களையும், பல ஜன்மங்களையும், பலதெய்வ உருவங்களையும் நம்புகிறவர்கள் பக்தர்கள். ஒருமை-பன்மை, நான்-நீ என்பதற்கு ஒரு கொள்கையையும் அவர்கள் ஏற்றுக் கொண்டனர். சங்கரரும், ராமானுஜரும் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்கள் தான்.

* * *

திருக்குறளின் சொற்கட்டு அதை மொழிபெயர்க்க முயலுபவர்களுக்குச் சவால் விடுகிறது. வேறு ஒரு இலக்கியத்திலும் கிடைக்காத ஒரு அரிய உருவ அமைதியைப் பெற்ற நூல் அது. தமிழர் பண்பாட்டைக் காட்டும் ஒரு லக்ஷிய நூலாக அதைச் சொல்லாம்.

* * *

தமிழில் ஒரு குறிப்பிட்ட காலத்தின் சமய இலக்கியத்தின் மிகச் சிறந்த உதாரணமாகக் காரைக்கால் அம்மையாரின் பாட்டுகளைச்சொல்லலாம். தமிழ் மொழி நன்கு வளம் பெற்று விட்ட காலம் அது தெய்வீகக் காதலை அடிப்படையாகக் கொண்ட தத்துவங்கள் பலவும் இந்தியாவுக்குப் பொதுவான தத்துவங்கள். அவை தமிழில் காரைக்கால் அம்மையாரின் பாடல்களில் நல்ல உருவம் எடுத்திருக்கின்றன. காரைக்கால் அம்மையாரின் பாடல்களில் சம்ஸ்கிருத கவி உருவங்கள் மலிந்து கிடக்கின்றன. தெய்வீகக் காதலை பயங்கரம், பேய் என்கிற உருவத்திலே அநுபவிக்கிற புராண காலம் அப்போழுது வந்து விட்டது.

—: :—


எழுத்தாளர் சங்கத் தலைவர்

## 'சோமு' எழுதியுள்ள நூல்கள்

கவிதைகள்
இளவேனில்

சிறு கதைத் தொகுப்புக்கள்
உதய குமாரி
மஞ்சள் ரோஜா
கேளாத கானம்
கல்லறை மோகினி
திருப்புகழ்ச் சாமியார்
மன்மத மலர்

நாவல
ரவிசந்திரிகா

'கட்டுரைகள்'
ஐந்தருவி
பிள்ளையார் சுழி


★

# தென் மொழிப்

## ஆதரவில் வெளியீடப்

ரூ.நப.

1. கற்பனைக் காடு 1-50
ராஜாஜி
2. செஞ்சொற்கவிக் கோவை
தொகுத்தவர்: டாக்டர்
ரா. பி. சேதுப்பிள்ளை 1-00
3. பிரதாப முதலியார்
சரித்திரம் 1-25
வேதநாயகம் பிள்ளை
4. சிறுகதை மஞ்சரி 1-50
தொகுத்தவர்: மீ.ப. சோமசுந்தரம்
5. புதுத் தமிழ்க்
கவிமலர்கள் 1-00
தொகுத்தவர்: திருலோகசீதாராம்
6. இளைய விஞ்ஞானமும்
நீங்களும் 1-75
எழுதியவர்: வின்பூல்
தமிழாக்கம்: பெ. நா. அப்புஸ்வாமி
7. அன்னையின் குரல் 3-00
(ஆப்ரிக்க நாவல்)
எழுதியவர்: ஆலன்பேடன்
தமிழாக்கம்: சி. ஸ்ரீநிவாசன்
8. சித்தார்த்தன் (நாவல்) 1-75
நோபல் பரிசு பெற்ற
ஆசிரியர்: ஹெர்மன் ஹெஸ்ஸே
தமிழாக்கம்: திருலோகசீதாராம்
9. கடலும் கிழவனும் 3-00
(நோபல் பரிசு பெற்ற நாவல்)
ஆசிரியர்: ஹெர்னஸ்ட் ஹெம்மிங்வே
தமிழாக்கம்: ச. து. சு. யோகியார்
10. மகாத்மா காந்தி 2-00
ஆசிரியர்: வின்ஸென்ட் ஷீன்
தமிழாக்கம்: சி. சிவசாமி
11. அரசியல அறிவு 0-75
ஆசிரியர்: எம். ரத்தினசாமி
தமிழாக்கம்: கொ. வே. ரா.
12. ஆதிமனிதன் 1-50
ஆசிரியர்: இர்விங், அன்று
கோல்ட்மன்
தமிழாக்கம்: கே. ராமராஜன்
13. தென்னிந்திய வரலாறு 2-25
(முதல் பகுதி)
ஆசிரியர்: டாக்டர். கே. கே. பிள்ளை

ரூ.நப.

14. உலக வரலாறு 2-50
ஆசிரியர்: டி. பாலசுப்பிரமணியன்
15. நீங்களும் உங்கள்
மோட்டாரும் 2-00
(மூலம்: I. L. O. வெளியீடு)
தமிழாக்கம்: எஸ். கணேசன்
16. வானக் காட்சி 2 00
ஆசிரியர்: ஆர். கே. விஸ்வநாதன்
17. கோன்—டிகி 2-00
ஆசிரியர்: தார்ஹெயர்டால்
தமிழாக்கம்: கே. எஸ். நாகராஜன்
18. தமிழ் நாட்டு வரலாறு 1-50
ஆசிரியர்: டாக்டர்
மு. ஆரோக்கியசாமி
19. சமையல் கலை 1-50
ஆசிரியைகள்: ஏ. கே ஜோஷ்வா
சி. எஸ். ரத்தினம்
20. ஆலபர்ட் ஷ்வைட்சரின்
சுயசரிதம் 1-75
தமிழாக்கம்: க. நா. சுப்ரமண்யம்
21. பத்து நாடகங்கள் 1-25
தொகுத்தவர்: மீ. ப. சோமசுந்தரம்
22. சுப்பண்ணு (நாவல்) 1-00
ஆசிரியர்: மாஸ்தி வெங்கடேச
ஐயங்கார்
தமிழாக்கம்: ஜெயலட்சுமி
ஸ்ரீநிவாசன், பி. ஜி. ஸ்ரீநிவாசன்
23. கானகத்தின் குரல் 1-50
ஆசிரியர்: ஜாக் லண்டன்
தமிழாக்கம்: பெ. தூரன்
24. குமாவும் புலிகள் 2-00
ஆசிரியர்: ஜிம் கார்பெட்
தமிழாக்கம்: தி. ஜ. ர.
25. கால யந்திரம் 1-75
ஆசிரியர்: எச். ஜி. வெல்ஸ்
தமிழாக்கம்: பெ. நா. அப்புஸ்வாமி
26. முறிந்த பாலம் 1-50
ஆசிரியர்: தோர்ண்டன் ஓயில்டர்
தமிழாக்கம்: ஆர். நடராஜன்
27. கோகொரோ 1-00
ஆசிரியர்: நாத்சுமே ஸோஸகி

# புத்தக டிரஸ்டின்

## பெற்ற தமிழ் நூல்கள்

ரூ. நப.

28. பிளேட்டோவின் சாக்ரடீஸ் 0-90
தமிழாக்கம்: ச. கு. கணபதி ஐயர்

29. கருமி (நாடகம்) 1-00
ஆசிரியர்: மாலியர்
தமிழாக்கம்: சி. ஆர். மயிலேறு

30. தேர்ந்தெடுத்த தென்மொழிச்சிறுகதைகள் 1-60

31. உடற்பயிற்சிக் கலை 1-50
ஆசிரியர்: எல். கே. கோவிந்த ராஜுலு

32. வீட்டு வைத்தியர் 1-90
ஆசிரியர்: காப்டன் என். சேஷாத்திரிநாதன்

33. பரத நாட்டியம் 2-00
ஆசிரியர்கள்: டி. பாலசரஸ்வதி
டாக்டர் வே. ராகவன்

34. இமயத்துப் புலி 2-00
ஆசிரியர்கள்: டென்ஸிங்
ஜேம்ஸ் உல்மன
தமிழாக்கம்: சக்திதாசன் சுப்பிரமணியன்

35. நாம் வணங்கும் தெய்வங்கள் 1-90
ஆசிரியர்: பி. ஆர். ஸ்ரீனிவாசன்

36. இந்திய கிராமிய நடனங்கள் 2-00
(முதல் பகுதி)
ஆசிரியர்கள்: சச்சிதானந்த வத்ஸ்யாயன், கபில வத்ஸ்யாயன்

37. சிவம் 1-65
(தமிழ் தெலுங்கு நாடகங்கள்)

38. மனிதனின் சமயம் 1-40
ஆசிரியர்: ரவீந்திரநாத தாகூர்
தமிழாக்கம்: த. ந. சேனாபதி

ரூ. நப.

39. சீன, ஜப்பான் கதைகள் 1-65

40. கதைக் கடல் 1-50
தொகுத்தவர்: டாக்டர் வே. ராகவன்

41. ஆண்டு விழா 1 65
(தமிழில் கன்னட நாடகங்கள்)

42. ஆயிரங்காலத்துக் கதைகள் 1-50
தொகுத்தவர்: கி. சந்திரசேகரன்

43. இந்திய நாடோடிக் கதைகள் 1-40

44. அடிமை 1-80
(தமிழில் மலையாள நாடகங்கள்)

குழந்தை நூல்கள்

45. பறக்கும் பாப்பா 1-50
(மத்திய சர்க்கார் பரிசு பெற்றது)
ஆசிரியர்: கல்வி கோபால கிருஷ்ணன்

46. வேடன் மகன் 1 50
(முதலிய வெளிநாட்டுக் கதைகள்)
தொகுத்தவர்: ஹெரால்ட் கூர்லாண்டர்
தமிழாக்கம்: தம்பி ஸ்ரீனிவாசன்

47. விஞ்ஞானியாக வேண்டுமா? 1 00
ஆசிரியர்: பெர்தா மாரிஸ் பார்க்கர்
தமிழாக்கம்: வி. பூவராகமூர்த்தி

48. ராஜாவும் காட்டு எருமையும் 1-00
ஆசிரியர்: ஆர். கே. நாராயண்
தமிழாக்கம்: எஸ். சாந்தலட்சுமி

49. கடற்கரையில மாலைநேரம் 1-50
ஆசிரியை: திருமதி பி. முராரி

50. முயல் குட்டி முதது 1-00
ஆசிரியர்: பியேட்ரிக்ஸ் பாட்டர்
தமிழாக்கம்: ரத்னம்

மேலே கண்ட நூல்கள் எல்லாப் புத்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும் புத்தகம் கிடைக்காவிடில் கீழேகண்ட முகவரிக்கு எழுதவும்.

**தென் மொழிப் புத்தக டிரஸ்ட்** 3, வீட்கிராப்ட்ஸ் ரோட், சென்னை-31.

# நவீன கன்னட இலக்கியம்

கி. ஸ்ரீ. வே

---

தமிழ் இலக்கியத்திற்கு கிறிஸ்தவப் பாதிரிமாரின் சேவை கிடைக்க ஆரம்பித்த காலத்திலேயே கன்னட மொழியிலும் அவர்களுடைய சேவை ஆரம்பமாகியது. நவீன கன்னட இலக்கியம் தோன்றியதே முடிவற்ற கவிதை ஓய்ந்து, கன்னட மக்கள் பிறமொழிகளைப் பற்றி அறிந்துகொள்ள ஆரம்பித்ததனால்தான். சம்ஸ்கிருதம் ஆங்கிலம் இவற்றுடன், வங்காளியிலிருந்து வந்த பங்கிம்சந்திரரின் நூல்களும் நவீன கன்னட இலக்கியத்துக்கு ஆதாரமாக அமைந்தன என்று நாம் வைத்துக் கொள்ளலாம்.

கன்னடத்தில் புது இலக்கியத்துக்கு அடிப்படை என்று மனிதனைத் தனி மனிதனாகக் கண்டு அலசிச் சொல்லுகிற போக்கைச் சொல்லவேண்டும். எழுத்தாளர்கள் எல்லோருமே தனி மனித வெறியர்களானார்கள். கவிதைகளும் கட்டுரைகளும், நாவல்களும் நாடகங்களும் தனி மனிதனை உயர்த்துவதற்கென்றே தோன்றின. இன்றைய நவீன இலக்கியத்தின் தந்தை என்று கருதப்படும் முத்தணாவின் ராமாசுவமேதத்திலே இந்தத் தனி மனித தத்துவம் ஆட்சி செலுத்துவதை நாம் காணலாம். இத்துடன் நாட்டில் ஏற்பட்ட சுதந்தர தாகமும் அரசியல், சமூக நூல்கள் பலவற்றைக் கன்னடத்துக்குத் தந்தன. இவற்றில் பெரும்பாலானவை தழுவி எழுதப்பட்ட நூல்கள்; சில சொந்தக் கற்பனைகளும் இல்லாமல் இல்லை. 1920 வாக்கிலே எழுந்த இவ்விழிப்பு சிறப்பாக பண்டித தாராநாத்தின் குருகுலம், பத்திரிகை இவற்றில் உருவெடுத்தது. பின்னர் பிரசித்தமான பல கன்னட சிருஷ்டி கர்த்தாக்கள் இவருடன் சம்பந்தப்பட்டு, மனப்பண்பு பெற்றவர்கள்தான். கதை, கட்டுரை, கவிதை, பிரயாண நூல்கள், நாடகம், வேதாந்த சர்ச்சை, விமரிசனம் முதலிய பல துறைகளில் 'பிரேமா' வரிசை நூல்கள் வெளிவந்தன.

தாராநாத்தின் சுதந்திரக் கிளர்ச்சியுடன் சேர்த்துச் சொல்லவேண்டிய விஷயம் கர்நாடகத்தில் சுவாமி ராமகிருஷ்ணரிடமும் பின்னர் அரவிந்தரிடமும் ஏற்பட்ட பக்தியும் தாகமும்.

நவீன கன்னட இலக்கியத்தில் குறிப்பிட வேண்டிய பெயர் ஸ்ரீ ஆலூர் வெங்கடராயர். ஆரம்பத்தில் இவர் மில், ஸ்பென்சர் முதலியவர்களை மொழி பெயர்த்தார். பிறகு பாழடைந்த விஜய நகரக் காட்சியை இவர் கண்டபோது வித்யாரண்ய தரிசனம் ஏற்பட்டது. அதன் பயனாக கர்நாடக இலக்கிய இதிஹாஸங்களை ஆராய்வதில் ஈடுபட்டு 'கன்னட கத வைபவம்' என்கிற நூலை வெளியிட்டார். கர்நாடக அன்னையின் மஹோன்னதமான பழைய வாழ்வையும், பின்னர் ஏற்பட்ட தாழ்வையும் விஸ்தாரமாக வருணிக்கிற நூல் இது. அதை கன்னட இலக்கியத்தில் ஒரு மைல் கல் என்று சொல்லலாம் ஒரு புதிய திருப்பத்துக்கு ஆதாரமாக அமைந்தது அந்நூல்.

சுவாமி விவேகானந்தரது கொள்கைகளினால் பாதிக்கப்பட்டு இலக்கியம் செய்தவர்களில் ஸ்ரீ 'குவெம்பு' என்கிற டாக்டர் கே. வி. புட்டப்பா

வைச் சிறப்பாகச் சொல்ல வேண்டும். இயற்கை யன்னையின் புகழைப் பாடி இவர் கன்னட மொழிக்காரர்களின் கவனத்தை இழுத்தார். சித்ராங்கதா, பஞ்ச சன்னியம் முதலிய இவருடைய ஆரம்பகாலக் காவியங்களே பலரையும் கவர்ந்தன. தொடர்ந்து கணக்கற்ற நூல்களை—காவியம், கட்டுரை, ஜீவியம், வேதாந்த விசாரம், விமரிசனம் முதலிய துறைகளில் எழுதித் தனக்கென்று ஒரு சிறப்பான ஸ்தானத்தை நவீன கன்னட இலக்கியத்தில் ஏற்படுத்திக் கொண்டு விட்டார். கலைஞராக அவரை முதல்வராகச் சொல்லலாம். அழகு என்கிற தனி உலகத்தில் தனி மனிதனின் ஆத்மா பிரயாணம் செய்வதை அவர் தன கவிதைகளில் அழகாக நமக்கு வடித்தெடுத்துத் தருகிறார்.

இவரைப்போலவே மலைநாட்டு, தென் கன்னடச் சீமையை விதவிதமான பல கோணங்களிலிருந்தும் கண்டு சித்தரித்திருப்பவர் கே. சிவராம காரந்த். அநேக சிறு கதைகளும் நாவல்களும் எழுதியிருக்கிறார். மீண்டும் மண்ணுக்கே என்கிற இவருடைய நாவல் சிறந்ததொரு நாவலாகும்.

தார்வார் சீமையைச் சேர்ந்த டி. ஆர். பேந்தரே என்பவரும் கன்னட இலக்கியத்தில் ஒரு முக்கியமான சிருஷ்டிகர்த்தா. பிரபலமான கவிஞர். இவருடைய மேதையினால் கன்னட கவிதை புதியதொரு உருப்பெற்றது. சொல்வமைதியை அதிகமாக இவர் கவிதைகளிலே காணலாம். பட்சி பறக்குது, கூத்தாடுவோம் வாரீர் என்கிற கவிதைத் தொகுதிகள் இவரை சர்வ ரஞ்சன கன்னடக் கவிஞராக கன்னட உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தன அத்யாத்ம நோக்கும், ரஸபாவமும், லயஞானமும் இவரது தனிச் சிறப்புகள். மாஸ்தி வேங்கடேச அயயங்கார் இவரை ஒரு பாம் பாட்டிக்கு ஒப்பிட்டுக் கூறுவது எத்தனை பொருத்தமானது என்பது இவர் கவிதைகளைப் படித்தவாகளுக்குத் தெரியும். பேந்த்ரேயைப் பின்பற்றி எழுதிய பல கவிகளால் கன்னட இலக்கியம் வளம் பெற்றிருக்கிறது. உதாரணமாக வி. சீதாராமையா, நரஸிம்மமூர்த்தி இவர்களைக் கூறலாம்.

கன்னட இலக்கியத்தில் மாஸதி வெங்கடேச அய்யங்காரை அறியாதவர் யார்? கன்னட இலக்கியத்தின் தனிப்பெருந் தலைவர் அவர். சிறுகதை மறுமலர்ச்சியிலேயும், பெருமளவு மற்ற இலக்கியத் துறைகளிலும் பங்கு பெற்றவர் அவர். ஸ்ரீனிவாஸ என்கிற புனை பெயரில் அவர் எழுதி வந்த சிறு கதைகள் கன்னட இலக்கியத்தில் ஒரு புது சகாப்தத்தைச் சிருஷ்டித்த . காவியங்கள், கவிதை நாடகங்கள் எழுதியிருக்கிறார். 'சுப்பண்ணா' என்கிற அவருடைய சிறு நாவல் பிரசித்தமானது. புத்தரது வாழ்வை அடிப்படையாக வைதது 'யசோதா' என்ற காவிய நாடகத்தை எழுதியுள்ளார். ராமாயணத்தை எளிய கவிதையாக அவர் இசைத்துள்ளார்; சமீபத்தில் அவர் எழுதிய சென்ன பசவ நாயகக என்கிற சரித்திர நாவல் மைசூர் ராஜ்யத்தைப் பலகைப் புலனைக் கொண்டது, சிறப்பான நாவல் அது.

பேந்த்ரே அவர்களும் வேறு சில நண்பர்களுமாக நடத்திய ஜயகர் நாடகாவை, தமிழ மணிக்கொடிக்குச் சமமாகச் சொல்லலாம் இலக்கிய சரிதத்திலேஅது ஒரு சிறப்பான மாறுதலுக்கும் காரணமாக அமைநதது. 'ஆனந்த குமரன்' என்கிற புனை பெயரில் பல நாவல்கள், கவிதைகள் எழுதிப் புகழ்பெற்ற பெடகோரி கிருஷ்ணசர்மா என்பவர் ஜயகர்நாடகாவில் பேந்த்ரேக்கு உதவி செய்தார். ஆனந்தகுமரன் நாவல்களில் பல கர்நாடக சரித்திரத்தை அடிப்படையாகக் கொண்டவை. அவரே பின்

னர் 'ஜயந்தி' என்கிற பத்திரிகை நடத்தி கன்னட இலக்கியத்துக்கு வளம் செய்து தந்தவர். கோகாக், இனும்தார், மூகளி, ஜாகீர்தார் போன்ற பல கன்னட இலக்கியப்புகழ் பெற்ற கலைஞர்கள் ஆனந்தகுமாரனுக்கு ஜயந்தியில் உதவி செய்தனர். கோகாக் கவிதை, கட்டுரைகள் எழுதிப் புகழ் பெற்றவர். ஒரு நாவலும் எழுதியிருக்கிறார். இனும்தார் எழுதியவற்றில் கனவு மாளிகையையும், சாபம் என்பதையும் கன்னட வாசகர்கள் மறக்கவே மாட்டார்கள்; அற்புத சிருஷ்டிகள் அவை. சங்கரபட்டரின் வால நக்ஷத்திரம் என்கிற நாவலும் சிறப்பானதொரு நாவல் விரஸமான விஷயங்களையும் நாஸுக்காகச் சொல்லுவதிலே கை தேர்ந்தவர் அவர். 1930 முதல் 1940 வரையில் ஒரு பத்து ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான சிறுகதைகளும் ஏராளமான. நாவல்களும் எழுதப்பட்டன.

இந்த நாவலாசிரியர்களிலே ஆ. நா. கிருஷ்ணராவை கன்னட வாசகர்களுக்கு மிகவும் உகந்த ஆசிரியராகச் சொல்லலாம். அவருடைய உதய ராகத்தையும் ஸந்தியா ராகத்தையும் படிக்காதவர்களே இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அவர் இப்போது சற்றேறக் குறைய நூறு நாவல்கள் எழுதிக் குவித்துள்ளார். எல்லாம் ஒரே தரத்தவை என்று சொல்ல இயலாது. எழுத்து வன்மை, நடைக் கவர்ச்சி—இவற்றுடன் ஒரு யதார்த்த வாதமும் இவருடைய தனிச் சிறப்பியல்புகள். சாதாரண மக்கள் வாழ்வையும், கீழ்த்தரமான வாழ்வையும் இலக்கியப் பலகணி மூலம் காட்டியிருக்கிறார் என்று நாம் பொதுவாகச் சொல்லலாம். நக்ன ஸதயம — நிர்வாண உண்மை என்கிற ஸோலாவைப் பின்பற்றும் நாவல் போன்ற தனது நாவலால் ஆ.நா. கிருஷ்ணராவ் கன்னட இலக்கிய உலகை ஒரு கலக்குக் கலக்கினார். கர்நாடகக்கலைஞரான ஸ்ரீ வரதாசாரியாரை உருவகப்படுத்தி அவர் எழுதிய ஸ்ரீ சார்வபௌமன என்கிற நாவலும் பல கோணங்களிலிருந்து விவாதித்து அலசப்பட்டது.

1940க்குப் பிற்பட்ட காலத்தில் குறிப்பிடுவதற்குக் கன்னட இலக்கியத்தில் புதுசாக ஒன்றுமில்லை. பழைய பெயர்களே பழைய வெற்றிகளைத் தொடர்ந்து நடத்தினார்கள். பின்னர் ஒரு பத்து வருஷங்களுக்குப் பிறகு 1950 முதல் 1958 வரையில் உள்ள ஆண்டுகளை மலிவுப் பதிப்புகள் காலம் என்று சொல்லலாம். அவலையும் அரிசியையும்விட, உமி அதிகமாகக் கலந்து எழுத்தாகி வந்த காலம் இது. புதுசாக எழுந்த பல இளைஞர்களின் நோக்கு இன்னமும் நிர்த்தாரணமாகிவிட்டதாகச் சொல்ல முடியாது. அவர்களுடைய இலக்கிய சேவையும் போக்கும் இதுதான் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாதபடி இருக்கிறது.

நாடகம், நாவல், கதை, கவிதை எழுதிய ஆசிரியர்களில் பலரும் கன்னடத்தில் நாலு துறைகளிலுமே எழுதி வெற்றி பெற்றிருக்கிறார்கள். பழைய பெயர்களுக்கு ஈடாகச் சொல்ல புது பெயர்கள் எதுவும் தோன்றவில்லை என்று சொல்ல முடியாது. காலம்தான் இந்தப் புதுப் பெயர்களில் எது எது முக்கியமானது என்று நமக்குச் சொல்ல முடியும். மொத்தத்தில் நவீன கன்னட இலக்கியத்தின் பொற்காலம் என்று 1920 முதல் 1935-க்குட்பட்ட காலத்தைச் சொல்லலாம். அளவில் இன்று இலக்கியப் பணி அதைவிட அதிகமே. தரத்தில் எப்படி என்பது நிர்ணயமாக இன்னும் சில வருஷங்கள் ஆகலாம்.

ஆனால் நவீன கன்னட இலக்கியத்தின் எதிர்காலம் மகோன்னதமாக இருக்கும் என்பதில் சந்தேகத்துக்கிடமில்லை.

[தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் துணைத் தலைவர்களிலே மயிலை சீனி. வேங்கடசாமி ஒருவர். தமிழில் பல ஆராய்ச்சி நூல்கள் எழுதியுள்ளார். அந்த விஷயங்களில் அவை போன்ற வேறு நூல்கள் தமிழிலேயே கிடையாது என்றுதான் சொல்ல வேண்டும். தமிழில் அவசியமான ஒரு தேவையை வற்புறுத்தும் இந்தக் கட்டுரை தமிழ் எழுத்தாளர் சங்க இதழுககாக மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் அன்புடன் எழுதியளித்தது.]

# எழுத்தாளரும் அங்கதமும்

*மயிலை. சீனி. வேங்கடசாமி*

---

எழுத்தாளன் ஏந்திய எழுதுகோல், போர்வீரன் ஏந்திய போர்வாளைவிட ஆற்றல் வாய்ந்தது என்று கூறுவர். ஆம், அது உண்மைதான். வாள் வீரனுடைய போர்வாளைவிட எழுத்தாளனுடைய எழுதுகோல் ஆற்றலும் வலிமையும் வாய்ந்தது என்பதில் ஐயம் இல்லை. எழுத்தாளன், தன் சீரிய கருத்துக்களை எழுத்தில் அமைத்து அதை ஜனங்களின் கருத்தாக உருவாக்குகிறான்; பொதுஜன அபிப்பிராயத்தை உண்டாக்குகிறான். எழுத்தாளன் எழுதுகிற கதை, கட்டுரை, நாடகம், செய்யுள் முதலியவைகளில் அவனுடைய கருத்துக்கள் அமைந்து அவையே பொதுஜன அபிப்பிராயமாக உருவடைகிறது. எழுத்தாளனுடைய எண்ணங்களும் கருத்துக்களும் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுமானால் அதுவே எழுத்தாளனுடைய வெற்றியாகும். எழுத்தாளன் கருதிய கருத்து நாட்டுமக்களின் கருத்தாக அமையுமானால், அவன் செய்யக் கருதிய கருத்து எளிதில் செயற்படுகிறது. ஆனால், எழுத்தாளன் நாட்டுக்குத் தேவையான கருத்தைத் தரவேண்டும். அப்போதுதான் அக்கருத்து ஏற்றுக்கொள்ளப்படும். நாட்டுக்கு ஒவ்வாத கருத்துக்களைக் கூறினால் அதனை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். வாசகர்களின் பகுத்தறிவு கொள்ளத் தக்கதையும், தள்ளத்தக்கதையும் எடைபோட்டு அறியும் ஆற்றல் வாய்ந்தது. வாசகர்கள், எழுதும் ஆற்றல் இல்லாதவர்களாக இருக்கலாம்; ஆனால், அவர்களின் நுண்ணறிவு நல்லது கெட்டதை ஆய்ந்தறியும் ஆற்றல் உடையது. எனவே எழுத்தாளன் எதை எழுதினாலும் அவற்றை எல்லாம் பொதுமக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது தவறு. எழுத்தாளனுடைய எழுத்துக்கள் ஏற்கத்தக்கதாக இருந்தால் மட்டும் அதனை வாசகர் ஏற்றுக்கொள்வார்கள்; ஏற்காதவற்றைத் தள்ளி விடுவார்கள்.

நாட்டின் நலனுக்கு வேண்டியவை எவை என்பதை அறிந்து அவற்றை எழுத்தாளன் எடுத்துக் காட்டினால் அவற்றைப் பொது மக்கள் வரவேற்றுத் தங்கள் அபிப்பிராயமாகக் கொள்கிறார்கள். இவ்வாறு எழுத்தாளனுடைய கருத்து பொதுஜன அபிப்பிராய மாக உருவடைகிறது. அதனால் எழுத்தாளன் கருதிய எண்ணம் நிறைவேறுகிறது.

மேல்நாடுகளிலே கதைகள் மூலமாகவும், நவீனங்கள் மூல மாகவும் கட்டுரைகள் மூலமாகவும் கவிதைகள் மூலமாகவும் எழுத்தாளர்கள் தமது கருத்துக்களைப் பொதுஜனக் கருத்தாக உருவாக்கியுள்ளனர். அவர்கள் புரட்சிகரமான கருத்துக்களையும் சீர்திருத்தங்களையும் தமது நூல்களில் எழுதிப் புகழ்பெற்றிருக் கிறார்கள். நமது நாட்டிலே அத்தகைய நூல்களை எழுதிய எழுத் தாளர் மிகச் சிலரே.

மக்கள் சமூகத்தில் காணப்படுகிற தீமைகளையும் கொடுமை களையும் அநாகரிகங்களையும் தவறுகளையும் சுட்டிக்காட்டி சமூக வாழ்க்கையைத் தூய்மைப்படுத்த வேண்டியது எழுத்தாளன் கடமையாகும். அரசியல் அதிகாரங்களில் காணப்படுகிற குற்றங் குறைகளையும் எடுத்துக்காட்டி சீர்திருத்த வேண்டியதும் எழுத் தாளன் கடமையாகும். அரசியல் சமூக இயல்களில் காணப்படு கிற குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி நல்ல வளர்ச்சிக்கு வழி காட்டுகிறவனே சிறந்த எழுத்தாளன் ஆவான். மக்கள் சமூகத்தி லும் அரசியல் அதிகாரத்திலும் காணப்படுகிற பழக்க வழக்கங்களையும் செய்முறைகளையும் எடுத்துக் கூறி அவற் றைப் போக்க வழிதேடாமல், அவற்றைப் பொதுஜனங் களுக்கு எடுத்துக்காட்டாமல், எழுத்தாளன் காதற் கதைகளை மட்டும் எழுதிக் கொண்டு காலந்தள்ளுவானாகில், அவ னுடைய எழுதுகோல் எந்தவிதத்தில் போர்வாளைவிட வலிமை வாய்ந்ததாக இருக்க முடியும்? அது பேடி கை வாள் போலப் பயனற்றதாக அன்றோ இருக்கும்!

எழுதும் ஆற்றல் பெறுவது கடினமானது. அவ்வாற்றலைப் பெற்ற எழுத்தாளன் தன் ஆற்றலினால் பொதுமக்களின் கருத்தை உயர்த்த வேண்டும். அப்போதுதான் அவனுடைய எழுதுகோல் போர்வாளைவிட ஆற்றல் மிக்கதாகக் கருதப்படும். எழுதும் ஆற்றலைப் பொதுமக்களின் தொண்டாகப் பயன் படுத்தாமற் போனால், அவ்வாற்றலைப் பெற்றதனால் ஏற்பட்ட நன்மைதான் என்ன? எழுத்தாளன் தனக்குப் பிடித்த ஏதோ அரசியல் கட்சி அல்லது சமூக இயல் கட்சிகளைச் சார்ந்தவனாக இருக்கலாம். ஆனால் எழுதும்போது, தனது கட்சிகளை மறந்துவிட்டு பொது மக்களின் தொண்டன் என்கிற முறையில் எழுதித் தன் எழுத் ததைப் பல்லோருக்கும் பயனுள்ளதாக்க வேண்டும்.

மக்கள் சமூகத்தைத் தூய்மை செய்து அதனை மேன்மேலும் உயர்த்த வேண்டுவது எழுத்தாளனுடைய கடமை யாகும். தொல்காப்பியம் என்னும் பழைய இலக்கண நூலிலே இந்தக் கடமை கூறப்படுகிறது. சமுதாயத்தில் காணப்படும் குற்றங் குறைகளை எடுத்துக் காட்டிச் சீர்திருத்துவதை அங்கதம் என்று கூறுகிறது தொல்காப்பிய இலக்கணம். அங்கதத்தைச் செம் பொருள் அங்கதம் என்றும் பழிகரப்பு அங்கதம என்றும் இரண்டு பிரிவாகக் கூறுகிறது. செம்பொருள் அங்கதம் என்பது குற்றங் குறைகளை வெளிப்படையாக எடுத்துக் காட்டுவது. பழி கரப்பு அங்கதம் என்பது குறைபாடுகளை மறைமுகமாக எடுத்துக் காட்டுவது. அங்கதத்தை ஆங்கிலத்தில் Satire என்பர். அங்கதங் களைச் செய்யுளாகப் பாடவேண்டும் என்று தொல்காப்பியம் கூறு கிறது. வசன இலக்கியம் முதலிடம் பெற்றுள்ள இந்தக் காலத் தில் அங்கதத்தை வசனமாகவும் எழுதலாம். சிறு கதை, நாவல், கட்டுரை, செய்யுள் முதலியவைகளில் அங்கதம் எழுதி சமூக வாழ்க்கையிலும் அரசியல் அதிகாரத் துறையிலும் காணப்படும் குற்றங் குறைகளையும் ஒழுக்க ஈனங்களையும் எடுத்துக் காட்ட லாம். ஆனால், குற்றங்கூறி அவமதிக்க வேண்டும் என்றும் எண் ணம் இல்லாமல் திருத்தவேண்டும் என்றும் கருத்தோடுமட்டும் அங்கதம் அமையவேண்டும். அங்கதம் வேறு; நையாண்டி வேறு. இரண்டையும் ஒன்றாகக் கொள்ளக்கூடாது. அங்கதம் என்பது குறைபாட்டை நீக்கி உயர்த்த வேண்டும் என்னும் கருத்தை யுடையது நையாண்டி என்பது பிறரைத் தூற்றி இழிவுபடுத்தும் கருத்துடையது. ஹாஸ்யம் என்னும் நகைச்சுவை இவற்றில் வேறு பட்டது. விநோதமாக நகைத்துப் பொழுது போக்குவது நகைச் சுவையாகும்.

இக்காலத்தில் எழுத்தாளர்கள் அங்கதத்தை அறவே மறந்து விட்டார்கள். சிறு கதை, நாவல், நாடகம் எல்லாம் பெரும்பாலும் வாலிபர்கள் படித்து மகிழும் காதற்கதைகளாக உள்ளன. சுதந் தரம் பெற்றுள்ள நமது நாட்டில் அரசியல் அதிகார உத்தியோகத் துறைகளிலும் சமூக வாழ்விலும் வியாபாரம் பொருளாதாரம் பழக்க வழக்கம் சமயம் ஆசாரம் முதலிய எல்லாத் துறையிலும் தீவிரமான மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த மாறுதல்கள் அதிக வேகமாகப் போய்க்கொண்டிருக்கின்றன. இந்தத் தீவிர மாறுதல்களில் நன்மைகளும் உண்டு, தீமைகளும் உண்டு. தீமைகள் நிலைகொள்ளுமானால் பேராபத்தாக முடியும். தீமைகளை யறிந்து, அவற்றைப் பொதுமக்களுக்கு எடுத்துக்காட்டி அங்கதம் எழுத வேண்டிய காலம் இது. இதனைச் செய்யவேண்டு வது எழுத்தாளரின் கடமையல்லவா?

இக்காலத்தில் காணப்படுகிற குற்றங் குறைகளையும் தப்புத் தவறுகளையும் மோச நாசங்களையும் மக்கள் வெளிப் படையாகவே பேசுகிறார்கள் இவை யெல்லாம் செம்மையாக்

கப்பட வேண்டும் என்று கருதுகிருர்கள். இக் கருத்துக் களை எழுத்தாளனுடைய எழுதுகோல் உருவாக்க வேண்டும். ஆனல் இக்காலத்து எழுத்தாளன் இவைகளை எழுதத் தயங்குகிருன். மக்கள் வாழ்க்கையிலே, சமூகச் சூழலிலே, அரசினர் ஆட்சியிலே, அலுவலகங்களிலே, பழக்க வழக்கங்களிலே, பொதுஜன வாழ்க்கையிலே, வாணிகத் துறையிலே, தொழில்பகுதியிலே, காவல் நிலயங்களிலே இன்னும் பலப்பல துறைகளிலே காணப்படுகிற ஊழல் நோய்களையும் தீமைச் செயல்களையும் ஏமாற்றுமுறைகளையும் சுட்டிக்காட்டி, அவற்றை நேர்மைப்படுத்த எழுத்தாளன் அங்கதம் எழுதவேண்டிய காலம் இது. இக்காலத்தில் இந்த நோய்கள் பலவிதமாகப் பரவிக்கொண்டிருக்கின்றன. இந்நோய். சமூகத்தில் பெரு நோயாகித் தீராத துயரமாவதற்கு முன்னே எழுத்தாளன் தனது எழுதுகோலை—போர்வாளை விட ஆற்றல் பெற்ற எழுதுகோலை—பயன்படுத்தாமல இருப்பது பெருந்தவறு அல்லவா? வயிற்றுப் பிழைப்புக்காக மட்டும் எழுத்தாளன் எழுதுகோலைப் பிடிப்பது, கடமையைத் செய்யத் தவறிய தாகும்.

எழுத்தாளன் கதை எழுதட்டும், கட்டுரை எழுதட்டும், செய்யுள் இயற்றட்டும், நாடகம் எழுதட்டும்; வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனல், அவற்றில் அங்கதம் அமையவேண்டும். மனிதர் உடலிலே தோன்றுகிற நோயை மருத்துவர் தீர்க்கவேண்டும் மனிதச் சமூகத்திலே காணப்படும் தீமை நோய்களை எழுத்தாளன் தீர்க்கவேண்டும். அங்கத எழுத்தாளர் இப்போது நாட்டுக்குத் தேவை; மிகமிகத் தேவை. இக்காலத்தில் பத்திரிகைகளுக்கும் வெளியீடுகளுக்கும் கணக்கில்லை. எழுத்தாளர்களுக்கும் கணக்கில்லை. ஆனல், அங்கதம் எழுதிப் பொதுஜனத் தொண்டு செய்யும் பத்திரிகைகளையும் எழுத்தாளரையுந்தான் காண முடியவில்லை.

**மயிலை சீனி. வேங்கடசாமி**

*எழுதியுள்ள நூல்கள்*

**கிறித்தவமும் தமிழும்**
**பௌத்தமும் தமிழும்**
**சமணமும் தமிழும்**
**தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்**
**நந்தி வர்மன்**
**பௌத்தக் கதைகள்**
**மறைந்துபோன தமிழ் நூல்கள்**

*முதலியன.*

# பாராட்டு

இவ்வாண்டு, தமிழ் எழுத்தாளர் சங்க மகாநாட்டுக் கேடயங்கள் தமிழ்ப் பத்திரிகைக்கும் எழுத்துக்கும் சிறப்பாகச் சேவை செய்து மறக்க முடியாத ஒரு தனி இடத்தைத் தனக்கென்று தமிழர் உள்ளத்தில் சிருஷ்டித்துக்கொண்ட

**திரு. டி. எஸ். சொக்கலிங்கத்துக்கும்**

தமிழ்க் கவிதைகளைத் துருவித் துருவி ஆராய்ந்து இலக்கிய அனுபவத்தை ஒரு மதமாகவும், கம்பன் புகழைச் சொல்வதையே மூச்சாகவும் கொண்டு வாழ்ந்துவரும்

**திரு. பி. ஸ்ரீ ஆசார்யாவுக்கும்**

அளிக்கப்பெறுகின்றன.

தமிழ் எழுத்தாளர் சங்கப் பாராட்டுப் பதக்கங்கள் ஆங்கிலத்திலும் வங்காளத்திலும் வேறு தனக்குத் தெரிந்த பல்வேறு மொழிகளிலும் தமிழுக்கு உரிய ஸ்தானத்தைப் பெற்றுத் தரப் பாடுபட்டு, தமிழ் அன்பால் 'நன்னெறி முருகன்' என்று பெயர் சூட்டிக்கொண்ட

**டாக்டர் சுநீதி குமார் சட்டர்ஜிக்கும்**

பிரபலமான இந்திய விஷய ஆராய்ச்சி விற்பன்னரும், புதுச்சேரியிலுள்ள இந்திய கலாசார ஸ்தாபனத் தலைவரும், தமிழபிமானியும் ஆராய்ச்சியாளருமான

**டாக்டர் ஜீன் ஃபிலியோஸாவுக்கும்**

அளிக்கப்பெறுகின்றன.

இந்த நான்கு அறிஞர்களையும் சங்க ஏழாவது மகாநாட்டிலே கௌரவிப்பதில் தமிழ் எழுத்தாளர் சங்கம் பெருமிதம் கொள்ளுகிறது.

# தமிழ் எழுத்தாளர் சங்கம்
## 1959-ஆண்டு நிர்வாகிகள்

—:o:—

| | |
|---|---|
| தலைவர் : | திரு. மீ. ப. சோமசுந்தரம் |
| துணைத் தலைவர்கள் : | ,, சாமி. சிதம்பரனார் |
| | ,, ஏ. ஜி. வேங்கடாச்சாரி |
| | ,, மயிலை. சீனி. வேங்கடசாமி |
| | ,, கா. அப்பாத்துரை |
| பொதுச் செயலாளர் : | ,, அழ. வள்ளியப்பா |
| துணைச் செயலாளர்கள் : | ,, டி. எஸ். கிருஷ்ணமூர்த்தி ('ஸ்ரீரஞ்சனி') |
| | ,, கோமதி ஸ்வாமிநாதன் |
| பொருளாளர் : | ,, ந. சிதம்பர சுப்ரமண்யன் |

செயற்குழு அங்கத்தினர்கள் :

திருவாளர்கள் :
கண். முத்தையா
அப்துல் வஹாப்
ப. ஜீவானந்தம்
டி. கே. ஷண்முகம்
எச். வைதயநாதன்
க. நா. சுப்ரமண்யம்
கே. ஆர். கல்யாணராமன் ('மகரம்')
வ. விஜயபாஸ்கரன்
சோ. சிவபாதசுந்தரம்
ஹ. ஜயராமன
சி. சு. செல்லப்பா
ரங்க. துரைவேலன்
எஸ். கே. ராமன் ('மாயாவி')
அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்

திருமதி. குகப்ரியை

ஏழாவது மகாநாட்டுவரவேற்புக் குழுத் தலைவர்
திரு. சோ. சிவபாதசுந்தரம்

பாரதி - மகாநாட்டு இதழ் தயாரிப்பு.
க. நா. சுப்ரமண்யம்
கே. ஆர். கல்யாணராமன், அழ. வள்ளியப்பா
டி. எஸ். கிருஷ்ணமூர்த்தி

---

ஆசிரியர் : அழ. வள்ளியப்பா, துணை ஆசிரியர் : டி. எஸ். கிருஷ்ணமூர்த்தி;
வெளியிடுபவர் : அழ. வள்ளியப்பா, தமிழ் எழுத்தாளர் சங்கம், இளம்பிறைச் சங்க கட்டடம், மவுண்ட்ரோடு, சென்னை-2
அச்சிடுபவர் : எம். ராமநாத ராவ், சென்டிரல் பிரஸ், 97, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5

இப்பொழுது நடைபெறுகிறது

எம். எம். புரொடக்ஷன்ஸ்

# அல்லி பெற்ற பிள்ளை

தமிழ் எழுத்தாளர் சங்கத்துக்கு
எங்கள் வாழ்த்துக்கள்

★

எம். எம். புரொடக்ஷன்ஸ்,
2, சிங்கார முதலித் தெரு,
சென்னை-17

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.





டாக்டர்
சுநீதிகுமார் சட்டர்ஜி

டாக்டர்
ஜீன் ஃபிலியோஸா



லிப்டன்
லாவோஜி
டீ




சிறப்பின்
சிகரம்

சிக்கனத்தின்
சின்னம்

இது 1 பவுண்ட், கால் பவுண்ட்
மற்றும் அரைக்கால்
பவுண்ட்களிலும் கிடைக்கும்

LLC-1 TM

Mahamahopadhyaya Dr. U. V. Swaminatha Iyer Library

Wrapper Printed at Commercial Printing & Publishing House, Madras-1.